# தமிழியல்

# JOURNAL OF TAMIL STUDIES

## October 2015

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

திருவள்ளுவர் ஆண்டு 2046, மன்மத, புரட்டாசி - ஐப்பசி


INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

Tharamani, Chennai - 600 113. Tamil Nadu, India.

ISSN No. 0022-4855 Vol. No.90 Issue : October 2015

# INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

## Board of Governors

## OCTOBER 2015


CHAIRMAN

**Thiru. K.C. VEERAMANI**

Hon'ble Minister for School Education, Tamil Official Language, Archeology and Tamil Culture, Govt. of Tamil Nadu

**VICE-CHAIRMEN**

**Dr. M. Rajaram, I.A.S**

Secretary to Government
Tamil Development and Information Department, Govt. of Tamil Nadu.

**Vice-Chancellor**
University of Madras, Chennai.

**Vice-Chancellor**
Annamalai University, Annamalai Nagar.

**Vice- Chancellor**
Madurai Kamaraj University, Madurai.

**Vice-Chancellor**
Tamil University, Thanjavur.

**MEMBERS**

**SECRETARY TO GOVERNMENT**
Finance Department, Govt. of Tamil Nadu.

**Dr. F. GROS**
Former Director, French Institute of Indology, Pondicherry (IATR-Representative).

**DIRECTOR**
Central Institute of Indian Languages, Mysore.

**MEMBER SECRETARY**

**Dr. G. Vijayaraghavan**
Director, International Institute of Tamil Studies, Chennai.

# தமிழியல்

# JOURNAL OF TAMIL STUDIES

## OCTOBER 2015

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

திருவள்ளுவர் ஆண்டு 2046, மன்மத, புரட்டாசி - ஐப்பசி

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
**Tharamani, Chennai - 600 113. Tamil Nadu, India.**
www.ulakaththamizh.org.in/E-mail : iits@tn.nic.in Phone: 22542992, 22542781/ Fax: 22541436

**ISSN No. 0022-4855 Vol. No. 90 Issue: October 2015**

# BOARD OF EDITORS

**Dr. G.L. HART**
Dept. of South and South East Asian Studies, University of California (Retd.), U.S.A.

**Dr. A. VELUPILLAI**
Former Professor of Tamil, University of Jaffna, Srilanka.

**Dr. S.N. KANDASAMY**
Former Professor of Tamil, Tamil University, Thanjavur.

**Dr. Pon. KOTHANDARAMAN**
Former Vice-Chancellor, University of Madras, Chennai.

**Dr. G. VIJAYARAGHAVAN**
Editor-in-Chief

**Dr. B. RAJA**
Associate Editor

Editorial Board
**Dr. P. SELVAKUMAR**
**Dr. A. THASARATHAN**
**Dr. M.J. RABI SINGH**
**Kalaimamani MARAIMALAIYAN**

**தமிழியலில்** இடம்பெறும் கட்டுரைகளின் கருத்துகளுக்குக்
கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பு ஆவர்.

Articles in the **Journal of Tamil Studies** do not necessarily represent either the views of the International Institute of Tamil Studies or those of the Board of Editors

# CONTENTS


Chief Editor's Note 1

01. மறைதிரு. பி. பெர்சிவல் (Rev. Peter Percival) (1803-1882)
*செ. துளசிராமன்* 2

02. தி. சௌரிப்பெருமாள் அரங்கனார் *ஆ. தசரதன்* 5

03. Poet Bharati - The National Bard of India Who sought to declare Indian Independence *G. Balasubramanian* 8

04. Potsherd with Tamil&Brahmi scripts found in Oman
*T. S. Subramanian* 12

05. Land Measuring rods of Tiruccirāpaḷḷi District (500-1300 C.E.)
*R. Akila, M. Nalini, R. Kalaikkovan* 16

06. போர்க் கலை "எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்" கிரேக்கமும் சங்க இலக்கியமும் *த.புகழேந்தி* 21

07. Tamil Scholars from Overseas 30

08. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் திருச்சியில் கண்டுபிடிப்பு
*இரா. கலைக்கோவன்* 31

09. ஈழத்தமிழரின் இலக்கியப் படைப்புகள் *கி.சுந்தர ராஜ்* 32

10. Folklore as an academic discipline *S. Sakthivel* 47

11. உளவியலும் தமிழாய்வும் *சோ. ந. கந்தசாமி* 50

12. கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூல்: சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பில் நீக்கப்பட்ட மொழியியல் கருத்துக்கள் *கோ.பாலசுப்ரமணியன்* 54

13. தமிழரின் அறிவியல் நுட்பம் - தற்காலத்து ஒப்பீடு *ப. ஐயம் பெருமாள்* 72

14. இலக்கண - இலக்கியங்களில் பரத்தையர் பிரிவின் வாயில்களும் சிக்கல்களும் *தா.இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி* 87

15. Index of the Journal of Tamil Studies *P. Kavitha* 96

16. List of Translations of Tamil works 105

17. நூல் மதிப்புரை *ஆ. செண்பகவள்ளி* 107

18. Guidelines for writing a Research Article
*Thomas V. Perneger, Patricia M. Hudelson* 109

Regulations for submission of Research Papers 111

## REVISED SUBSCRIPTION

| | Within India | Outside India |
|---|---|---|
| **Life Membership** | **Rs. 6000.00** | **U.S.$. 200 or Rs. 12000.00** |
| **Institutional Membership** | **Rs. 8000.00** | **U.S.$. 250 or Rs. 15000.00** |
| **Annual** | **Rs. 400.00** | **U.S.$. 24 or Rs. 1400.00** |
| **Single Copy** | **Rs. 120.00** | **U.S.$. 7 or Rs. 400.00** |

## திருத்தியமைக்கப்பட்ட சந்தா விவரம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| **ஆயுள் சந்தா உறுப்பினர்** | **ரூ. 6000.00** | **U.S.$. 200 (அ) ரூ. 12000.00** |
| **நிறுவனச்சந்தா உறுப்பினர்** | **ரூ. 8000.00** | **U.S.$. 250 (அ) ரூ. 15000.00** |
| **ஆண்டுச் சந்தா** | **ரூ. 400.00** | **U.S.$. 24 (அ) ரூ. 1400.00** |
| **ஒரு படி** | **ரூ. 120.00** | **U.S.$. 7 (அ) ரூ. 400.00** |

## Chief Editor's Note

Dear Readers

VANAKKAM

I am very glad to inform you that the well wishers of the **Journal of Tamil Studies** are giving their full support to retain the quality and standard of the journal through their research articles and information. I hope and wish that the dreams of Rev. Fr. Xavier S. Thaninayagam Adigal, who initiated to start this journal for the development of Tamil language and literature in the field of advanced research will be fulfilled.

Only because of Dr. S. Thaninayagam Adigal's own efforts and trials, eminent foreign scholars like, Dr. Kamil Zvelebil, M.B. Emeneau,J.R. Maar and Thomas Burrow were involved in the Tamil Research and contributed much for the development in the field of research. So, I request the readers of the journal to suggest the names of ·foreign Tamil scholars who can contribute towards the enrichment of Tamil Research in a similar manner.

As it is a bi-linqual journal we are giving equal importance for the research articles in English also. It is difficult to get research articles of a good standard in English. For that also I need your co-operation and suggestion.

The Government of Tamil Nadu under the leadership of our beloved Honourable Chief Minister Dr. J. Jayalalitha is giving full support for the development of Tamil language and literature through this Institute. We are grateful for the encouragement and financial contribution by the Government of Tamil Nadu.

Readers are welcome to express their views regarding this journal.

With best wishes

**Dr. G.Vijayaragavan**

# 01. மேலைநாட்டுத் தமிழறிஞர்கள் வரிசை
## மறைதிரு. பி.பெர்சிவல் (Rev.Peter Percival) (1803-1882)

*செ.துளசிராமன்*


மறைதிரு. பி. பெர்சிவல்

தமிழ்த் தொண்டாற்றிய அயல்நாட்டு அறிஞர்கள் பலர்; அவர்களுடைய தமிழ்த் தொண்டினைப் பற்றிய குறிப்புகளும் சான்றுகளும் கிடைக்கின்ற அளவிற்கு அவர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்க வில்லை. ஆயினும், அயல் நாட்டுத் தமிழ் அறிஞர்கள் பலர் ஆற்றிய தமிழ்த் தொண்டினையும் நாம் மறத்தல் கூடாது. அவர்களுள் பைந்தமிழ்ப் பழமொழித் திரட்டினைப் படைத்த மறைதிரு. பி.பெர்சிவல் என்பவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பெர்சிவல் கி.பி. 1826ஆம் ஆண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தார். அவர், 'தமிழ் மொழியின் மூலஅடிப்படைக் கூறுகளை' இங்கிலாந்தில் படித்தார். கூர்ந்து படிப்பதோடு, படிப்பதனைத் தம்முள் பதித்துக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர். அவருடைய கவனத்தைக் கவர்ந்தது தமிழில் உள்ள பழமொழிகளே ஆகும். ஏனெனில் அன்றாட வாழ்க்கையின் உட்பொருளை அழகுபடக் கூறுவன பழமொழிகள். அதனால்தான் பழமொழியின்பால் பெர்சிவல் கவனம் முழுவதும் படர்ந்தது.

### பழமொழிகளைத் திரட்டித் தொகுத்தல்

பெர்சிவல் அவர்கள் கி.பி. 1830ஆம் ஆண்டு, கல்கத்தாவுக்குச் சென்று திருச்சபை அமர்வு பெற்ற திருக்கோயில் குரு பொறுப்பினை ஏற்றார். பின்னர், கல்கத்தாவில் மக்களிடையே வழங்கிவரும் பழமொழிகளைத் திரட்டத் தொடங்கினார். அந்தப்பணி முடிந்ததும் சென்னைக்குத் திரும்பினார். சென்னைக்கு வந்ததும் தமிழில் உள்ள பழமொழிகளைத் திரட்டத் தொடங்கினார். 1842ஆம் ஆண்டு மொத்தம் 1900 பழமொழிகளைத் திரட்டி அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு நூல் ஆக்கினார். மேற்கொண்டு

பழமொழிகளைத் திரட்டித்தொகுத்து மிகப்பெரிய பதிப்பாக வெளியிட முடிவு செய்தார்.

**வேதாகம மொழிபெயர்ப்புக் குழுவின் உறுப்பினராதல்**

பழமொழிகளைத் திரட்டித் தொகுத்த நாள்களில் பெர்சிவல் வேதாகம மொழிபெயர்ப்புக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பெற்றார். அந்தக் குழுவில் ரேனியஸ் (Rhenius), நைட் (Knight), ஸ்பால்டிங் (Spalding) மற்றும் ஹட்சிங் (Hutching) ஆகியோர் இருந்தனர். அவர்களோடு சேர்ந்து வேதாகம மொழிபெயர்ப்பைச் சரிபார்க்கும் பணியினைச் செய்துவந்தார். இந்தப் பணிக்காக இலங்கைக்குக் கப்பல் மூலம் சென்றார். தாம் ஏற்றுக் கொண்ட பணியில் 1854 வரை மிகவும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அப்பணி முடிந்தபின்னரே மீண்டும் பழமொழிகளைத் திரட்டும் பணியினைத் தொடங்கினார்.

இந்தக் காலக்கட்டத்தில் திருவாளர்கள் ஸ்டோக்ஸ் (Stokes), சிம் (Sim), சாமியர்ஸ் (Chamiers), கோலோன்ஸ் (Colones), ப்ரௌன் (Brown), பார்ஸ் (Pars) மற்றும் பெல் (Bell) ஆகியோர் சிவில் மற்றும் இராணுவத்தில் அதிகாரிகளாக இருந்தனர். இவர்கள் “தினவர்த்தமான்” என்ற இதழைத் தொடங்கினர். அந்த இதழுக்கு ஆசிரியராக இருந்து நடத்திட, பெர்சிவல் அழைக்கப்பெற்றார். கல்கத்தாவிற்குச் சென்று வந்தபின்பு, 1855ஆம் ஆண்டு பெர்சிவல் அந்த இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அதே பெயரில் தெலுங்கிலும் ஓர் இதழ் தொடங்கப்பெற்று வெளிவந்தது. ‘மெட்ராஸ்’ இராணுவ அனாதைப் பெண்கள் புகலிடத்திற்கு (Madras Military Female Orphan Asylum) தனி மதகுருவாக இருந்தார்.

கி.பி.1860 ஆம் ஆண்டு, பெர்சிவல் தொகுத்த பழமொழிகள் 5000 வரை பெருகிவிட்டன. மேலும் அப்பணியைத் தொடர முடியாமல் போயிற்று. ஏனெனில், பொதுக் கல்வி இயக்குநர் ஓர் உத்தரவு பிறப்பித்தார். அதாவது “பள்ளிகளுக்குப் பயன்படும் பாடப் புத்தகங்கள், நில இயல்படங்கள் போன்றவற்றைப் படைத்திட வேண்டிய கடமை பெர்சிவல் மேற்கொள்ள வேண்டும்” என்பதே அந்த உத்தரவு. அந்தப் பணியையும் ஏற்றுக்கொண்டார். அதே நேரம் சுருக்கமான அகராதியும் தொகுத்து வெளியிட்டார். பாட நூல்களும் வரைபடம் (*maps*) அகராதி உட்பட அனைத்தும் ஏழாவது பதிப்பாக வெளியிடப்பெற்றன. பத்தாண்டுக்காலம் கழித்து இவர் 1870ஆம் ஆண்டு சென்னை

மாநிலக் கல்லூரியின் தமிழ் இலக்கியத் துறைப் பேராசிரியர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றார்.

**தமிழ்த்தொண்டு**

மன்னார்குடியில் கிறிஸ்தவ சமயப் பணி செய்துவந்த மறைதிரு. ஜி.ஃப்ரேயர் (Rev.G Frayer) என்பவர் எட்டாண்டுக் காலமாகத் திரட்டி வைத்திருந்த பழமொழிகளைப் பெர்சிவல் பெற்றுவந்து அவற்றுள் 4000 தமிழ்ப் பழமொழிகளை, சென்னை வேப்பேரியிலிருந்து தொகுத்து வெளியிட்டார். ஔவையார் அருளிச் செய்த 'மூதுரை' (Aphorism) நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 1900 தமிழ்ப் பழமொழிகளைத் திரட்டி முதலில் வெளியிட்டார். அடுத்து 5000 தமிழ்ப் பழமொழிகளைத் திரட்டித் தொகுத்தார். 'வேதங்களின் தாயகம்' (Land of the Vedas) என்னும் நூலின் ஆசிரியரும் பெர்சிவல்தாம்.

கி.பி. 1874 ஆம் ஆண்டு, தாம் தொகுத்து அளித்த பழமொழிகளைத் திருந்திய பதிப்பாக, பெரிய பதிப்பாகத் தொகுத்து அச்சிட்டு நூலாக வெளியிட்டார்.

அந்நூலின் இறுதியில், "பெர்சிவல் ஆகிய நான் தொகுத்து வெளியிட்ட பழமொழிகளில் ஏதாவது விடுபட்டிருந்தால் அவற்றை அருள்கூர்ந்து அனுப்பிவைக்குமாறு படித்த பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று அறிக்கை வாயிலாகக் கேட்டுக்கொண்டார். பெர்சிவல், அப்போது முதுமையை அடைந்திருந்தார். மேற்கொண்டு பழமொழிகளைத் திரட்டித் தொகுத்துப் பெரியதொரு நூலாக்கிடும் பொறுப்பினை, தன் மருமகனிடம் ஒப்படைத்தார்.

இலக்கணத்தில் கால்டுவெல் போலும் நாட்டுப்புறப் பாடல்களில் கோவர் (Gover) போலும் திராவிட மொழிகள் சார்ந்த பழமொழிகளில், பெர்சிவல் தனித் தன்மையைக் காட்டினார்.

இலங்கைத் தமிழ் அறிஞரான ஆறுமுக நாவலரின் உறுதுணையோடு, கிறிஸ்தவ வேதாகமத்தை நல்ல தமிழில் மொழிபெயர்த்தார். இங்ஙனம் பல தமிழ்த் தொண்டுகள் செய்துவந்த பெர்சிவல் 1882ஆம் ஆண்டு ஜூலை 11இல் இயற்கையெய்தினார்.

---

*தொகுப்பு: **செ.துளசிராமன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.*

## 02. இந்திய தமிழறிஞர்கள் வரிசை

## தி. சௌரிப்பெருமாள் அரங்கனார்

ஆ. தசரதன்

திருக்கண்ணபுரத்துத் திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கனார் அவர்கள் சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் குறுந்தொகைக்குப் பழைய உரைகள் எதுவும் கிடைக்காத நிலையில், ஓலைச் சுவடிகளிலிருந்து குறுந்தொகையைப் பதிப்பித்ததோடு கி.பி.1915இல் அதற்கு ஒரு புத்துரையையும் எழுதி வெளியிட்டவர் ஆவார்.

### இளமைப் பருவக் கல்வி

சௌரிப் பெருமாள் அரங்கனார் தம் விருப்பத்தாலும் தமிழ் மீதுள்ள பற்றினாலும் செந்தமிழைக் கற்க மதுரைத் தமிழ்ச்சங்கம் சென்றார். அங்குத் தமிழ் கற்க இடம் கிடைக்கவில்லை. அந்நிலையில் சோழவந்தான் கருப்பட்டி ஊர்க்காரர் ஒருவரின் வழிகாட்டுதலின் பேரில் சோழவந்தான் கிண்ணிமடத்தில் தமிழ்ப் பயிற்சி பெறலாம் என்றும் அம்மடத்துச் சுவாமிகள் தமிழ்ப் பயிற்சியிலும் கருணையிலும் சிறந்தவர் என்றும் அறிந்து அங்குச் சென்றார்.

சோழவந்தான் கிண்ணிமடம் மகாசந்நிதானம் சிவப்பிரகாச சுவாமிகள் அரங்கனார் கேள்விப்பட்டதைப்போல் அவருக்கு எல்லா உதவிகளையும் செய்து கொடுத்தார்கள். தாம் அரங்கனார்க்குத் தமிழ்ப்பாடம் சொல்லிக் கொடுக்கவும் மடத்துப் புத்தகங்களையும் எடுத்துப் படித்துக்கொள்ளலாம் என்றும் உண்டு உறைந்து கொள்ளலாம் என்றும் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள். தொடக்கத்தில் அரங்கனார் நன்னூலைப் பயின்றார்.

### கல்வி பயிற்றுவித்த ஆசிரியர்கள்

சோழவந்தான் கிண்ணிமடம் மகாசந்நிதானம் சிவப்பிகாச சுவாமிகள், அவ்வூர் மகாவித்துவான் அரசஞ்சண்முகனாரிடமும் தமிழ் பயின்ற அரங்கனார், அன்னார் அளித்த உதவிகளையும் நூல்களையும் பெற்றுக்கொண்டு மேலும் மேலும் தம் தமிழறிவைப் பெருக்கிக்கொண்டார்.

### இவரின் கல்விக்கு உதவியவர்கள்

அரங்கனாரின் தந்தையாருக்கு வேண்டியவர்களான கம்மங்குடி மாமாவின் தாத்தா கு. திருவேங்கடத்தய்யங்கார், இளைய மாமனார் சூரனூர் வெங்கட்டராம ஐயங்கார் ஆகியோர் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர்

வகுப்புக்கான பாடப் புத்தகங்களை அரங்கனார் வாங்கிக் கொள்வதற்கான பொருளுதவியை நேரில் அளித்துள்ளனர். அத்தேர்வில் அரங்கனார் வெற்றி பெற்றுள்ளார். இக்காலக்கட்டத்தில் அரங்கனார் வடமொழியையும் பயின்றுள்ளார்.

சோழவந்தான் பேட்டை மடத்தில் தங்கியிருந்து கிண்ணிமடத்தில் தமிழ் பயின்ற சௌரிப்பெருமாள் அரங்கனார் கிண்ணிமடத்தின் உதவியையும் கருப்பட்டி ஊர்க்காரர் சுந்தரராமானுஜ நாயுடு அவர்கள் வழங்கிய உதவியையும் ஆசிரியர் திரு. சுப்பையா அவர்களின் உதவிகளையும் பெற்றுக்கொண்டு தம் கல்வியைச் செவ்வனே வளர்த்து வந்தார்.

**பணியும் பணிக்கு உதவியவர்களும்**

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் பட்டம் பெற்ற சௌரிப்பெருமாள் அரங்கனார், திருக்கண்ணபுரம் நாலுகவிராயர் திருவேங்கடாசாரியார், சென்னைக் கிறித்துவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் திரு. கோபாலாசாரியார் ஆகியோரின் தூண்டுதலினால் வேலூர் மகந்து தேவத்தானம் இந்து உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதர் பணியைப் பெற்றார். அப்பள்ளியின் தமிழ்ப் பண்டிதர் சீனிவாச வரதாசாரியார் அவர்களுக்கு அரங்கனார் அப்பணியைப் பெறுவதற்கு உதவியுள்ளார்.

வேலூரில் அரங்கனார் பணியாற்றிய காலத்தில் அங்கிருந்த முத்துசாமி ஐயர் அவர்கள் அவருக்கு அனைத்து உதவிகளையும் செய்துள்ளார். அதன்பின் அரங்கனார் வாணியம்பாடி இசுலாமியாக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகப் பணியில் சேர்ந்துள்ளார். இப்பணியில் அமர்வதற்கு முயன்றவர்கள் அரங்கனாரிடம் வேலூரில் தமிழ் பயின்ற மாணவர்களும் வாணியம்பாடி மதராசே இசுலாமியா உதவி ஆசிரியரான ஆர். செங்கல்வராய அய்யர் அவர்களுமாவார். செங்கல்வராய அய்யர் அவர்களே வாணியம்பாடியில் அரங்கனார்க்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தியவர் ஆவார்.

**தி. சௌரிப்பெருமாள் அரங்கனார் வாணியம்பாடி இசுலாமியாக் கல்லூரி முதல்வரைப் பின்வருமாறு புகழ்ந்துள்ளார்:**

“யான் பணியில் அமர்ந்துள்ள கல்லூரியின் பிரின்ஸ்பாலும், தம்பால் எவர்வரினும் இனியவே கூறுமியல்பினரும், புன்முறுவல் பொதிந்த முகத்தோடு அடுத்தார் துயரைக் கெடுத்தாளும் ஆற்றலினரும், என்றும் எவர்க்கும் இடையூறியற்றலை ஏற்றுக்கொள்ளா ஏற்றத்தினருமாகிய ஸ்ரீமான் மஹம்மத்

இப்ராஹிம் குரைஷி ஸாஹேப் அவர்கள் இவ்வூரில் யான் தளர்ந்துழி யெல்லாந் தாங்கிப் பேருதவியும் பெருந்தன்மை பெரிதும் பாராட்டப் பாலதேயாகும். அத்தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் இந்நூற் பதிப்பிற்கென்று நன்கொடை உதவியதோடு, பல பிரதிகளைத் தாம்விலை கொடுத்துப் பெற்றுக் கொள்வதாகவும் ஊக்கம் மிகுமாறு உரைத்திட்டார்கள்" என்கிறார். கல்லூரி முதல்வர்போல் உதவி ஆசிரியர்களாக உடனிருந்த டி.கே. வெங்கட்டராமணராவ் போன்றவர்களும் அரங்கனார்க்கு உதவியுள்ளனர்.

சௌரிப்பெருமாள் அரங்கனாரின் பெற்றோர் குறித்த குறிப்புகளும் அவர்தம் பிறப்பு, இறப்புக் குறித்த செய்திகளும் கிடைக்கப் பெறவில்லை.

**பதிப்புப்பணி**

அரங்கனார் அக்கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் படித்துவந்த தொல்காப்பிய உரைகளில் மேற்கோள்களாகக் காட்டப்பெற்ற செய்யுள்களில் குறுந்தொகைச் செய்யுள்களைத் தேடி அவற்றை முழுமையாக்கி உரையெழுதி வெளியிடும் எண்ணம் அவருக்குத் தோன்றியது.

அவ்வேளை, அரங்கனாரின் இளமைக்கால அன்பரான மணக்கால் அய்யம்பேட்டை முத்துரத்தின முதலியார் அவர்கள் குறுந்தொகையைச் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலிருந்து ஓலைச் சுவடியிலிருந்து படியெடுத்து அளிக்குமாறு அரங்கனாரை வேண்டிக்கொள்ள அது தொடர்பாக அரங்கனார் சென்னைக்குச் சென்றார். அச்சுவடியைப் படியெடுத்த காலத்தில், வி. முத்துசுவாமி ஐயர் அவர்கள் குறுந்தொகைப் படியை ஒப்புப்பார்த்து உதவியதோடு உண்டுறைவதற்கும் வசதி செய்துள்ளார்கள். அரங்கனார் சென்னையில் படியெடுத்த குறுந்தொகைச் சுவடிகளில் பிழைகள் நிறைந்திருந்ததோடு குறைப்பிரதிகளாகவும் இருந்ததால், மணக்கால் அய்யம்பேட்டை முத்துரத்தின முதலியார் அளித்த மற்றொரு சுவடியை ஒப்புநோக்கி அரங்கனார் படியெடுத்து ஆராய்ந்துள்ளார். அவ்வேளையிலேயே குறுந்தொகைக்கு உரையெழுதி வெளியிடும் எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

அரங்கனாரின் குறுந்தொகைப்பதிப்பு, பொதுக் குறிப்புகளுடனும் மூலமும் உரையுடனும் பிற்சேர்க்கையுடனும் 374 பக்கங்களை உடையதாகவும் சோழவந்தான் கிண்ணிமடம் சிவப்பிரகாச சுவாமிகளின் நிழற்படத்துடன் அன்னார்க்கு உரிமை செய்தும் 5.10.1915ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றுள்ளது. இந்நூல் வெளிவந்த நாளைக் கருத்தில் கொண்டு அக்டோபர் மாதம் (2015) 5ஆம் நாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் வாணியம்பாடி இசுலாமியாக் கல்லூரியின் தமிழ்த்துறையும் இணைந்து நூற்றாண்டு விழா நடத்தி இந்நூலின் மறுபதிப்பை வெளியிட்டனர்.

---

*தொகுப்பு : முனைவர்* ***ஆ. தசரதன்***, *தலைவர், பதிப்புத்துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை 600 113*

---

# 03. Poet Bharati - The National Bard of India
## Who sought to declare Indian Independence

***G. Balasubramanian***

We all know that India attained independence on 15th August 1947. Precisely, we gained our independence at the midnight of 14th/15th August 1947. Pandit Jawaharlal Nehru, first Prime Minister of Free India in his famous speech broadcasted to the nation had spoken thus: "At the stroke of the midnight hour, when the world sleeps, India will awake to life and freedom". (This speech titled "*Tryst with Destiny*" by Nehru was as popular as that of '*Gettysburg Address*' by Abraham Lincoln in the USA). But, about forty years earlier to that, Poet Subramania Bharatiyar endearingly called as 'Bharati', wrote a famous poem, which starts as thus:

*Aaduvome pallu paduvome – naam*
*Anandha suthanthiram adainthuvittomentru*

It can be rendered into English as follows:

Let us sing and dance merrily, and rejoice
That we have gained Freedom that enthralls.

1. Freedom is the by-word that's spoken and heard everywhere
It's affirmed and asserted that we all are equals;
We'll trumpet our victory to one and all,
And it shall reverberate and be heard around the world.

2. We shall bow our heads to the two sectors that are the 'farm and industry'
We shall despise those who simply dine and relax and kill away the time

---

***Dr. G. Balasubramanian,*** *Former Deputy Director of Translations, Government of Tamil Nadu, India. Article is based on the study made by the author on the biographies of 'Freedom Fighters of India' and on complete works of Bharati.*

We shall not irrigate barren lands and dry up our energy,
Equally, we shall desist from exerting to run on errands to worthless men.

3. We know the country where we domiciled and live
Is really ours, and it belongs to us,
Henceforth, we shall never be in servitude to anyone under the sun,
But, we shall ever be worshipping the Lord Almighty and live in his service.

It was a clarion call, a proclamation or rather a declaration that was resorted to by Bharati in the year 1907-08. In fact, it was a 'Unilateral Declaration of Independence to India' drafted in poetry by Bharati. Nearly a century has passed and all over India and around the world, people who were acquainted with the complete works of Bharati used to refer this particular poem and repeatedly say that this was a 'prophetic statement' of Bharati poured in poetry. If at all we call it a prophetic statement, then it is an underestimation of Bharati's real zeal and fervor with which he had rendered it.

To understand this, we have to look into the context in which he had written this poem. Around 1905, there were three great leaders who were called the triumvirates among the national leaders who led the Congress and the Freedom movement of India at that time. They were called Lal, Pal and Bal. They were Lala Lajput Roy of Punjab (Lion of Punjab), Vipin Chandra Pal of Bengal and Bal Gangather Thilak of Maharashtra. Among these three, Vipin Chandra Pal was sentenced to jail for years and a great agitation to stir and awaken the nation for the release of Vipin Chandra Pal was organized by other patriotic leaders.

In the south, V.O. Chidambaram Pillai and his close associate Subramaniya Siva spearheaded the agitation for the release of Vipin Chandra Pal. In fact, the agenda of the movement was to highlight that the day on which Pal was to be released from jail should be celebrated as the day on which India gained its freedom. Bharati wrote this poem to mark that day of historic importance.

Bharati wanted to visualize an Independent India, in which all shall be treated as equals. In another poem he had penned the following impressive lines, in which he dreams of an India, where casteless, egalitarian society shall come into existence:

*Elaiyentrum adimaiyentrum evarumillai jaathiyil*
*Izhivu konda manithar enbathu Inthiyavil illaiye!*

It can be translated as follows:

In India, folks in poverty and in servitude will never as a class exist;
Henceforth, we assure, you can't see people here who are demeaned.

Bharati was a great scholar of repute of his time, a poet, veteran orator and powerful organizer. He was an essayist, writer and journalist too and a champion of the cause of freedom to our country. He was a polyglot who knew several languages. Apart from Tamil and Sanskrit literatures, (both were and are classical languages of Ancient India) he knew English and French literatures. He once called himself as "Shelly dasan" which means Servant of Shelley or Man Friday to Shelly, because of his ardent love towards his poetry. He had also read Shelley's contemporary Byron. Lord Byron's famous poem "Prisoner of Chillon" was a masterpiece and a classic by itself. Written during the earlier years of 19th century, it had produced immense influence on revolutionaries in Europe and around the globe. Byron had written "Invocation to Goddess Freedom" as a preface to his poem "Prisoner of Chillon". That 'Invocation to Goddess Freedom' had influenced our Bharati and he wrote:

*Itham tharum manaiyin neengi idarmigu siraippattalum*
*Suthanthira Devi! ninnai thozhuthidal marakkilene!"*

We can render this as follows:

Let me be displaced from my home, a comfortable safe haven,
Let me be incarcerated in a jail that shall put me to a lot of sufferings,
Let me be deprived of my pleasure and wealth,
Let me be denigrated and dumped with humiliation,
And let me be engulfed in a hundred thousand miseries and be destroyed,
My dear Goddess Freedom! I shall never forget to worship thee!"

A cursory glance over the original lines of "Invocation to Goddess Freedom" by Byron will reveal that Bharati wrote these lines, very much influenced by it.

In the same manner, he had read the 'Unilateral Declaration of Independence' drafted by Thomas Jefferson, which was proclaimed in 1776 in Philadelphia, which was of historic importance.

The occasion he chose to coincide with the writing of his poem was very important to the nation. Release of Pal from jail and the dawn of Freedom of India had to go hand in hand as desired by the leaders of those days. In reality, V.O. Chidambaranar along with Subramaniya Siva who led movement in the south in Tirunelveli district were arrested and tried for seditious act. V.O. Chidambaranar was sentenced to two terms of life imprisonment. Demand for freedom and declaring Independence to India were seditious acts in the eye of British Government then. Bharati had written this poem with full intention to proclaim it as a 'Unilateral Declaration of Independence to India' (drafted in poetry). He went to Puducherry (then French Territory) evading arrest by British Government.

Recently, Indian Independence Day was celebrated by Indians in the USA, organized by CIO (Council of Indian Organizations) at Penn's Landing in Philadelphia. (The author of this essay was one among the congregation). The PA State Governor, Edward Rendell graced the occasion by his esteemed presence. He will be in immensely pleased to know that it was indeed a memorable occasion for him to be cherished for ever, for having been present among us, because, India's National Bard Bharati, an eternal poet of Tamil Nadu had written the poem in Tamil, a classical language, which sought to declare India's Independence, under the influence of 'Declaration of Independence' promulgated in Philadelphia which had become a charter of Liberty, Equality and Fraternity to the mankind.

## 04. Potsherd with Tamil&Brahmi scripts found in Oman

*T. S. Subramanian*

**Discovery has opened new chapter in understanding maritime trade of Indian Ocean countries, say historians.**

A Tamil&Brahmi script inscribed on a potsherd, which was found at the Khor Rori area in Oman, has come to light now. The script reads "nantai kiran" and it can be dated to first century CE, that is, 1900 years before the present. The discovery in the ancient city of Sumhuram has opened a new chapter in understanding the maritime trade of the Indian Ocean countries, according to specialists in history.

It was by chance that the potsherd was sighted. Alexia Pavan, an Italian archaeologist, had displayed the potsherd during an international ceramic workshop on "The Indian Ocean Trade and the Archaeology of Technology at Pattanam in Kerala" held in September in Kochi. P.J. Cherian, Director, Kerala Council of Historical Research (KCHR), and Roberta Tomber of the British Museum, London, had jointly organised the workshop. Pottery from several Indian Ocean countries was on display during the workshop. K. Rajan, Professor, Department of History, Pondicherry University, D. Dayalan, Regional Director, Archaeological Survey of India, and V. Selvakumar, Head of the Department of Epigraphy and Archaeology, Tamil University, Thanjavur, spotted the potsherd displayed by Dr. Pavan.

The Italian Mission to Oman (IMTO) had found this potsherd during its second archaeological excavation in 2006 in the Khor Rori area. The Director of the excavation was Alessandra Avanzini and Dr. Pavan was part of the team. Since 1997, the Mission of University of Pisa, forming part of the IMTO, has been working in Oman in two sites: Sumhuram in Khor Rori and Salut in Nizwa.

The potsherd was found in a residential area of Sumhuram city. Dr. Pavan said it was part of a lid made by reusing the shoulder of an amphora. Soot traces visible along the external ridge suggest the use of the lid for a cooking pot. The sherd was discovered in a layer mixed with a few pottery pieces and animal bones, "which [layer] corresponds to one of the most important constructional phase of the city, to be dated to the first century CE," she said. So the sherd could be dated to first century CE or a little earlier. There was so much of Indian material, including beads, coins and pottery, discovered during the excavation that it was important to show the relationship between India and the southern coast of Oman, she added.



The potsherd found in Oman in 2006. The Tamil- Brahmi script on it can be dated to the first century CE. Photo: K. Rajan

**Personal name**

The script "nantai kiran," signifying a personal name, has two components, Dr. Rajan said. The first part "[n] antai" is an honorific suffix to the name of an elderly person. For instance, "kulantai&campan," "antai asutan," "korrantai" and so on found in Tamil&Brahmi inscriptions could be cited. The second component "Kiran" also stands for a personal name. More than 20 poets of the Tamil Sangam age [circa third century BCE to third century CE] have "kiran" as part of their personal names. "Thus, the broken piece of the pot carries the personal name of an important trader who commanded a high regard in the trading community," Dr. Rajan argued.

It was generally believed that India's contact with the Mediterranean world began with the Roman trade and much of the studies were concentrated on the Red Sea ports such as Quseir al&Qadim and Berenike, both in Egypt. While the excavation at Quseir al&Qadim yielded potsherds with the Tamil&Brahmi texts reading "kanan," "catan" and "panai ori," the one found at Berenike was engraved with the Tamil&Brahmi script "korrapuman." The latest discovery in Oman was significant as it opened a new avenue in understanding the impact of the Indian Ocean trade, particularly on the west coast of the peninsular India, Dr. Rajan said. The region was known for frankincense and there was a possibility that trade in horses could also have taken place in these ports. (Frankincense is an aromatic gum resin used for burning as incense).

"Excavations by the University of Pisa have confirmed Sumhuram's link with the ancient frankincense route and its cultural links with the frankincense&based kingdoms in southern Arabia," Dr. Rajan said.

In the context of the advanced scholarship available on Tamil&Brahmi, estimated Dr. Cherian, this epigraphic evidence from Khor Rori had a great significance. "To the best of my knowledge, Khor Rori is the first South Arabian site to yield epigraphic evidence of the early historic phase [that is, when written records began]." Earlier, in the Mediterranean maritime trade network, only Myos Hormos and Berenike (on the Red Sea coast of Egypt) and a few sites in Sri Lanka had produced Tamil&Brahmi inscriptions outside India.

The importance of Khor Rori rested on the fact that it was an important pre&Islamic port&city in the ancient Indian Ocean exchanges between the Mediterranean region and India, Dr. Cherian said. The port of Sumhuram could be dated to circa third century BCE to fourth century ACE. This site could be crucial in tracing the maritime history of the Red Sea, the South Arabian and the Mesopotamian coasts and their hinterlands which could have played a pivotal role in the long&distance maritime trade betweenTamilakam and the

Mediterranean between the first century BCE and the fourth century CE, he added.

"It is unfortunate that the geographical and the cultural significance of the South Arabian region and its links with ancient south India has not been properly studied for various reasons," said Dr. Cherian, who recently did field studies in Oman including at Sumhuram (Khor Rori) and the nearby Al Baleed sites. The Euro&centric perspectives that became dominant after the Roman Empire seem to have erased more history than they probably produced anew. In the absence of textual evidence for the early historic period, he said, archaeological evidence and to some extent, anthropological sources such as myths were the available means to retrieve such lost histories.

Dr. Cherian added: "This artefact with a post&firing Tamil&Brahmi script is, therefore, a find with a dual significance both as material and textual evidence. The challenge now is to seek associated archaeological finds from elsewhere, especially peninsular India."

**Brisk trade activity**

The substantial quantity & the largest&ever assemblage from any Indian site & of 3,384 torpedo jar fragments and 1,720 turquoise glazed pottery from Pattanam suggested the brisk trade activity betweenTamilakam and the South Arabian regions. (The KCHR, in association with other agencies has been excavating the Pattanam site, near Ernakulam, from 2007. Archaeologists feel that Pattanam could be Muziris/Muciri, which was a flourishing port on the west coast during the Tamil Sangam age, which coincided with the classical period in the West). "The presence of frankincense crumbs in almost all trenches at Pattanam is yet another indication of the site's connection with South Arabia, including Khor Rori and the Al Baleed region, famed as the "land of incense'," Dr. Cherian said.

***Source : The Hindu, October 28, 2012***

# 05. Land Measuring rods of *Tiruccirāpaḷḷi* District (500-1300 C.E.)

***R. Akila, M. Nalini, R. Kalaikkovan***

Lands were measured in Tamil Nadu by using a rod or pole called *kōl* as revealed by epigraphical records. This *kōl* was generally based on either human span *(cāṇ)* or foot *(ṭi)*. A *kōl* was named according to the number of spans or feet it comprised, for example, 16 - span rod, 12 - *aṭi kōl* and the like. It is interesting to note that only the *aṭi kōls* are mentioned in the epigraphical records of Tiruccirāpaḷḷi district and so far not a single span kind of rod was met. 12 *aṭi kōl* is the commonest and was used in Ālampākkam, Tirueṟumpiyūr and Tiruppainñīli.[1] It is also understood from the records that some of these rods had special names such as the Srīraṅkam rod which is mentioned in a *Cōḻa* record as *kaṭamai iṟukkum kōl*.[2]

Apart from being mentioned in the inscriptions some of these measures are marked on the temple walls as the interval shown between two plus marks. Occasionally a third mark is also noted. During our field studies in the past thirty years, good number of such land measures along with sculptor's scales were discovered from several temples of Tamilnadu.[3] This article highlights the discoveries that belong to the period 500 -1300 C. E and found in the temples of Tiruccirāpaḷḷi district.

**Naming of the Measuring rods**

Most of our finds are named with an engraving in between the plus marks or nearby. The commonly noted names denoted the type of land for which the measure was used (*naṉcey kōl* (measure for wet land), *puṉcey kōl* (measure for dry land). Some of the rods were named after the unit of land that was measured

---

***Dr. R. Akila,*** *Assistant Professor, Department of History, Government Arts & Science College, Musiri, Tamil Nadu.*

***Dr. M. Nalini,*** *Associate Professor, Department of History, Seethalakshmi Ramaswami College, Thiruchirappalli, Tamil Nadu.*

***Dr. R. Kalaikkovan,*** *Director, Dr. M.Rajamanickam Historical Research Centre, Thiruchirappalli, Tamil Nadu.*

(*ku_l_ik kōl*). Some had general names (*aḷavu kōl, nilam aḷanta kōl, ma_n_aik kōl*). A few which had special names such as *śiva_n_ e_nn_um pa_l_aṅkōl, māḷikaik kōl, kukaik kōl* and *periya tirukkōpurattu kiḷaik kōl* are mentioned in the inscriptions copied by us.[4] Measuring rods named after the villages in which they were used such as *tiruvā_n_aikkā na_n_cey aḷavukōl* were also in existence.[5]

A land measuring *kōl* discovered on the *vimana* of Kāśiviśvanāta swami temple at Srīnivāśanallūr is represented by the distance between two plus marks and its exact measure by the metric system is 3. 35 m. An inscription engraved in between the plus marks name the *kōl* as *'caturvētimaṅkalattu nilam a_l_anta'*. A partly damaged inscription from the same temple that deals with a sale of land mentions a land measure by name fourteen *mu_l_a kōl*[6] by which the land was measured and sold. Similarly an inscription from Śāmavēdīśvarar temple at Tirumaṅkalam mentions *eṇmu_l_a kōl*,[7] a rod of different length.

***Tiruccentu_r_ai***

Two measuring rods were discovered[8] from the southern wall of the central shrine of Cantrasēkara temple at Tiruccentu_r_ai. Both of them have their names engraved near them. The first one found on the sanctum mentioned as *ku_l_ik kōl* in the engraving measures 90 cm. Such a fractional measure was not found anywhere in the study area till date.

The longer measuring rod mentioned as *niḷam a_l_anta kōl* in the engraving, measures 4 m. by the metric system and is marked on the *mukamaṇṭapam*. An inscription of Rājarāja I found at the Vaṭatīrttanāta temple of Andanallur, a nearby village, refers to this as '*Tiruccentu_r_ai Srivimā_n_attu veṭṭik kiṭakkum peruṅ kōl*' and mentions that lands were measured using this.[9]

**Periyaku_r_ukkai Akaram**

Periyaku_r_ukkai Akaram is a small village situated near Peruvaḷanallūr, the battle site mentioned in Kūram copper plates. A_l_akiya Cokka Nāya_n_ār temple of this village has constructions that belong to the period of the fag end of the Chōlas. Two measuring rods with engravings '*na_n_ cey*' and '*pu_n_ cey*' were discovered from the basement of the *makāmaṇṭapam* one on each side of its entrance.[10]

The *nan̲ cey kōl* marked between two plus marks measures 4.68 m. The *pun̲ cey kōl* measures 5. 64 m. is marked by three plus marks instead of the usual two. The distance between the first two plus marks measures 5.59 m. and the distance between the second and third marks measures just 5 cm. The reason for the presence of an extra mark is not understood.

**Tiruppattūr Ayyan̲ar Temple**

Two similar *nan̲ cey* and *pun̲ cey* measures were found from the temples of Tiruttiyāmalai, Tiruppaiññīli and Tiruppattūr. The Tiruppattūr measuring rods were discovered from the *makāmaṇṭapam* of the Ayyan̲ār temple.[11] In this case the *pun̲ cey kōl* has two plus marks with the distance in between measuring 5.64 m. whereas the *nan̲ cey kōl* with similar markings measure 4.89 m., both of them have their names engraved near by. Two measures are mentioned in an inscription of later period copied from this temple, one used for wet lands measuring 27 feet and another used for dry lands measuring 30 feet.[12]

**Thiruppaiññīli**

Two land measures marked between two linear marks were discovered on the southern wall of the second enclosure of Nīlivan̲anātasāmy temple at Tiruppaiññīli with out any names engraved.[13] The first one measures 4 m. and the second one 3 m. In the absence of any specific names it may be presumed that these two markings denote the usual *nan̲ cey* and *pun̲ cey* measures found elsewhere in this district. A Cōḻa record of this place mentions a *pan̲n̲īraṭik kōl.*

**Tiruttiyāmalai**

Two land measuring rods with engravings *nan̲ cey* and *pun̲ cey* were noted at the entrance of the abandoned Śiva temple at Tiruttiyāmalai. The first one mentioned as *nan̲ cey kōl* measures 4.06 m. and the second one mentioned as *pun̲ cey kōl* measures 5.10 m.[14]

**Lālkuṭi**

An analysis of all the records copied from Saptarisīsvara temple at Lālkuṭi revealed the names of a few land measures that were used in this area. Apart from the *pan̲n̲īraṭik kōl*, another land measuring rod mentioned in a record of Later Cōḻa period as *śivan̲ en̲n̲um paḻaṅkōl* was also in use. The very word *paḻaṅkōl* used as the suffix denotes the antiquity of the usage of this measure.

A marked land measuring rod was discovered near the Amman shrine of this temple and it measures 3. 47 m. between the plus marks. It is named as *'aḷavu kōl'* in the engraving found near by. [15]

**Standardization of measuring rods**

Differences in measurements are noted between the measuring rods of one place from the other and similarities between them appear to be a rare feature. Standardization of measuring rods through out the study area during any part of the study period was not undertaken as understood from the records. But certain phrases used in the inscriptions such as, '*tiruulakaḷantapati nilam*', *'tiruulakaḷanta kaṇakkil'* suggest an attempt to standardize the land measuring rods during the Cōla rule.[16] Scholars also suggest that such attempts were made under Rājarāja I and Kulōttuṅka I, hence the naming of certain rod measures found elsewhere as, *'tiruulakaḷantapati kōl'*, and *'tiruulakaḷanta srīpāta kōl'*.[17]

**Manaik kōl**

A *manaik kōl* discovered from the basement of the front *mandapa* of Kailāsanātar temple at Alambākkam measures 2.88 m. between the plus marks with an engraving *'manai'*.[18] This measure meant for house sites is mentioned in the 12th regnal year inscription of Rājātirāja II copied from this temple.[19] As *kuḻik kōl, manaik kōl* is also a rarity and not found in any other temple in the study area, though mentioned in the records.



*Alambakkam 1*



*Alambakkam 2*



*Periyakuṟukkai measures*

## End Notes

1. SII 26:776, *Varalāṟu,* vol. 9-10, Annual Research Journal of Dr.M.Rajamanikkanar Centre for Historical Research, p. 21; ARE 1938-39: 158.
2. SII 24: 193.
3. **Land measuring rods** - Tiruccentuṟai, Lālkuṭi, Tiruppaiññīli, Periyakuṟukkai akaram, Tiruttiyāmalai, Srīnivaśanallūr, Ālampākkam, Village near Pāṇṭiccēri, Kiḻaiyūr (Paluvūr), Valikaṇṭapuram and Kuṉṉam.

   **Sculptor's scales** – Virāḷimalai *(karuṭamaṇṭapa mūlam),* Tiruvāśi *(Taccu mūlam),* Tañjāvūr, Paṉaimalai, Tiruvāṉaikkōyil Naṭarājarājīśvaram and Aḻakarkōyil.
4. ARE 1929: 112, 1914: 99, SII 26: 725, 24: 93.
5. ARE 1936-37: 133.
6. R. Kalaikkovan, "Tirumpippārkkiṟōm," vol. 8, p.828; Diṉattanti 24. 6. 2000.
7. ARE 1929-30: 244, 251.
8. *Varalāṟu* vol. 2, p. 26.
9. SII 8: 660.
10. The Hindu, 9.6.1999.
11. Diṉamalar 9. 6. 1999.
12. ARE 1908: 599.
13. M. Nalini, Tiruppaiññīli, Dissertation submitted to State Department of Archaeology, Tamilnadu, p.79.
14. M.Nalini, R.Kalaikkovan, "Tiruttiyāmalai," Unpublished article.
15. Diṉamaṇi, 24. 3. 2004.
16. SII 24: 98, 142; *Varalāṟu,* vol. 9-10: p.21.
17. Y. Subbarayalu, South India under the Cōḻās, p. 83.
18. R.Kalaikkovan, *Kāṭṭukkuḷ Oru Kalaikkōyil, Kaḻakam*, 1986, p.105.
19. SII 26: 779.

# 06. போர்க் கலை
# "எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்"; கிரேக்கமும் சங்க இலக்கியமும்

த.புகழேந்தி

## அறிமுகம்

உலகின் தொன்மை நாகரிகங்களில் கிரேக்கம் முதன்மையானதாகும். அத் தொன்மை நாகரிகமுடைய கிரேக்கரும் தொடர்புகொள்ளும் அளவிற்குச் சங்க காலத் தமிழர் சிறப்புப் பெற்றிருந்தனர். இதனால் இவ்விரு பண்பாடுகளிடையே பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அவற்றில் போர்க்கலையிலும் போர்க்கலை சார்ந்த கட்டடக் கலையிலும் இவ்விருவரிடையே காணப்படும் ஒற்றுமை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

## கருதுகோள்

தொன்மைக் கிரேக்கரிடமும் சங்க காலத் தமிழரிடமும் காணப்படும் ஒற்றுமைகளை ஆராயும்வழி சங்கத் தமிழரின் பண்பாட்டுச் சிறப்பு, கிரேக்கப் பண்பாட்டுக்கு நிகரானது என்ற கருதுகோளினை மெய்ப்பிப்பதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

கற்கால மனிதனுக்குக் கல்லே ஆயுதமாகும். அவன் தன் உடல் வலிமைக்கு ஏற்ப அக் கல்லைப் பயன்படுத்தினான். அறிவு வளர்ச்சி கொண்டு அக் கல்லிற்கு மேலும் ஆற்றல் ஊட்ட எண்ணினான். கவண் கல்லைக் கண்டறிந்தான்.

## 1.0 கவண் கல்

பயிர்களை உண்ண வரும் விலங்குகளை விரட்டிடக் கவண் கல்லினைத் தமிழர்கள் பயன்படுத்தியுள்ளதைச் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

---

*முனைவர் த. புகழேந்தி, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, நந்தனம், சென்னை - 600035.*

... வன்கைக் கானவன்
கடுவிசைக் கவணின் எறிந்த சிறுகல்
உடு உறு கணையின் போகி சாரல்
வேங்கை விரியிணர் சிதறி தேன் சிதையூஉ
பலவின் பழத்துள் தங்கும் (அகம். 292)

தமிழர்கள் பயன்படுத்திய இக் கவண்கல்லினைக் கிரேக்கர்களும் பயன்படுத்தியுள்ளனர். இதை அவர்தம் தொல் காசுகள் காட்சிப்படுத்துகின்றன.

### 1.1 கிரேக்கக் கவண்கல் காசுகள்



Pamphylia, Aspendos, 370 BC.,



இவ்வாறு எளிய காவலுக்குப் பயன்பட்ட இக் கவண் கல் பின் நாட்டைக் காக்கவும் பயன்படலாயிற்று. இதைக் கிரேக்கச் சிற்பங்கள் புலப்படுத்து கின்றன.

**1.2 கிரேக்கப் போரில் கவண் கல் குறித்த பதிவு**





Slingers on Trojan's Column

**1.3 கோட்டைக் கவண் கல்**

கல்லினைக் கையால் வீசுதல் என்னும் நிலை மாறுகிறது. எயில் எனப்படும் கோட்டையே கல்லை வீசக் கூடியதான அமைப்பாக உருவாக்கப்படுகிறது. இதைச் சங்க இலக்கியம் படம்பிடித்துள்ளது.

**ஆர் எயில் அலைத்த கல் கால் கவணை** - **பதிற்.88.18**

இவ்வாறு கவண் கல் எனப்படும் போர்க் கலை சார்ந்த கட்டடக் கலையினைத் தமிழர்கள் போன்றே கிரேக்கர்களும் குறித்துள்ளனர். கோட்டையிலிருந்து கல் எறியும் கலையைக் கிரேக்கர்கள் நிகழ்த்திய முறை இங்கு வரைபடமாக்கப் பட்டுள்ளது.

### 1.3.1 இழுவிசை



ஒரு முனையில் கல் கட்டப்பட்டு மறு முனையைப் பலர் வேகமாகப் பிடித்து இழுக்கக் கல் மேலே பாய்கின்றது. பின்னர் இக் கலை பல்வேறு வளர்ச்சி நிலைகளைப் பெறுகின்றது. அவையும் வரைபடமாக்கப்பட்டுள்ளன.

### 1.3.2 இயந்திர இழுவிசை



பின்னர் இக் கல் எறியும் கலையானது அம்பு எறியும் கலையுடன் இணைக்கப்படுகின்றது. இம் முறை வரைபடமாக்கப்பட்டுள்ளது.

### 1.3.3 வில்இழுவிசை



இவ்வாறு ஒவ்வொரு கல்லாக எறியும் கலை வளர்ந்து மழை போன்று தொடர்ச்சியாகக் கல்லினை எறியும் கலையாக இது வளர்ச்சிபெறுகின்றது.

### 1.3.4 தொடர் எறி கல்




சக்கர அமைப்பினில் தொடர்ந்து கற்கள் வைக்கப்பட, அச் சக்கரம் சுற்றும் வேகத்தில் அவை தடுக்கப்பட்டு வீசி எறியப்படுகின்றன. இவ்வாறு கவண் கல்

எறியும் கலையுடன் அம்பு எறியும் கட்டடக் கலை அமைப்பும் உருவாக்கப்படுகிறது.

## 2.0 எந்திரத் தகைப்பு

அம்பு விடுதல் என்பது போர்க் கலையாகும். இக் கலையில் திறமை கொண்டோர் கடவுளாக்கப்பட்டுள்ளனர். கடவுளுடன் இணைக்கப்பட்ட இக் கலையைக் கட்டடக் கலையுடன் இணைத்துள்ளனர் சங்கத் தமிழர்.

**தொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயின்**
**செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்**
**எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்**
**கோள்வல் முதலைய குண்டுகண் அகழி**
**வான் உற ஓங்கிய வளைந்து செய்புரிசை - பதிற்.53.5-9**

இவ்வாறு அக் காலப் போர்க் கலையில் அம்பினை விடுவதற்கு எந்திரத்தைத் தமிழர் பயன்படுத்தியுள்ளனர். இந்த எந்திரம் அடிபட்ட யானையின் கதறலைப் போன்று ஒலியை எழுப்பியதாகக் கூறப்படுகிறது.

**அணங்குடை யாளி தாக்கலின் பலவுடன்**
**கணம்சால் வேழம் கதழ் உற்றாங்கு**
**எந்திரம் சிலைக்கும் (பெரும்.258-260)**

இவ்வாறு அம்பு எய்வதற்கு எந்திரத்தைப் பயன்படுத்தியுள்ள தமிழர்தம் போர்க்கலை அவர்தம் அறிவியல் கலை வளர்ச்சியினை வெளிப்படுத்து கின்றது. போர்க் கலையில் தமிழர் பெற்றிருந்த இதே வளர்ச்சியினைக் கிரேக்கத்திலும் காணமுடிகிறது.

## 2.1 கிரேக்கத்தில் எந்திர அம்பு

எதிரி நாட்டு மன்னர் படைகள் கோட்டை அருகே முன்னேறித் தாக்கின. எனினும் கோட்டையைக் காக்கத் தக்க படை வலிமையினையும் கருவிகளையும் கார்த்தகீனியன்ஸ் பெற்றிருந்தனர். கல் எறிதல், அம்பு எய்தல் ஆகியவற்றுக்கான கடபுல்ட் என்னும் எந்திரத்தை அவர்கள் கோட்டையில் திரட்டினர்.

"The king immediately encamped near the walls, and at first made constant attacks with relays of troops against them. But the Carthaginians were able to defend themselves because of the number of their fighters and the abundance of their equipment. For the Carthaginians had collected so great a number of **catapults, both dart-shooters and stone-throwers**, ......"- Sec.10.7, Fragments, Bk. XXII, Vol. XI, The Library of History, Diodorus Siculus, 60 BC.

கையினால் எய்யப்படுகின்ற அம்பினைவிட எந்திரத்தால் எய்யப்படுவது அளவில் பெரியது; ஆற்றலுடையது. ஓர் அம்பே ஒரு யானையை வீழ்த்தக் கூடியது. இத்தகு போர்க்கலை வளர்ச்சியினைத் தமிழர் அன்றே பெற்றிருந்தனர். தமிழர் தொடர்பினால் கிரேக்கர்களும் இவ் வளர்ச்சியைப் பெறலாயினர். இக் கருவியின் அமைப்பு கீழே வரைபடமாக்கப்பட்டுள்ளது.

**2.1.1 வரைபடம்**



**2.1.2 வரைபடம்**



இவ்வாறு ஒவ்வோர் அம்பாக விடுவதற்கு மாறாக மழை போன்று தொடர்ச்சியாக அம்பெய்தும் கலை வளர்ச்சியினையும் அன்று பெற்றிருந்தனர்.

**2.1.3 வரைபடம்**



இக் கருவிகள் கோட்டையில் தக்கதோர் இடத்தில் பொருத்தப்பட்டிருந்தன.

**3.0 வில்பயில் குறும்பு, எந்திரப் புழை**

எந்திரத்தின்வழி கல் எறிதல், அம்பு எய்தல் ஆகியவற்றிற்குக் கோட்டை அமைப்பில் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. இத்தகு அமைப்புகள் சங்க இலக்கியத்தில் வில்பயில் குறும்பு, எந்திரப் புழை என அழைக்கப்பட்டன. போரின் பொழுது இத்தகு அறைகளின் காவலுக்கு முதன்மை அளிக்கப்பட்டது.

**வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்**
**வில்பயில் குறும்பின் (பதிற்.78)**

**கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின் (அகம்.87)**

**நிலவரை இறந்த குண்டுகண் அகழி**
**வான் தோய்வு அன்ன புரிசை விசும்பின்**
**மீன் பூத்தன்ன உருவ ஞாயில்**
**கதிர் நுழைகல்லா மரம்பயில் கடிமிளை**
**அருங்குறும்பு உடுத்த கானப் பேர் எயில் (புறம்.21)**

**தமர் எனின் யாவரும் புகுப, அமர் எனின்**
**திங்களும் நுழையா எந்திரப் படுபுழை (புறம்.177)**

இந்த அறையின் அமைப்பு அடுத்து வரைபடமாக்கப்பட்டுள்ளது.

### 3.0.1 வரைபடம்




இவ்வாறு இத்தகு அறைகள் தமிழர்தம் கோட்டைக் கட்டடக்கலை அமைப்பிலும் பாதுகாப்பிலும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றன. இந்த அறை இல்லாத கோட்டைகள் கல் எறிதல், அம்பு எய்தல் போன்ற போர்க் கலைக் கருவிகளைப்பெற்றிருந்தும் தோல்வியைத் தழுவியுள்ளதைக் கிரேக்க வரலாறு பதிவுசெய்துள்ளது.

### 3.1 கிரேக்கத்தில்....

கார்த்தகினியன்ஸ் கடபுல்ட்ஸ் எனப்படும் கல் எறிதல் மற்றும் அம்பு எய்யும் கருவிகளைப் பெருமளவில் திரட்டினர். எனினும் அவற்றை வைத்துப் பயன்படுத்துவதற்குப் போதிய அறைகள் கோட்டையில் அமைக்கப்படவில்லை. அதனால் இவர்கள் தாக்கப்பட்டுப் பேரிழப்பைச் சந்தித்தனர்.

"Carthaginians had collected so great a number of catapults, both **dart-shooters** and **stone-throwers**, that there was not **room** on the walls for all the equipment. And so, as missiles of all sorts were hurled against the attackers, and as many of his men fell, and many others received wounds, Pyrrhus was at a disadvantage." - Sec.10.7, Fragments,Bk. XXII, Vol. XI,The Library of History,Diodorus Siculus, 60 BC.

இவ்வகையில் தமிழர்கள் போர்க் கலையிலும் அதற்கேற்ற கட்டடக் கலையிலும் வளர்ச்சி பெற்றிருந்ததைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இவ் வளர்ச்சி

நிலை கிரேக்கர்களிடமும் காணப்படுவது இவ்விருவர்தம் தொன்மையையும் தொடர்பினையும் உறுதிப்படுத்துகின்றது.

**முடிவுரை**

தொன்மைக் கிரேக்கத்திற்கு நிகரான பண்பாட்டுச் சிறப்பினைச் சங்க காலத் தமிழர் பெற்றிருந்தது இவ் ஆய்வு வழி உறுதியாகிறது.

**துணை நூல்**

1. த.புகழேந்தி, **கிரேக்க இலக்கியத்தில் பாண்டியரும் சங்க காலப் பண்பாடும்**, திருமகள் பதிப்பகம், சென்னை - 73, 2015.

## 07. Tamil Scholars from Overseas

**Ziegenbalag, Bartholomaeus (1683 - 1719)**

German missionary, compiled 'Malabar Dictionary' of ca. 40000 words, translated New Testament, compiled a poetical dictionary 'Lexicon Poeticum' a poetical dictionary of 17000 words.

- Ziegenbalg, B: Genealogy of the South-Indian gods : a manual of the mythology and religion of the people of southern India, including a description of popular Hinduism, published in Madras : Higginbotham, 1869; Reprinted with notes and additions.., New Delhi : Unity Book Service, 1984.
- Ziegenbalg, B : Grammatica damulica von Bartholomaeus Ziegenbalg, Herausgegeben von Burrhard Brentjes und Karl Gallus. Halle; Martin-Luther-Universitat Halle-Wittenberg, c1985.
- Ziegenbalg, Bartholomaeus : Alte Briefe aus Indien : unveroffentlichte Briefe; hrsg. von Amo Lehmann. Berlin : Evangelische Verlagsanstalt, (1957).

## 08. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் திருச்சியில் கண்டுபிடிப்பு

*இரா. கலைக்கோவன்*

*திருச்சியில், 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, நான்கு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே அகத்தீஸ்வரர் கோவிலில், முசிறி அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியின் வரலாற்றுத்துறை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆய்வு செய்தனர். அங்கு, 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, நான்கு கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்துள்ளனர். இதுகுறித்து, டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மைய இயக்குநர், கலைக்கோவன் கூறியதாவது: கல்வெட்டுக்களில் உள்ள எழுத்து அமைப்பு, 13ஆம் நூற்றாண்டை ஒத்துள்ளது. பெருமண்டபச் சுவர்களில் தென்படும் கல்வெட்டில், மாறவர்மர் குலசேகர பாண்டியர் ஆட்சி செய்த ஆண்டு அறிய முடியாத வகையில் உள்ளது.*



*திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே அகத்தீஸ்வரர் கோவிலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள, 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள்*

*தென்மேற்குப் பகுதியில், பாதி புதைந்த நிலையில் உள்ள அன்னையர் கற்சிலைகள், நின்ற கோலத்திலான விஷ்ணுவின் கற்சிலையும் கண்டறியப்பட்டுள்ளன. விஷ்ணு சிலை, 13ஆம் அல்லது, 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம்.*

*தினமலர்: செப்டம்பர் 20, 2015*

# 09. ஈழத்தமிழரின் இலக்கியப் படைப்புகள்

கி.சுந்தர ராஜ்

## 1.0 முன்னுரை

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்கள், உலகின் பல்வேறு பகுதிகளிலும் இன்று வாழ்ந்து வருகின்றார்கள். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, பிஜித்தீவுகள், மொரீஷியஸ் என்பவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை. மேற்கூறியவற்றுள் இந்தியா (தமிழகம்) இந்தத் தமிழ்பேசும் மக்கள் திரளின் முதல் வசிப்பிடமாகும். இங்கிருந்துதான் மற்ற நாடுகளுக்குத் தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்றனர்.

ஈழம் எனும் இலங்கையில் தொன்றுதொட்டு வாழ்ந்தவர்களும் புலம்பெயர்ந்து சென்றவர்களும் தமிழகத்திற்கு அடுத்தநிலையில் மிகுதியாக உள்ளனர். இவர்கள் மிகுந்த தமிழ்ப்பற்றோடு தமிழ்ப்பண்பாடு, மரபு, இலக்கியம் முதலியவற்றைப் பாதுகாப்பதோடு, அவற்றை வளப்படுத்தி உலகளாவிய நிலையில் பரப்பிவருகின்றனர். புலம்பெயர்ந்து உலகளாவிய நிலையில் அகதிகளாக வாழ்ந்துவரும் ஈழத்தமிழர்களின் தமிழ்த்தொண்டு அளவிடற்கரிது. தமிழின், தமிழ் இலக்கியத்தின், பண்பாட்டின் சிறப்புகளை வெளிப்படுத்துவதோடு, அவர்கள் எத்தகைய பங்களிப்பைத் தமிழிலக்கிய வரலாற்றிற்கு நல்கினர் என்பதைப் பற்றிய ஒரு மதிப்பீடு இவ்வாய்வுக்கட்டுரை.

## 2.0 கருதுகோள்

ஈழத்தமிழர்களின் படைப்புகள், தமிழியலின் பல துறைகளிலும் தமிழ்நாட்டு அறிஞர்களுக்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் விளங்குகின்றன. பதிப்புத்துறையின்வழி அகராதிகள், இலக்கிய, இலக்கண, நூல்கள் உருவாக்குதல், உரைநடைத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிகோலுதல், தமிழ்ச்சங்கங்கள், இதழ்கள் மூலமும் படைப்புகளை உருவாக்குதலும் வெளியிடுதலும் பஞ்சமர் இலக்கியம் புலம்பெயர்ந்தோர் இலக்கியம், இசுலாமியப் படைப்புகள், மலையகத் தமிழ் இலக்கியம் எனப் பல புத்திலக்கிய வகைமைகள் வழியாகவும் ஈழத்தறிஞர்கள் தமிழுக்குச் செய்த தொண்டின் மாண்பினைக் கருதுகோளாகக் கொண்டிலங்குகிறது இக்கட்டுரை.

---

*கி.சுந்தர ராஜ், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம்.கலை அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர், காஞ்சிமாவட்டம்-603203.*

**3.0 ஈழம்**

'மிகத்தொன்மை வாய்ந்த காலத்தில் அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, சாவகத்தீவுகள் போன்றவை எல்லாம் ஒரே நிலப்பரப்பில் இருந்தன.

அவற்றுள் தென்பால் ஆஸ்திரேலியா, வடபால் ஆப்பிரிக்கா, குணபால் சாவகத் தீவுகள் ஆகியவற்றுக்கிடையே ஏழாயிரம் காதம் நிலப்பரப்பினைக் கொண்டிருந்த நிலப்பகுதி குமரிக்கண்டம் என வழங்கப்பெற்றது. அக்கண்டம் 'லெமூரியாக் கண்டம்', 'கொந்தவானா கண்டம்' என்ற வேறுபெயர்களையும் கொண்டி லங்கியது. இங்குதான் ஆதிமக்கள் தோன்றினர் என்பார் டாக்டர் பசதோவ்[1] *(Dr.Basedow) (பக்.59,60).*

'ஏழ்தெங்க நாட்டின் எஞ்சியபகுதி கடல் கோளினின்றும் தப்பித்து இன்று தீவாக இருக்கும் பகுதியே இலங்கை அல்லது ஈழம் ஆகும். 'ஏழ்தெங்கம்' என்பதே 'ஈழம்' எனவும், 'இலங்கை' எனவும் மருவி வழங்குகிறது.[2]

'குமரிக்கண்ட அழிவின் எச்சம் 'ஈழம்', 'ஏழ்பனை நாடு' என்னும் பெயரே யாழ்ப்பாணம். முந்நீர்ப்பழந்தீவு, பன்னீராயிரம், தேனக்கவார்பொழில், மானக்கவரம் (அந்தமான், நிக்கோபார்) என்பவையும் பிறவும் பழந்தமிழ்க் குமரிக்கண்டப் பிதிர்வுகளே.'[3]

என்கிறார் இளங்குமரனார். ஆக,ஈழம் எனப்படும் இலங்கையே, தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்று வாழ்கின்ற நாடுகளுள் மிக முக்கியமானது.

இலங்கை தவிர்ந்த மற்ற நாடுகளின் புலப்பெயர்ச்சி கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரே தொடங்கிற்று. ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் கிறித்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இப்புலப்பெயர்வு நடைபெற்று வந்திருக்கிறது. இந்தியாவுக்கு வெகுஅருகிலே இலங்கை அமைந்திருப்பதே இதற்குக் காரணம்.[4]

அருகிலிருந்த காரணத்தாலேயே அதிகத் தொகையில் புலம்பெயர்ந்து தமது வாழிடத்தை இங்கே உருவாக்கிக்கொண்டனர். தமிழ்மொழி என்ற பொதுத்தன்மை ஒன்றினைவிட, மொழி அமைப்பு முதல் பண்பாட்டுப் பழக்கங்கள், பொருளியல் சிந்தனைப் போக்குகள்வரை தங்களுக்கென்று பல

தனித்தன்மைகளை இவர்கள் கொண்டு வாழத்தொடங்கினர். இலக்கிய வளர்ச்சிப்போக்கும் இந்தத் தனித்துவநெறி வழியிலேயே அமைந்தது.'[5]

### 3.1 ஈழத்தமிழர்கள்

பழந்தமிழர் இலக்கிய மரபில் இலங்கை 'ஈழம்', என்றே குறிக்கப்பட்டு வருகின்றது.

> 'ஈழமண்டல நாடெங்கள் நாடே' என்று பேசப்பட்டு வந்திருக்கிறது. ஈழத் தமிழிலக்கியத்தின் சமூக அடிப்படை, இலங்கையில் வாழ்ந்துவருகிற தமிழ் பேசும் மக்கள் திரளின் வாழ்க்கை அமைப்பேயாகும்.[6]
>
> இம்மக்கள் திரளில் மூன்று முக்கியப்பிரிவுகள் உள்ளன. அகமொழி, சமயப் பண்பாடு, சமூக அமைப்புமுறை என்பனவற்றின் அடிப்படையிலே இம்மூன்று பிரிவினரும் அமைகிறார்கள்.
>
> இவர்கள் இலங்கையின் வடகிழக்குப் பகுதியிலே பெரும் பான்மையினராக வாழ்கின்றனர். (முதல் வகையினர்). பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் பிரித்தானியரால் இந்தியாவிலிருந்து இலங்கையின் தேயிலை வரலாற்றுக்காலம் முதல் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகிற தமிழர்கள், ரப்பர் ஆகிய பெருந்தோட்டங்களுக்குக் கொண்டுவரப்பட்ட தென்னிந்திய தமிழர்கள் இரண்டாம் வகையினர். இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மத்திய பகுதியிலேயே தலைமுறை தலைமுறைகளாக வாழ்ந்துவருகிற இசுலாமிய சமயத்தினர்'[7] மூன்றாம் வகையினர். 'தமிழ்நாடு போலன்றி ஈழத்திலே முஸ்லீம் மக்கள் தமிழ்மொழி பேசினும் தம்மைத் தனி இனமாகக் கருதுகிற நிலையுள்ளது.'[8]

என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பண்பாட்டு அமைப்பில் இலங்கைத் தமிழர்கள் என அழைக்கப் படுபவர்கள் முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்களே. 1975-ஆம் ஆண்டின் இலங்கை மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி,

'இலங்கைத் தமிழர்கள் 11.2%, இந்தியத் தமிழர்கள் 9.3% இலங்கை முஸ்லீம்கள் 6.5% மொத்தம் தமிழ்மொழியைப் பேசுபவர்கள் 27% உள்ளனர்'[9] (ப.5).

.....'இலங்கை, சிறிலங்கா, சிலோன், தாமிரபரணி என்றெல்லாம் சொல்லப்படும் ஈழத்தின் தமிழிலக்கியம் 14-ஆம் நூற்றாண்டுடன் தொடங்குகிறது 'என்கிறார் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை. ஆனால், ஈழத்தின் வரலாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.'[10]

எனவே,ஈழம் குறித்தும் ஈழத்தின் தொன்மை வரலாறு,தமிழர்களின் இருப்பும் வாழ்வும் குறித்தும் மேற்கூறியவை சான்றாதாரங்களாக அமைகின்றன.

### 3.2 இலக்கியப் படைப்புகள்

தமிழியலின் பல துறைகளிலும் தமிழ்நாட்டு அறிஞர்களுக்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் இருந்தவர்கள் ஈழத்தமிழறிஞர்கள் எனில் அது மிகையாகாது.

பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்னர், இலங்கையின் வடபுலத்தை ஆட்சி செய்த ஆரியர்கள் காலத்தில் மருத்துவம், சோதிடம், பற்றிக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது... இந்தக் காலக் கட்டத்தில்தான் 'ரகுவம்சம்', 'கதிரைமலைப்பள்ளு', 'சரசோதிமாலை' ஆகிய நூல்கள் எழுதப்பட்டன.[11]

என்கிறார் கருணாகரன் (இலங்கைத் தமிழ்இலக்கியம்).

'கி.பி.1310-ல் போசராசரால் எழுதப்பட்ட 'சரசோதிமாலை' இலங்கையில் இன்று கிடைக்கிற காலத்தால் முந்திய தமிழ் நூல்'.[12] .......... கி.பி 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் 'யாழ்ப்பாண ராச்சியம்' உருவாகி 1619 வரை நீடித்தது.'[13]

பிறகு போர்த்துக்கேயரின் காலம்.

'ஐரோப்பியர் வருகையால் 'பள்ளு இலங்கியங்கள்' எழுச்சியடைந்தன. சைவ சமயத்திற்குப் போட்டியாக ஞானப்பள்ளு,வேதப்பள்ளு போன்ற கிறித்தவ இலக்கியங்கள் எழுதப்பட்டன'.[14]

என்கிறார் கருணாகரன் (இலங்கைத் தமிழ்இலக்கியம்).

*'1619 முதல் 1796 வரை போர்த்துக்கேயரும்,ஒல்லாந்தரும் இலங்கையின் பெரும் பகுதியை ஆட்சிசெய்தனர். இந்தக் காலப்பகுதியில் கிறித்தவ சமயம் பரவத் தொடங்கியது. கிறித்தவ சைவசமய இலக்கியங்கள் உருவாகத் தொடங்கின'[15](ப.6)*

என்பது கருணாகரன் கருத்தோடு ஒப்புநோக்கத்தக்கது.

*'ஒல்லாந்தர் காலத்தில் ஒப்பீட்டளவில் சமூக முற்போக்கு இலக்கியங்கள் உருவாகின. 'சின்னத்தம்பிப்புலவர், வரதபண்டிதர் உள்ளிட்ட பலர் சமகால நிகழ்ச்சிகள் பிரதிபலிக்கும் புராண இலக்கியங்களை உருவாக்கினார்கள். இதற்கிணையாகக் கிறித்தவ இலக்கியங்களும் எழுந்தன'[16]*

என்கிறார் கருணாகரன் (இலங்கைத் தமிழ்இலக்கியம்).

### 3.3 படைப்பாளர்கள்

தமிழ்மொழி வரம்பிகந்து அழிந்து ஒழியாமல் இலக்கண மரபைப் பாதுகாத்து வந்தவர் ஈழத்தமிழரே எனின் மிகையாகாது. பழந்தமிழ் இலக்கிய நூல்களை முதன் முதலில் பெருமளவில் அச்சிட்டு வெளியிட்ட மண் ஈழமண்.

*'பழந்தமிழ் நூல் பதிப்புக்குக் கால்கோள் செய்தவர் ஆறுமுகநாவலர். சுவர் எழுப்பியவர் சி.வை. தாமோதரனார் என்பது தமிழ்த்தென்றல் திரு.வி.க.குறிப்பு.'[17]*

ஆதலால், பதிப்புத் துறையின் முன்னோடியாக இருந்தது ஈழம் என்பது வெளிப்படை.

தமிழையும் சைவத்தையும் இருகண்களாகக் கொண்டு தொண்டாற்றியவரும் ஈழத்திலும் தமிழகத்திலும் நன்கு அறியப்பட்டவருமான 'ஆறுமுகநாவலர்' (1822-1879) தமிழில் உரைநடையைத் தொடங்கினார். மொழிபெயர்ப்புக் கலையில் ஈழத்தவர் தலைசிறந்தவர், யாழ்ப்பாணத்தமிழ் செந்தமிழ் என்பதைப் பைபிள் மொழிபெயர்ப்பு மூலம் நிலைநாட்டியவர் ஆறுமுகநாவலர்.

*'வசனநடை கைவந்த வல்லாளரான ஆறுமுகநாவலர், சைவத்தை யும் தமிழையும் வாழ்விக்க வந்தவராகக் கருதப்பட்டார்... கிறித்தவர்களுக்குத் தமிழ் போதித்ததோடு,பைபிளையும் தமிழிலே அழகுற மொழிபெயர்த்தார்... இவரது இலக்கிய, சமயப்பணிகள் தமிழரிடையே பண்பாட்டு இயக்கமொன்றினை உருவாக்கின.'[18]*

திருக்குறள் புரிமேலழகர் உரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, நன்னூல் விருத்தியுரை, நன்னூல் காண்டிகையுரை, சிறார்க்குப் பாலர் பாடவரிசை, இலக்கணச்சுருக்கம், இலக்கண வினாவிடை உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்த பெருமை இவரைச் சாரும்.

நவீனத் தமிழ்அச்சு, பதிப்புத்துறையில் ஈடிணையற்ற சாதனையைப் படைத்தவர் 'தமிழ்தந்த தாமோதரனார் என்றழைக்கப்படும் சி.வை.தாமோதரம் பிள்ளை (1832-1901)'[19] என்று ஆறுமுகப் பிள்ளையவர்களால் புகழ்ந்துரைக்கப் பட்டவரும் மற்றொரு ஆளுமையான பதிப்புத்துறையின் முன்னோடியாகத் திகழ்ந்தவருமான தாமோதரனார் என்று போற்றப்படும் இவர், இலங்கை, தமிழகம் உள்ளீட்ட நாடுகளில் ஏட்டுச்சுவடிகளைத்தேடி, செம்மைப்படுத்திப் பதிப்பித்தார். தொல்காப்பியம் முழுவதையும் பதிப்பித்ததோடு, இறையனார் அகப்பொருள், வீரசோழியம், இலக்கணவிளக்கம், கலித்தொகை, சூளாமணி ஆகியவற்றை முதன்முதலாகப் பதிப்பித்தவர் இவரே. கிறித்தவ சமயத்தொண்டர்களும் இவர்களுடன் போட்டியிட்டுப் பதிப்புத்துறையில் நூல்களை உருவாக்கியதோடு, பாடசாலைகள் நிறுவிப் படைப்பு மற்றும் அச்சு முயற்சிகளுக்கும் பெரும்பங்கை நல்கினர். இதனால்,

> 'இலங்கையில் உருவான இலக்கியங்களையும் ஆளுமைகளையும் கண்டு தமிழ்நாடே வியந்தது என்கிறார் சி.வையாபுரிப்பிள்ளை'[20]

மகாவித்துவான் சி.கணேசையர் தொல்காப்பியத்திற்கு உரைவிளக்கக்குறிப்புத் தந்தவர். தமிழ் மொழியே உலகம் தோன்றியபோது உண்டானமொழி என்று வாதாடிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 'தமிழ் அமைப்பு வரலாறு' 'சொற்பிறப்பு ஆராய்ச்சி' ஆகிய நூல்களைப் படைத்தவர். இந்தியக் கலைஆய்வில் உலகப்புகழ்பெற்ற ஈழத்தமிழர், பன்மொழிப்புலவர் ஆனந்தகுமாரசாமி, சொற்களின் தோற்றம், இலக்கிய ஆட்சியையும் காட்டிப் 'பேரகராதி' எழுதிய கு.கதிரைவேற்பிள்ளை, தமிழர் பெருமையை உலகறிய, 'ஆயிரத்து எண்ணூறாண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழர்' எனும் ஆய்வு நூலை வெளியிட்ட வி.கனகசபைப்பிள்ளை, சதுரகராதியை அடுத்து, யாழ்ப்பாண அகராதியை (மானிப்பாய் அகராதி) உருவாக்கிய சந்திரசேகர பண்டிதர், பதார்த்த விஞ்ஞானம் (1887), (மெடீரியாமெடிகா) பால வைத்தியம்(1889), பிரசவ வைத்தியம் (1892) வெளியிட்ட சுப்ரமணியபிள்ளை, பதினேழாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் 'தமிழ்ச்சங்கம்' நிறுவிய செகராசசேகரமன்னன், புலவர்

வரலாற்று நூல்களுள் முற்பட்டதாகிய ''Tamil Plutarch'' எனும் ஆங்கில நூலை இயற்றிய சைமன் காசிச்செட்டி(1807-1861), உலகத் தமிழாராய்ச்சி மன்றம் நிறுவி, உலகத் தமிழ் மாநாடுகள் நிகழக்காரணமான தனிநாயக அடிகளார், தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து ஆங்கில மொழிபெயர்ப்புடன் 'ஆங்கில- தமிழ் அகராதி' படைத்த பீற்றர் பெர்சிவல்(1873), ஈழத்தமிழ் இயக்கத்திற்கு வித்திட்ட த.பொன்னம்பலப்பிள்ளை, 'யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்' நிறுவிய த.கைலாசப்பிள்ளை(1898), நாடக நூலான 'மதங்க சூளாமணி' இசைத்தமிழ் நூலான 'யாழ் நூல்' இவற்றை இயற்றிய விபுலானந்த அடிகள், நுண்கலைப் பேராசிரியர் புன்னூலாசிரியர் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி உள்ளிட்ட பலரின் பெருமுயற்சியால் தமிழ்மொழி சிறப்பெய்தியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சரவணமுத்துப்புலவர் எழுதிய 'தத்தை விடு தூது' எனும் தமிழிலக்கியத்தில் பெண் விடுதலை முதன்முதலில் பேசப்பட்டது. 'பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்த

> 'பாரதிக்கு முன்னோடியாக, பாரதியாரே குறிப்பிடும் ஒருவராக[21] இருபதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய முதல்வராகப் புகழ்ந்துரைக்கப்படுபவர் பாவலர் துரையப்பாபிள்ளை (1872-1929) மகாகவி பாரதியின் சமகாலத்தவர்'.[22]

இவருடைய படைப்புகள் ஈழத்தின் படைப்பிலக்கியத்தினை ஒரு புதிய தளத்திற்கு இட்டுச் சென்றன எனலாம்.

ஐரோப்பியர் வருகையின் பின்னர், பூதந்தேவனார், சின்னத்தம்பிப் புலவர்(கவிதை), நவாலியூர் சோமசுந்தரப்புலவர், ஆசுகவி வேலுப்பிள்ளை ஆகியோர் ஈழ இலக்கியத்தின் முன்னோடிகளாக இருந்தனர்.

ஈழத்தமிழிலக்கியம் என்பது தமிழ்நாட்டின் இலக்கியமாகவே இருந்து வந்த நிலையில் நவீன இலக்கிய முயற்சிகள் கருக்கொள்ளத்தொடங்கின.

> 'ஆர்னால்டு சதாசிவம் பிள்ளை 1866-ல் தமிழ்ப்புலவர் சரித்திர நூலான 'பாவலர் சரித்திர தீபகம்'மும் 'நன்னெறிக் கதாசங்கிரகத்தை (சிறுகதை)யும் வெளியிட்டார். 1885-ல் அறிஞர் சித்திலெப்பை (1838-1898) 'அசன்பே சரித்திரம்' புதினம் வெளிவந்தது.'[23]

தொடர்ந்து பெண்எழுத்தாளர் மங்கள நாயகம் தம்பையாவின் 'நொறுங்குண்ட இதயம்' என்ற புதினம் வெளிவந்தது.

ஆக, அகராதித்துறை, சொல்லாய்வுத்துறை, மருத்துவத்துறை, இலக்கணம், இலக்கியம், இசை உள்ளிட்ட பல துறைகளிலும் ஈழத்தமிழறிஞர்களின் பங்கு மகத்தானது.

## 4.0 இதழ்களும் படைப்புகளும்

ஈழத்தில் வெளிவந்த இதழ்கள் பலவற்றின் வாயிலாகப் படைப்புகள் வெளிவரலாயின. புனைவிலக்கியத்தைப் பொறுத்தமட்டில் சிறுகதை மூலவர்களான இலங்கையர்கோன், (வெள்ளிப்பாதசரம், பாற்கஞ்சி), சம்பந்தன், சி.வைத்தியலிங்கம் ஆகியோர் படைப்புகளை 'ஈழகேசரி' என்ற பத்திரிகை ஆதரித்தது. இலக்கியம் மற்றும் சமூகவியல் சிந்தனைகளை விவாதிக்க, பரவலாக்க முனைந்த ஈழகேசரியில் வரதர், அ.செ.மு., அ.ந.கந்தசாமி, கனகசெந்தில்நாதன் உள்ளிட்டோர்தம் பங்களிப்பை நல்கினர் எனலாம்.

> 'ஈழகேசரியைத் தொடர்ந்து 'மறுமலர்ச்சி' என்ற இதழ் 1945ஆம் ஆண்டு'[24] (ப.9) இலக்கிய இயக்கமாகத் தீவிரமாகத் தொடங்கி இளைஞர்களின் வசன கவிதைக்கும் இடங்கொடுத்தது.

> 'மணிக்கொடிக் காலத்தை ஒத்தே ஈழத்தின் மறுமலர்ச்சிக் காலம் இருந்தது'.[25]

மறுமலர்ச்சியை அடுத்து, சிற்பி என்கிற சரவணபவன் 'கலைச்செல்வி' இதழைத் தொடங்கினார். 'ஈழகேசரிக்காலம்', 'மறுமலர்ச்சிக்காலம்', என்பதைப்போலக் 'கலைச்செல்விக் காலக்கட்டம்' என்ற ஒன்று உருவாகியது. பவானி ஆழ்வார்ப்பிள்ளை என்ற பெண் எழுத்தாளர் தொடங்கி அன்றைய இளைஞர்களான செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் ஆகியோரும் எழுதினார்கள். குறிப்பாகக் 'கலைச்செல்வி' காலக்கட்டத்தின் இளைஞரான செ.யோகநாதன் அவர்கள் குறிப்பிடத்தக்க எழுத்தாளராகத் திகழ்ந்தார்.

1940-களின் 'சுதந்திரன்' பத்திரிகையில் இடதுசாரிப் படைப்பாளர்களான டொமினிக் ஜீவா, டானியல் ஆகியோர் எழுதினார்கள். பின்னாளில் 'சுதந்திரன்' இனவாதப் பத்திரிகையாகி அரசியல், சமூக ரீதியான போராட்டங்களுக்கு, வெளிநாட்டவர்களுக்கு எதிராகவும், பிரதானப் பொருளாக இருந்த நிலைமாறி, சமூகத்தில் நிலவுகின்ற போலித்தனங்களையும் ஆச்சாரங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் பேசிய இலக்கியம் இடதுசாரி இயக்கங்களின் எழுச்சியோடு மாற்றுக் குரலாக ஒலிக்கத்தொடங்கியது. இந்த மாற்றுக்குரலுக்கான களம் அவசியமானதைத் தொடர்ந்து டொமினிக் ஜீவா தொடங்கிய 'மல்லிகை' இதழில் தமிழிலக்கியத்தில் முக்கிய ஆளுமைகளாகக் கருதப்படும் க.கைலாசபதி,

கா.சிவத்தம்பி உள்ளிட்டவர்கள் மார்க்சிய விமர்சனங்களோடு இயங்கிய இவர்களோடு செ.யோகநாதன் அவர்களும் எழுச்சியோடு பங்காற்றினார். தமிழின் முக்கியச் சிந்தனையாளரான மு. தளைய சிங்கம்,

'படைப்புகளில் அதீத புனைவுகளையும் வலிந்த யதார்த்தத்தையும் மறுத்து 'மெய்யுள்' என்ற இலக்கியக் கோட்பாட்டை முன்னிறுத்தினார்.[26]

சி.வை.தா., நாவலர், தருமு சிவராம் என்கிற பிரமிள், மலையக இலக்கியத் தோற்றம் உருவாகக் காரணமான சி.வி.வேலுப்பிள்ளை, கோ.நடேசய்யர் உள்ளிட்டோர் படைப்பாக்கங்கள் வெளிவந்தன.

## 5.0. அரசியலும் படைப்புகளும்

1948இல் இலங்கை விடுதலை பெற்றதைத்தொடர்ந்து தமிழ்-சிங்களச் சமூகங்களிடையே அதிகாரப்போட்டிகள் ஏற்படத் தொடங்கின. இரு சமூகங்களைச் சேர்ந்த தலைவர்களும் மக்களிடையே பிளவை ஏற்படுத்தினர். இது இனரீதியாக எதையும் அணுகுகிற நிலையை உருவாக்கியது. இலக்கியத்திலும் இத்தாக்கங்கள் இழையோடின. இதனால் தமிழ்த்தேசிய, தமிழ் இனமான உணர்வு அரசியலும் அதற்கான இலக்கியமும் ஏற்பட்டன.

## 5.1 ஈழப்பிரச்சினையும் இலக்கியமும்

'1946இல் தொடங்கிய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எல்லா எழுத்தாளர்களும் ஒன்றிணைந்து கலை இலக்கிய மேம்பாட்டிற்கு உழைப்பது என்ற கொள்கையைப் பிரகடனம் செய்தது'.[27]

1956-களிலும் ஈழத்தில் உருவாக்கப்படுகின்ற இலக்கியங்கள், ஈழமக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை அடிப்படையாக முன்வைக்க வேண்டும் என்ற கருத்தாக்கத்தால் மண்வாசனை, ஈழத்திலக்கியம் எனும் குரலே தேசிய இலக்கியம் என்ற கருத்தாக்கத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தது.[28]

'நமதுநாடு, நமதுமக்கள், நமதுஅரசியல், பொருளாதார அமைப்பு, நமதுகலாச்சாரப் பாரம்பரியம் முதலியவற்றைப் பிரதிபலித்து விளக்கமும், விமர்சனமுமாக அமையும் சிந்தனைகளும்,

உணர்வுகளும் இலக்கிய வளங்களாகத் தோன்ற வேண்டுமென்பதே தேசிய இலக்கியவாதத்தின் அடிப்படையாகும்'.[29]

என்கிறார் பேராசிரியர் க.கைலாசபதி. இதனால், முற்போக்கு எழுத்தாளர்கள் தனி அமைப்பாக இயங்கியதோடு, யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இலங்கை எழுத்தாளர் சங்கமாக மாற்றம் பெற்றது. இதன்தொடர்ச்சியாக 'யாழ் இலக்கிய வட்டம்' என்றொரு இலக்கிய வட்டம் செயல்படலாயிற்று. இந்நிலையில்,

'1956-ல் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை தாய்மொழியே பயிற்று மொழியாயிற்று'.[30]

தொடர்ந்து தேசிய முதலாளித்துவம் ஆட்சியைப் பிடித்தது. இடதுசாரி சிந்தனை மேலும் வலுப்பெற்று இலங்கையின் வலிமை வாய்ந்த எழுத்தாளர் சங்கம், தேசிய இலக்கியம் என்ற கோட்பாட்டை முன்வைத்தது.

1958இல் நடந்த இனக்கலவரமும் தமிழரசுக்கட்சியின் தோற்றமும் இதை இன்னும் தீவிரப்படுத்தின. இதில் அறிவியக்கமாக இடதுசாரிகளே முன்னிலை வகித்தனர். க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, எம்.ஏ.நுப்ஃமான், பின்னர் தில்லைநாதன், சிவசேகரம், நா.ரவீந்திரன் உள்ளிட்ட பலரும் செயல்பட்டனர். இத்தகு இலக்கியத்தின் புதியபோக்குகள் 'ஈழத்து இலக்கியம்' என்ற அடையாளத்தை நிறுவத்தொடங்கின.

கவிதையில் மஹாகவி, நிலாவணன், சண்முகம், சிவலிங்கம், சு.வே.முருகையன், தா.இராமலிங்கம் ஆகியோர்களும், புதின இலக்கியத்தில் டானியல், செ.கணேசலிங்கன் ஆகியோரும் சிறுகதை இலக்கியத்தில் டொமினிக் ஜீவா, எஸ்.பொ. நீர்வை பொன்னையன், கே.ரகுநாதன், பவானி, ஆழ்வார்ப்பிள்ளை என ஈழத்து இலக்கியங்கள் விரிவடைந்தன.

1960-களுக்குப் பிறகு எஸ்.பொ. அவர்களின் ஆர்வத்தாலும் முயற்சியாலும் கிழக்கு மாகாணத்தில் பல எழுத்தாளர்கள் சங்கங்கள் தோன்ற வழிவகுத்தன. 'மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கம்', 'கல்முனைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்', 'திரிகோணமலை எழுத்தாளர் சங்கம்', 'கிண்ணியாத் தமிழ் எழுத்தாளர் சங்கம்' ஆகியவற்றை இணைத்து, 'கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்' உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக எஃ.எக்ஸ்.ஸி. நடராசாவும் பொதுச்செயலாளராக எஸ்.பொ.வும் விளங்கினர். கிழக்கிலங்கையின் இலக்கிய வளர்ச்சிக்கு இது அடிகோலியது எனலாம். இன்னொரு பக்கத்தில்,

'இனப்பிரச்சினையும், இனப்போராட்டமும் தீவிரமடைந்தன. இலங்கையின் வடக்கே சாதி ஒடுக்கு முறைகளும், அவற்றுக்கெதிரான போராட்டங்களும் எழுந்தன. இந்தப்

> போராட்டங்களெல்லாம் புத்திலக்கியத்துக்கு வித்திட்டு, 'பஞ்சமர் இலக்கியம்' (தலித் இலக்கியம்) 'ஈழப்போராட்ட இலக்கியம்' என்ற அடையாளங்களோடு வெளியாகின.'[31]

பின்பு இது,

> தேசிய இன விடுதலைக்கான இலக்கியம், ஈழப்போராட்ட இலக்கியம், தனிநாட்டுக்கான-தமிழீழத்துக்கான கோரிக்கையும் போராட்டமும் பிரகடனப் படுத்தப்பட்டு, அரசியல் எழுச்சி உண்டாகியது.'[32]

> ...அரசியல் நெருக்கடிகள் அதிகரிக்க அதிகரிக்க, படைப்புகளிலும் அதன் தாக்கம் கூடியது. தீயும் புகையும் கண்ணீரும் குருதியும் வாழ்க்கையில் நிகழும்போது அதன் தாக்கமும் பிரதிபலிப்பும் படைப்புகளில் இருந்தே தீரும் என்ற நிலை உண்டானது. இந்தப் போக்கு சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திலும் இருந்தது'[33]

பிறகு யுத்தத்தின் தொடக்ககாலமாகி, ஆயுதப்போராட்டம் சர்வதேசப் போராட்டம் மீதான கவனத்தைக் குவித்தது. பெனடிக்பாலன், நீர்வை பொன்னையன் ஆகியோர் இணைந்து தமிழரசுக் கட்சியின் கட்சிப்பத்திரிகை விற்கவும் ஊர்வலங்களிலும் பங்குபெற்றனர். கட்சியின் ஆதரவோடு 'வசந்தம்' என்ற இதழைத்தொடங்கி முற்போக்கு எழுத்தாளர்களுக்குத் தளமமைத்துக் கொடுத்தனர். முற்போக்கு அணியிலிருந்த செ.யோகநாதன், செ.கதிர்காம நாதன், செம்பியன்செல்வன், செங்கைஆழியான், கயிலாசநாதன் மற்றும் க.சண்முகலிங்கம், இ.சிவானந்தம், சி.மௌனகுரு, ச.முத்துலிங்கம் ஆகியோர் விமர்சகராகவும் உற்சாக மூட்டுபவராகவும் படைப்பாளர்களாகவும் விளங்கினர்.

போர்ச்சூழலில் நாவல், சிறுகதை, உள்ளிட்ட படைப்புகள் எழுதமுடியாத நிலையில் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் என்ற நிலையில் கவிதைகளாகத் தங்கள் படைப்புகளைப் படைத்தனர்.

பெண்கள் பலரது படைப்புகளும் வெளிவந்தன. 'சொல்லாத சேதிகள்' என்ற கவிதைத்தொகுப்பைக் குறிப்பிட்டுச்சொல்லலாம். ஊர்வசி, மைத்திரேயி, சிவரமணி, செல்வி, ஔவை எனப் பலரும் எழுதிவந்தது குறிப்பிடத்தக்கது.

அலை, களம், வயல், கவிஞன், புதுசு, சமர் என்று ஏராளமான இதழ்கள் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து படைப்புகளைத் தாங்கி வெளிவரலாயின.

### 6.0 இசுலாம் படைப்புகள்

ஈழப்போராட்டம் ஈழப்போராக மாறியபோது அது முஸ்லிம்களை நெருக்கடிக்குள்ளாக்கியது. இதனால்,முஸ்லிம்கள் தங்களுடைய இருப்பை, அடையாளத்தை முன்னிறுத்த இலக்கியங்களைப் படைத்தனர். குறிப்பாக எஸ்.எல்.எம். ஹனீபா, மன்சூர் என ஏராளமானோர் எழுதினர். இதனால் 'முஸ்லீம் இலக்கியம்' என்ற தனி அடையாளத்தோடு வெளிவந்தது. குறிப்பாக 'ஈசான்கட்டைப்பாடல்களை' (கவிதை) எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். 'மரணத்துக்குள் வாழ்வோம்' என்ற கவிதைத்தொகுப்பு சிங்கள இனவொடுக்கு முறைக்கும் அதற்கு எதிரான போராட்டத்துக்கும் எப்படியொரு அடையாளமாகியதோ, அதைப்போன்று தமிழ் ஒடுக்குமுறைக்கும் முஸ்லிம்களின் எதிர்ப்புக்கும் 'ஈசான் கட்டைப்பாடல்கள்' அமைந்தன எனலாம்.

### 7.0 புலம்பெயர்ந்தோர் இலக்கியம்

இலங்கை இனக்கலவரங்கள் உச்சகட்டத்திற்குப் போனபோது நிறையத் தமிழர்கள், குறிப்பாக இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். தங்களது மனக் கொதிப்புகளையும் உணர்வுகளையும் படைப்புகளாக்கினர். இதன் விளைவாகப் 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' என்றொரு வகைமை இலக்கியம் உருவாகியது.

### 7.1 மலையகத் தமிழர் இலக்கியம்

தென்னிந்தியாவிலிருந்து தோட்டத்தொழிலாளர்களாக இலங்கைக்குச் சென்ற தமிழர்களே மலையகத் தமிழர்கள். 'மலையகத் தமிழர்கள் வாழ்வைப் பொறுத்தவரை 1920 முதல் 1940 வரை முக்கியமான காலமாகும்'... தொழிற் சங்கவாதியாகவும் பத்திரிகையாளராகவும் விளங்கிய கோ. நடேசைய்யர் மலையக மக்களின் வாழ்வை(சிறுகதைகள்)ப் படைப்பாக்கினார்.

> '1948இல் மலைநாட்டு மக்களின் குடியுரிமைச் சட்டம் வஞ்சகமாகப் பறிக்கப்பட்டதை எதிர்த்து இலக்கியங்களில் எதிர்க்குரல் கொடுத்தார் இவர்.[34]
>
> மேலும் மலையக இலக்கியத்தின் முன்னோடிகளாக என்.எஸ்.எம். இராமையா, கே.கணேஷ், மலரன்பன், சி.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் விளங்கினர். குறிப்பாகத் 'தோட்ட மஞ்சரி'இதழுக்குப் பொறுப்பாயிருந்த எஸ்.எம். கார்மேகம் மற்றும் கருப்பையா, செந்தூரன் ஆகியோர் 'மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்' ஏற்படுத்தி இலக்கியப் பணிகள் செய்தனர். 'கொழுந்து', 'குன்றின் குரல்', 'மல்லிகை' ஆகிய இதழ்கள்'[35] மலையக எழுத்தை வளர்ப்பதில் முக்கியப் பங்குவகித்தன.

## முடிவுரை

தமிழியலின் பல துறைகளிலும் தமிழ்நாட்டு அறிஞர்களுக்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் ஈழத்தமிழறிஞர்கள் இருந்துள்ளனர்.

தமிழ்மொழி வரம்பிகந்து அழிந்து ஒழியாமல் காத்தவர் ஈழத்தமிழரே. இலக்கண மரபைப் பாதுகாத்து வந்தவரும் ஈழத்தமிழரே. பதிப்புத்துறையை உருவாக்கிப் பழைமையான தமிழிலக்கிய, இலக்கண நூல்களைப் பதிப்பித்த தமிழிலக்கிய நூற்செம்பதிப்பு முன்னோடிகளும் ஈழத்தவரே. அகராதி உருவாக்கம் (சொற் பிறப்பு ஆராய்ச்சி) செய்த அறிஞர் பெருமக்களும் ஈழத்தமிழரே. உலகத் தமிழாராய்ச்சி மன்றம் நிறுவியதோடு, உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெறக் காரணமானவரும் வழிகாட்டியவரும் ஈழத்தவரே. முற்போக்குத் தமிழ்ச்சங்கம் உள்ளிட்ட தமிழ்ச்சங்கங்கள் பல நிறுவிச் செம்மாந்த செந்தமிழுக்குச் சிறப்புத்தொண்டாற்றி வருகின்றவர்களும் ஈழத்தவரே. உரைநடை வளர்ச்சிக்குத் தளமமைத்துத் தந்தவர்களும் ஈழத்தவரே. ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி, சுதந்திரன் உள்ளிட்ட சிறந்த இலக்கிய இதழ்கள் குறித்த இவர்களின் பணிகள் இயம்பத்தக்கவை. பஞ்சமர் இலக்கியம், புலம்பெயர்ந்தோர் இலக்கியம், மலையகத் தமிழிலக்கியம், இசுலாமியப் படைப்புகள் என ஈழத்தமிழிலக்கியப் பரப்புகள் விரிவடைந்துள்ளன. தமிழ்ச்சொற்பிறப்பியல் ஆய்வாளர், இலக்கண, இலக்கியப் புலமைத் தகைமையாளர், சைவ நாடகத்துறை வல்லவர், உலகப்புகழ்பெற்ற இந்தியக்கலை வல்லுநர், இந்திய வரலாற்றுப் பேரறிஞர், பல்துறைவல்ல நூலாசிரியர் என ஈழத்தமிழர்கள் தமிழிலக்கியத்திற்குச் செய்த தொண்டு போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதெனின் அது மிகையாகாது.

## குறிப்புகள்

1. இளங்குமரனார், இரா. **தமிழுக்குத் தொண்டு செய்த தமிழீழ அறிஞர்கள்**, பக்.59,60.
2. மேலது, ப.57.
3. மேலது, ப.7.
4. சுந்தரலட்சுமி, யோ. யோகநாதன், செ. **வெள்ளிப்பாதசரம்**. (இந்த நூற்றாண்டின் ஈழத்துச்சிறுகதைகள்) (ப.3 ) (தொகுப்பாசிரியர்கள்).
5. மேலது, ப.3.
6. மேலது, ப.4.
7. மேலது, ப.4.

8. கலாநிதி யோகராசா, **ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும்**, ப.28.

9. சுந்தரலட்சுமி, யோ. யோகநாதன், செ. **வெள்ளிப்பாதசரம்.** (இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்) (ப.5) (தொகுப்பாசிரியர்கள்).

10. கருணாகரன், **இலங்கையின் தமிழ் இலக்கியம்**-(February-1,2015.2 comments).

11. மேலது.

12. சுந்தரலட்சுமி, யோ. யோகநாதன், செ. **வெள்ளிப்பாதசரம்.** (இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்) (ப.5) (தொகுப்பாசிரியர்கள்).

13. மேலது, ப.5.

14. கருணாகரன், **இலங்கையின் தமிழ் இலக்கியம்**-(February-1,2015.2 comments).

15. சுந்தரலட்சுமி, யோ. யோகநாதன், செ. **வெள்ளிப்பாதசரம்.** (இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்) (ப.6) (தொகுப்பாசிரியர்கள்).

16. கருணாகரன், இலங்கையின் தமிழ் இலக்கியம் (February-1,2015.2 comments).

17. இளங்குமரனார், இரா. **தமிழுக்குத் தொண்டு செய்த தமிழீழ அறிஞர்கள்.** பக்.59,60.

18. சுந்தரலட்சுமி, யோ. யோகநாதன், செ. **வெள்ளிப்பாதசரம்.** (இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்) (ப.7) (தொகுப்பாசிரியர்கள்).

19. மேலது.

20. கருணாகரன், **இலங்கையின் தமிழ் இலக்கியம்** (February-1,2015.2 comments).

21. மேலது.

22. சுந்தரலட்சுமி, யோ. யோகநாதன், செ. **வெள்ளிப்பாதசரம்.** (இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்) (ப.8) (தொகுப்பாசிரியர்கள்).

23. மேலது, ப.7.

24. மேலது, ப.9.

25. கருணாகரன், **இலங்கையின் தமிழ் இலக்கியம்**-(February-1,2015.2 comments).

26. மேலது.

27. சுந்தரலட்சுமி, யோ. யோகநாதன், செ. **வெள்ளிப்பாதசரம்.** *(இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்) (பக்.10) (தொகுப்பாசிரியர்கள்).*

28. மேலது, பக்.10,11.

29. மேலது, ப.11.

30. மேலது.

31. கருணாகரன், **இலங்கையின் தமிழ் இலக்கியம்** *(*February-1,2015.2 comments*)*.

32. மேலது.

33. யோகநாதன், செ. **மேலோர் வட்டம்**, ப.6.

34. சுந்தரலட்சுமி, யோ. யோகநாதன், செ. **வெள்ளிப்பாதசரம்.** *(இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்) (ப.13) (தொகுப்பாசிரியர்கள்).*

35. மேலது, ப.14.

## இணைய இதழ்கள்

1. அம்பலம். *(இணைய இதழ்.)* htt:www.ambalam.com/idhal/special/2001/april/special/5.02.html.

2. சுரதா யாழ்வண்ணனின் 'ஆயுதம்' வலைப்பதிவு.

3. https/ta.wikipedia.org/s/bol5

4. கருணாகரன், **இலங்கைத் தமிழ் இலக்கியம்** (February 1, 2015, 2, comments).

5. **தேசிய தமிழ் சாகித்திய விழா-1968 சிறப்புமலர்.**

6. அந்தனி ஜீவாவின் 'கொழுந்து'

7. டொமினிக் ஜீவாவின் **'மல்லிகை', 'குன்றின் குரல்'.**

8. 'எழுபதுக்குப்பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள்', **தேசியம்,** யாழ்ப்பாணம், 19.03.2000.

9. 'எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்', **அலை,** நவம்பர்-திசம்பர்-1976.

# 10. Folklore as an academic discipline

*S. Sakthivel*

Folklore is relatively a new science. In our country it is still in its infancy by and large, an unexplored area of study. For the past few years tremendous work has been done in the collections. Attempts to analyse the collected materials are of very recent origin. In India recently Folklore is recognized as an academic discipline and independent status in the four Indian Universities. Tamil University is one among them. Folklore has become object of research in many Universities and more than thousand research scholars are working on different aspects of Indian Folklore in different Universities in India. Once it was a part of Indology, Anthropology and faculty of Indian languages. Now it has developed as an independent academic discipline in India. Attempts are made to study this subject seriously.

William John Thoms was the first scholar who coined the term 'Folklore' in 1846 to replace 'popular antiquities' and 'popular literature'. After the word was coined, systematic research has begun. The early 19th century saw the beginnings of a more serious approach to the subject. The striking similarities of customs, ideas and popular tales in the world began to be realised for the first time and the necessity for a more careful and detailed inquiry into the problems of origin was recognized. In Germany Jacob and Grimm laid the foundations for the scientific study of folk tales and superstitions in their Kinder und Hausmarchen (1814) and Deutsche Mythologie (1835). Grimm Brothers were real founders of science of folklore. The entire conceptual frame work of Jacob Grimm in the field of folkloristics gradually began to be known as 'mythological theory' and it was reshaped later by Max Muller. When folklore first began to be seriously studied, the distinction between social anthropology and folklore was not clearly distinguished. Both deal with human aspects of culture and both were affected by the evolutionary theories. Hartland defined folklore 'as anthropology dealing with the psychological phenomena of uncivilized man'. Andrew Lang called it the science of survivals using that term in the specialized sense in which E.B. Tylor

---

***Dr. S. Sakthivel,** Former Professor of Folklore, Tamil University, Thanjavur, Tamil Nadu.*

had first used in his 'Primitive culture' (1871). Tylor's doctrine of 'Survivals' had a more lasting effect upon the trend of folklore studies. Lawrence Gomme, Andrew Lang, Charlotle Burne, E.S. Hartland and other distinguished folklorists were influenced by it. Sir. James Frazer in his golden Bough (1890) innumerable examples of parallel beliefs and ritual from all over the world were assembled to show the existence in modern peasant tradition of survivals of primitive vegetation cult. Diffusionists believe that culture contacts to be the main explanation of peasant beliefs and customs and the survivalists who attributed them to the processes of folk memory and to oral tradition handed down through the ages. Stith Thompson who translated Aarne's work, did not indulge in finding new types. Thompson's method of extracting a motif can be roughly outlined; he sees motifs on three levels actors, items and action. The historic-geographic method with its accessiories: Tale type and motif indexes did a service to folktale scholarship as glottochronology did to the dating of languages. So Finnish method the date and place of a tale becomes possible. Theoretical orientation has developed in the hands of T.Benfey, Max Muller, Andrew Lang, Frazer and many others. Folklore later tagged along with historical science by the scholars like Kaarl Krohn, Alexander Krappe, Stith Thompson and others and this concept received wide recognition all over the world. Folklore received a great impetus from the contributions made to its study by Anthropologists, Sociologists, Psychoanalysts, Historians and Linguists.

The scope of folklore has been widened in many ways since it was first lifted out of the hands of amateur antiquaries and casual observers. Old customs disappear and superstitions vanish with new techniques and knowledge, but ancient forms of thought are reappearing in a new guise. Certain aspects of material culture formerly excluded from the folklore field are now accepted as an essential cognate study. Of late years it has been appreciated that a knowledge of folklife in general including its material background are the true concern of the folklorists. An increased enthusiasm in the collection of folk life accessones and the rise of the modern folk museums in Scandinavia, Wales, Germany, Austria and elsewhere are indications of this change of view point. Conceptual frame work of various schools that guide the folklorists in the analysis of folklore materials. This disprove the notion that folklore lacks theoretical background and a scientific methodology.

**Mythological School**

Jacob Grimm's theoretical advances inspired a good number of European and folklorists towards further investigation of European and Asian folklore. Max Muller shaped Grimmian theoretical concept into 'school' Max Muller explains not only 'proto' forms of germanic or Indic mythologies but also went further to explain

the phenomenon of myth creation. Mythological theory was established in the middle of 19th century. Mythological school is also known as `Comparative school' and 'Indic School'. Indic school dealswith subject from the traditional point of view.

**Benfey's school (migrational theory)**

Theoder Benfey, a German Indologist translated pancha tantiram and worked towards a 'new theory of borrowing'. He traced the history and geographical routes of tale, according to Benfey, travelled from India to Mediterranean sea, to far west, to Spain to Greek archipalogo and finally to Europe.

**Anthropological School**

Anthropological School is interested in the intensive analysis of cultural pattern. The cultural resemblance could not be explained in terms of inheritance nor migration of borrowing. The followers of anthropological school believed that all men evolved in one evolutionary path through absolutely identical stages of savagery, barbarism and civilization. Savagery may be exempted by Australian aboriginal culture, where as civilization was symbolised by England. Incest taboo is the beginning of culture (Tylor).

**Finnish School (Historical-geographical)**

Benfey theory developed and adopted reconstruction method the original form of tale and probable route by which the tale might have travelled. By this method, to reduce a particular tale to statistical abstraction was done by breaking into traits and subtraits. This method is considered to be most scientific methodology in the area of historical folklorists.

**Psycho analytical School**

Psycho analytical School is interested in the analysis of folklore as a form and function of human mind. When Max Muller school tried to explain in terms of heavenly phenomena psycho-analytical school did by sexual symbolism. Sigmund Freud analysed myths and folktales to show oedipus complex. Dream is unfulfilled desire of individual whereas myth is unfulfilled desire of society. These are explained through Psycho-analytical interpretations.

**Structural School**

The most influential theory emerged during 1960's was structuralism. It is turning point in the study of folklore. Real beginning of structuralism appeared with Vladmir Propp's **Morphology of folktales**. Propp's model still remains the model for the analysis Syntagmatic features of tales. Maranda applies paradigmatic based upon Levi Strauss theory, followed paradigmatic structural analysis of Levi Strauss.

History of folkloristics had passed through collective Descriptive, Comparative and now entered into pre-structural and post structural.

Folklore can be studied as an academic discipline like any other discipline.

## 11. உளவியலும் தமிழாய்வும்

**சோ. ந. கந்தசாமி**

தமிழ் ஆராய்ச்சியில் பல்துறை அறிவும் பன்மொழிப் புலமையும் படைத்த அறிஞர்களின் அரிய உழைப்பினால் பல புதிய அணுகுமுறைகளும் விளக்கங்களும் கிடைத்து வருகின்றன. இலக்கியத்தைச் சமூகவியல், வரலாற்று இயல், சுயசரிதையியல், இலக்கியவியல் முதலிய பல்வேறு துறைகளின் வெளிச்சத்தில் ஆராய்வது இக்காலத்தில் ஆங்காங்குக் காணப்படுகிறது. மேற்சுட்டிய அணுகுமுறைகளுடன் உளவியல் அணுகு முறையும் ஒரு சிலரால் மேற்கொள்ளப்பெற்று வருதல் குறிப்பிடத்தக்கது.

இலக்கியம் படைப்பாளர்களின் உள்ளத்தில் தோன்றிப் புறத்தே வடிவம் கொள்கிறது. புறத்திற்கும் அகத்திற்கும் பிரிக்க முடியாத ஒரு நெருக்கம் இருக்கிறது. எனவே, படைப்பாளரின் உளவியலும் அவரால் படைக்கப் பெறும் கதை மாந்தர்களின் உளவியலும் படிப்பவரின் உளவியலும் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய தேவை திறனாய்வாளர்களுக்கு ஏற்படுகிறது. ஆதலின், உளவியல் பற்றிய பொதுவான சில கருத்துகளை முதற்கண் நாம் அறிந்து கொள்ளுதல் நல்லது.

உளவியல் துறைக்குக் கிரேக்க அறிஞர்கள் நிரம்பப் பாடுபட்டுள்ளனர். டெல்பி கோயிலின் சுவர்களில் "Know thyself" (உன்னை அறிந்துகொள்) என்ற பொன்மொழி பொறிக்கப்பெற்றுள்ளது. தன்னையும் தன் உள்ளத்தின் தன்மையையும் ஒருவர் தெரிந்துகொள்வதின் வாயிலாகத் தெளிவினைத் தரமுடியும். மணிவாசகர், "நானார் என் உள்ளமார் ஞானங்களார் என்னை ஆரறிவார்" என்று வினவுதல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. 'Psychology' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'The study of psyche' என்பது பொருளாகும். 'Psyche' என்ற சொல் தொடக்க காலத்தில் உயிரைக் குறித்தது. பின்னரே மனித உடலில் உயிர் என்பதாக ஒன்றுமில்லை. உள்ளமே உள்பொருள் என்ற முடிவுக்கு வந்ததும், psyche என்ற அதே சொல் மனத்தைக் குறித்தது. இடைக்காலத்தில் ஐரோப்பிய ஞானிகள் கண்டறிந்த இந்த உண்மையை 2500 ஆண்டுகட்கு முன்பு புத்தர்பிரான் அறிந்து உணர்த்தியிருக்கிறார். உடல்கூறுகளாகிய ரூபமும் உள்ளக்கூறுகளாகியநாமமும்சேர்ந்த வடிவம்தான் மனிதன் என்பதால், நாமரூபம் என்ற பெயரினால் மனிதனைக் குறித்தார். உள்ளத்திற்கு அப்பால்

---

*முனைவர் **சோ.ந. கந்தசாமி**, மேனாள் தமிழ்ப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.*

ஆன்மா என்பதாக ஒரு பொருள் இல்லை என்று நிலைநாட்டியதால் அவர் கொள்கை அநான்மவாதம் என்று பெயர்பெற்றது.

கிரேக்க ஞானிகளில் தலைசிறந்த பிளேட்டோ உயிரியல் உளவியலை (Biological Psychology) உருவாக்கினார். அவர் கருத்தின்படி மூளையில் மனமும் (mind), இதயத்தில் உறுதியும் (will), வயிறு அல்லது கல்லீரலில் பசியும் ஆசைகளும் பொருந்தியுள்ளன எனலாம். அவர் மாணவர் அரிஸ்டாட்டில் செயற்பாட்டு உளவியலை (Functional Psychology) வரையறுத்துக் கூறினார். உள்ளத்தில் அடங்கிக் கிடக்கும் உணர்ச்சிகள் யாவும் அழுகை முதலான செயல்களின் மூலம் வெளிப்பட்டு விடுவதால் உள்ளம் சுத்திகரிக்கப்படுகிறது என்று எண்ணினார். பெரும்பாலும் அவல நாடகங்களைப் படிப்போரும் பார்ப்போரும் கதைப் போக்கிலும் கதை மாந்தரின் செயல்களிலும் ஈடுபட்டுத் தங்களையே மறந்து கண்ணீர் வடிப்பதால் மனமாசு நீங்குகின்றனர் என்று கருதலாம். இவர்தம் கொள்கையினை உணர்ச்சிச் சுத்திகரிப்பு (Emotional Catharsis) என்று கூறுவர். பெரும்பாலும் காப்பியங்கள், நாடகங்கள், தெருக்கூத்துக்கள் முதலியவற்றின் விளைவாக இத்தகைய மனத்தூய்மை மக்களுக்கு வாய்க்கிறது.

அரிஸ்டாட்டில் காலத்திற்குப் பிறகு உளவியலில் பல்வேறு சிந்தனைகள் எழுந்துள்ளன. கி.பி.17ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ஜான் லாக் (John Locke) என்ற ஆங்கிலத் தத்துவஞானி உள்ளத்தினை ஒரு வெள்ளைத்தாளுடன் ஒப்பிட்டார். தூண்டல், துலங்கல் ஆகிய செயல்களினால் உள்ளமாகிய தாளில் உணர்வுகள் பொறிக்கப்படுகின்றன என்று எண்ணினார். டெஸ்கார்ட்டஸ் (Descartes) போன்ற மேதைகள் மனத்தின் ஆற்றல்களை விரிவாக ஆராய்ந்தார்கள். விருப்பாற்றல், அறிவாற்றல், செயலாற்றல், உணர்வாற்றல் என்ற நான்கும் உள்ளத்தின் நான்கு வேறு பகுதிகளிலிருந்து உதிப்பன என்று கண்டனர். இந்நால்வகை ஆற்றல்களும் உள்ளத்தின் நான்கு வேறு பகுதிகளிலிருந்து தோன்றுதலின், அப்பகுதிகளை விழைவுப் பகுதி (Volitional side), அறிவுப்பகுதி (Cognitive side), செயற்பகுதி (Conative side), உணர்வுப்பகுதி (Affective side) என்று நான்காகப் பாகுபாடு செய்தனர். இவற்றுள் முதல் மூன்றையும் இந்திய உளவியலார் இச்சை, ஞானம், கிரியை என்ற பெயரினால் வழங்கினர்.

அண்மைக் காலத்தில் விளங்கிய தத்துவமேதை C.E.M. Joad என்பவர் உள்ளத்தைப் பற்றிக்கூறும் ஒரு கருத்தினைக் காண்போம்:

> "தொடர்ந்து வரும் உணர்வுதான் மனித ஆளுமையாகிய நூற்கண்டினைத் தோற்றுவிக்கின்றது. உணர்வு என்பது ஓடும் ஆற்றினைப் போன்றது. வேகமாகவும் மெதுவாகவும் செல்வது ஆற்றின் இயல்பு. அதுபோல் உள்ளமும் விரைந்தும் விரையாதும் இயங்க வல்லது. மேடு பள்ளங்களில் தாவிச் செல்லும் ஆற்றினைப் போலவே உள்ளமும் பல பொருட்களின்மேல் தாவிச் செல்கிறது. சமவெளியில் அமைதியாகச் செல்லும் ஆற்றினைப் போலவே உள்ளமும் சில நிலைகளில் அமைதியாக இயங்குகிறது."

இவ்வாறு ஜோட் கூறும் கருத்திற்கு அடிப்படை புத்தரின் போதனையில் காணப்படுகிறது. கணந்தோறும் மனிதனின் உணர்வுகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. உணர்வுகளின் மாற்றத்தினால் மனிதனும் மாறிக்கொண்டே இருக்கிறான். எனினும், இடையறவு படாமல் தொடர்ந்துவரும் தொடர்ச்சி காரணமாக மனிதன் ஒருவனாகக் காட்சி தருகிறான். இதற்கு ஓடும் ஆற்றையும் சுடர்விடும் தீபத்தையும் புத்தர் உவமை கூறினார். கணந்தோறும் ஓடும் நீர் மாறிக் கொண்டே இருப்பினும் தொடர்ச்சியின் காரணமாக ஒரே ஆறு ஓடுவதாகக் காட்சி தருகிறது. அது போலவே, கணந்தோறும் எரியும் சுடர் மாறிக் கொண்டேயிருப்பினும் தொடர்ச்சியின் காரணமாக ஒரு தீபமாகவே காட்சியளிக்கிறது. இத்தகைய உவமைகளின் வாயிலாக உள்ளத்தின் தொடர்ச்சியைத் தெள்ளத் தெளிவாகப் புத்தர் விளங்கவைத்தார்.

**மும்மூர்த்திகள்**

உளவியல் துறையில் சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் மும்மூர்த்திகள் தோன்றியுள்ளனர். அவர்கள் சிக்மன்ட் பிராய்ட் (Sigmund Freud), கார்ல் யுங் (Carl Ung), ஆல்பிரட் அட்லர் (Alfred Adler) என்போராவர். இவர்கள் உளவியல் துறையில் புதிய சாதனைகளைப் புரிந்தவர்கள். இம்மூவருள் பிராய்ட் மிகவும் முக்கியமானவர். இவர் உளவியல் பகுப்பாய்வு (Psycho-Analysis) என்னும் கொள்கையை உருவாக்கியவர். இவர் பெரிய மருத்துவர். உடலியல் காரணங்களினால் விளக்கமுடியாத பல நோய்களை உளவியல் காரணங்களால் விளக்கித் தீர்வு கண்டவர். இவர் மனத்தினைப் புறமனம் அல்லது விழிப்பு

நிலை (Ego or Conscious), அடிமனம் அல்லது நடுமனம் (The Sub-Conscious or Id or Libido), ஆழ்மனம் (Super-Conscious) என்று மூன்றாகப் பாகுபடுத்தினார். மனிதனின் நிறைவேறாத ஆசைகள் அடிமனத்தில் அமுங்கிக் கிடந்து கனவுகளாக வெளிப்படுகின்றன என்று விளக்கினார். பாலுணர்வுதான் (Sexual Urge) மனிதனின் எவ்வகைச் செயலுக்கும் அடிப்படையான உந்துசக்தி என்று எண்ணினார். மனநோய்களை உளவியல் பகுப்பாய்வினால் குணப்படுத்தும் முறைகளை ஆராய்ந்தார்.

யுங் என்னும் சுவீடன் நாட்டறிஞர் பிராய்டின் ஒருசாலைத் தோழர். எனினும் கருத்து வேறுபாட்டினால் உளவியலில் தனிக் கொள்கைகளை வகுத்தார். மக்களின் போக்குகளை அடிப்படையாக வைத்து, 1. உள்நோக்கினர் (Introvert) 2. புறநோக்கினர் (Extrovert) என்று இருவகையாகப் பகுத்தார். முன்னவர் மற்றவர்களுடன் கலந்து பழகாத போக்கினர் என்றும் பின்னவர் அனைவருடனும் கலகலப்பாகப் பழகும் இயல்பினர் என்றும் இனங்கண்டார். இவர் பகுப்பாய்வு உளவியல் (Analytical Pshychology) என்னும் கோட்பாட்டை நிறுவியவர்.

மேற்சுட்டிய இருவருடனும் ஒருகாலத்தில் பணி செய்தவர் அட்லர் ஆவார். இவர் தனிநபர் உளவியல் (Individual Psychology) என்னும் கொள்கையை உருவாக்கியவர். மனிதனின் செயல்களுக்குப் பாலுணர்வு காரணமில்லை என்றும் உயர்வு மனப்பான்மைக்குரிய உந்து சக்தியே மனிதனைச் செயல்புரியத் தூண்டுகிறது என்றும் கண்டறிந்தார். தாழ்வு மனப்பான்மையின் எதிர்வினையும் மனிதனின் செயல்களுக்குக் காரணம் என்று கருதினார்.

மனிதனின் நடத்தைகளுக்கு உடலியல் அடிப்படையாய் இருத்தலை ஆராயும் துறையினை உடலியல் உளவியல் (Physiological Psychology) என்று வழங்குவர். மனிதச் செயல்களில் மூளையும் எஞ்சிய நரம்பு மண்டலமும் செயல்படுமாற்றை இந்த உளவியல் பிரிவு விளக்குகிறது. சமூக உளவியல் (Social Psychology), கல்வி உளவியல் (Educational Psychology) முதலிய பல்வேறு பகுதிகள் இக்காலத்தில் வளர்ந்து வருகின்றன.

உளவியல் ஒரு தனித்துறை. இலக்கியம் ஒரு தனித்துறை. உளவியல் அறிவினை அடிப்படையாகக் கொண்டு இலக்கியத்தினை ஆராய்வதற்குரிய நெறிமுறைகளை மேலைநாட்டுத் திறனாய்வாளர் சிலர் வரையறுத்துள்ளனர். மேலும், நம் இலக்கிய மரபுக்கு ஏற்றாற்போல் அவற்றைப் பின்பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டியது ஆய்வாளரின் பொறுப்பாகும்.

## 12. கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூல்: சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பில் நீக்கப்பட்ட மொழியியல் கருத்துக்கள்

கோ.பாலசுப்ரமணியன்

*முன்னுரை*

*1856இல் இராபர்ட் கால்டுவெல்லின்* **A Comparative Grammar of Dravidian or South Indian Family of Languages** *எனும் நூல் வெளிவந்தது. கால்டுவெல் அவர்களாலேயே திருத்தப்பட்டுப் பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1875இல் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது. ஜே.எல்.வயட், டி.ராமகிருஷ்ணபிள்ளை ஆகியோரால் திருத்தப்பட்டுச் சில பகுதிகள் நீக்கப்பட்டு இந்நூலின் மூன்றாம் பதிப்பு 1913இல் மீண்டும் இலண்டனிலிருந்து வெளியிடப்பட்டது. இந்த மூன்றாம் பதிப்பை மறுபதிப்பாகச் சென்னைப் பல்கலைக்கழகம் 1956இல் வெளிக்கொண்டுவந்தது. முந்தைய தலைமுறையைச் சார்ந்த பெரும்பான்மையான திராவிட மொழியியல் ஆய்வாளர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பதிப்பையே தமது ஆய்வுக்குத் துணையாகக் கொண்டுள்ளனர் என்பது அவர்களது துணைநூற்பட்டியலில் இருந்து தெளிவாகிறது.*

*1875இல் வெளிவந்த இரண்டாம் பதிப்பைக் கவிதாசரண் மாற்றம் எதுவுமின்றி அப்படியே 2008இல் மறுபதிப்புச் செய்துள்ளார். 1913-இல் சில பகுதிகள் நீக்கப்பட்டு வெளியிடப்பட்டதும் (சென்னைப் பல்கலைக்கழகத்தின் 1956 வெளியீடு) இன்றுவரை புழக்கத்தில் உள்ளதுமான பதிப்பிற்கு முந்தியது இந்நூல். கால்டுவெல்லால் திருத்தப்பட்டு 1875இல் வெளிவந்த இரண்டாம் பதிப்பின் மறுபதிப்பு நூலாகும் இது. சில பகுதிகளை நீக்கியதற்கான சமூக அரசியல் காரணங்களைக் குறித்துப் பல கட்டுரைகள் வெளிவந்திருக்கின்ற நிலையில், இக்கட்டுரை நீக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் சுருக்கமாகப் பட்டியலிட்டு அவற்றுள் சில மொழியியல் கருத்துக்களை மீள்பார்வைக்கு உட்படுத்துகிறது.*

---

*முனைவர்* **கோ.பாலசுப்ரமணியன்,** *பேராசிரியர் மற்றும் தலைவர், மொழியியல் புலம், திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரமாநிலம்.*

**சில பகுதிகள் நீக்கம் குறித்துப் பதிப்பாசிரியர்கள் கூறுவன**

சில பகுதிகளை நீக்கியதற்கான காரணங்களுள் மிக முக்கியமான காரணத்தைப் பதிப்பாசிரியர்கள் இவ்வாறு கூறியுள்ளனர் :

> பிஷப் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் இலக்கியம் தொடர்பான கருத்துக்கள் அடங்கிய பெரும்பகுதியை நீக்கிவிட்டோம். இதை இரண்டு அடிப்படைகளின்வழி செய்துள்ளோம். ஒன்று, திராவிட மொழிகளின் இலக்கியச் செய்திகள் இந்நூலின் முதன்மை நோக்கத்திற்குத் துணையாவன அல்ல. இக்கருத்தைக் கால்டுவெல்லும் ஏற்றுக்கொண்டுள்ளார். இரண்டு, இந்திய ஆய்வாளர்களின் ஆய்வு முடிவுகளின்படியும் தொல்துறை ஆய்வின் அடிப்படையிலும் இன்று கால்டுவெல்லின் பழந்தமிழ் நூல்கள் பற்றிய முடிவுகள் செல்லாதனவாக ஆகிவிட்டன.

**நீக்கப்பட்ட பகுதிகள்**

சென்னைப் பல்கலைக் கழகம் மூன்றாம் பதிப்பாக வெளியிட்ட A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages நூலில் கால்டுவெல்லின் உண்மையான இரண்டாம் பதிப்பிலிருந்து நீக்கிய பகுதியின் விவரப் பட்டியல் இங்கே தரப்பட்டுள்ளது. கவிதாசரண் பதிப்பித்த கால்டுவெல்லின் "A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages" (Second Edition) நூலிலிருந்து இப்பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது. கவிதாசரண் சென்னைப் பல்கலைக்கழக மூன்றாம் பதிப்பில் நீக்கப்பட்ட பகுதிகளைச் சாய்வுக்கோடுகளை (\\....\\) இட்டு வேறுபடுத்திக் காட்டியுள்ளார். எனினும் இரண்டு நூல்களையும் ஒப்பிட்டபோது நீக்கப்பட்ட பகுதிகள் சாய்வுக்கோடுகள் இன்றியும் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிந்தது. இவ்வட்டவணையில் மொழியியல் கருத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டவை தரப்பட்டுள்ளன.

| வ. எண் | ப.எண் | இடம் பெற்றிருக்கும் பகுதி | பேசப்படும் பொருள் |
|---|---|---|---|
| 1 | 3-4 | அடிக்குறிப்பு | ஆங்கிலக் கல்வி- ஆங்கிலத்தை மகிழ்ச்சியோடு இந்தியர்கள் கற்றுக்கொள்வர்; ஆயினும் ஆங்கிலம் ஒரு பிராந்திய மொழி அளவுக்கோ இந்தியா முழுவதுக்குமான தொடர்பு மொழியாகவோ வளருவதற்கான வாய்ப்பு இல்லை |

| வ. எண் | ப.எண் | இடம் பெற்றிருக்கும் பகுதி | பேசப்படும் பொருள் |
|---|---|---|---|
| 2 | 11 | உட்பகுதி | Dr. Hunter's Malabar word list |
| 3 | 15-16 | அடிக்குறிப்பு | பாண்டியர் வரலாற்றுக் குறிப்பு; Porus Vs Pandian |
| 4 | 20-21 | உட்பகுதி | தமிழர்களை அண்டைமொழிக் காரர்கள் குறிப்பிடும் விதம் |
| 5 | 46 | உட்பகுதி | பின்னிணைப்புப் பற்றியது |
| 6 | 48 | உட்பகுதி | தெலுகு-சமஸ்கிருத உறவு |
| 7 | 56 | அடிக்குறிப்பு | அல்டாயிக்- ஜப்பானிய மொழிக் குடும்பங்களுக்கிடையிலான உறவு |
| 8 | 61 | அடிக்குறிப்பு | சொல் ஒப்புமை- டாக்டர் ஸ்டீவன்சன், வட இந்திய மொழிகளில் பயன்படுத்தப்படும் பெட் ''கருப்பை" எனும் சொல்லோடு தமிழின் ''பெற்ற (பிள்ளை)" எனும் சொல்லை ஒப்பிடுவது |
| 9 | 63 | அடிக்குறிப்பு | கட்டுரை விவரம் |
| 10 | 88 | அடிக்குறிப்பு | தமிழகத்தில் உள்ள சைவ, வைணவக் கோயில்களின் காலம்பற்றிய கருத்து |
| 11 | 91 | அடிக்குறிப்பு | மெக்கனைல் கல்வெட்டுகள்- பாண்டிய அரசர்களின் சமஸ்கிருதப் பெயர்கள்; சுந்தர பாண்டியனின் காலம் |
| 12 | 92 | அடிக்குறிப்பு | ரவி வர்மாவின் காலம்; கொல்லம் வருடம் |
| 13 | 113 | அடிக்குறிப்பு | டெக்கான் -தக்ஷிண், தென், தென்னை முதலிய சொற்களின் சொற் பிறப்பியல் |
| 14 | 115-116 | உட்பகுதி | திராவிடர்கள்- அரசகுடிகள், சூத்திரர் பற்றிய விளக்கம், இராமர்-குரங்கு நட்பு |

| வ. எண் | ப.எண் | இடம் பெற்றிருக்கும் பகுதி | பேசப்படும் பொருள் |
|---|---|---|---|
| 15 | 116-117 | உட்பகுதி | சூத்திரர்கள் பிரம்மாவின் காலடியிலிருந்து பிறந்தவர்கள் எனும் நம்பிக்கை. தஸ்யூஸ், மிலேச்சர்-சூத்திரர் |
| 16 | 117-118 | அடிக்குறிப்பு | நீண்ட முடி- தோடர், கோதர்-தமிழர்கள், மலையாளிகள் திராவிடர்களின் தனிப்பட்ட அடையாளம் - அகத்திமர்ஸ் குறிப்பு- இலங்கையிலும் காணப்படுவது. குடுமி வைத்துச் சவரம் செய்தலை ஆர்யமயமாக்கல் எனக் கால்டுவெல் கருதுகிறார் |
| 17 | 121 | உட்பகுதி | திராவிடர்களுக்கு 'இந்து மதம்' அல்லாத மதம் ஒன்று இருந்தது.- பின்னிணைப்புப் பற்றிய குறிப்பு |
| 18 | 122 | உட்பகுதி | பரம்பரைப் பூசாரி இல்லாதது, உருவவழிபாடு இல்லாதது- சொர்க்கம், நரகம், ஆன்மா, பாவம் தெரியாதிருத்தல் |
| 19 | 122 | உட்பகுதி | பண்பாட்டின் அடிப்படையான சில கூறுகளை மட்டுமே திராவிடர்கள் கொண்டிருந்தனர் - பல சொற்கள் இல்லாதது- ஆரியர்களைவிட ஒரு நூற்றாண்டாவது பின்னிலிருந்தனர் |
| 20 | 122 | உட்பகுதி | திராவிடர்களுக்குச் சிற்பம், கட்டடக்கலை, வானவியல், ஜோதிடம், இலக்கணம் ஆகியவை தெரிந்திருக்கவில்லை |
| 21 | 127-158 | உட்பகுதி | திராவிட இலக்கியத்தின் பழமை- தொல்காப்பியர் பற்றிய குறிப்பு- குறள் 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது |
| 22 | 162 | அடிக்குறிப்பு | ஆங்கிலச் சொற்களை உச்சரிக்கும் போது சொல்லின் முதல் ஒலியாக அரைஉயிரைச் சேர்ப்பது |

| | | | |
|---|---|---|---|
| 23 | 172-173 | அடிக்குறிப்பு | இந்தியாவில் அச்சு வரலாறு- டாக்டர் பர்னலை மேற்கோள் காட்டி |
| 24 | 173 | அடிக்குறிப்பு | ஹாங்லெடன் பற்றிய குறிப்பு |
| 25 | 177 | உட்பகுதி | சமஸ்கிருத பிராகிருத மொழிகளில், நெடில் ''ஏ" எவ்வாறு குறில் "எ"வாக மாறியது என்று பீம்ஸ் கூறிய கருத்து |
| 26 | 183 | உட்பகுதி | மராத்தி, தெலுங்கு மொழிகளில் தத்சம, தத்பவச் சொற்களின் உச்சரிப்பு |
| 27 | 184 | உட்பகுதி | நா வளை ஒலிகள் சமஸ்கிருதத்திலும் காணப்படுவது பற்றிய குறிப்பு |
| 28 | 187 | உட்பகுதி | ஒடியா, பெங்காலி, குஜராத்தி முதலிய மொழிகளில் ல், ள் ஆகிய ஒலிகள் உள்ளதாகப் பீம்ஸ் கூறும் கருத்து |
| 29 | 189 | அடிக்குறிப்பு | கன்னடத்தில் ''மூன்று" ''மூரு" இவற்றுள் எது பழைய வடிவம் எனும் குண்டர்ட்டின் விவாதம்- கால்டுவெல் மறுப்புரை |
| 30 | 191 | அடிக்குறிப்பு | வேத காலச் சமஸ்கிருதத்தில் "ள்" ஒலியனின் வருகை |
| 31 | 192-197 | உட்பகுதி | சமஸ்கிருத திராவிட மொழிகளில் நாவளை ஒலி நாவொலி ஆகியவற்றின் மாற்றங்கள்: ண், ள் >ன, ல |
| 32 | 198-209 | உட்பகுதி | சமஸ்கிருதம் நா வளை ஒலிகளைத் திராவிட மொழிகளிலிருந்து கடன் வாங்கவில்லை என்ற டாக்டர் புலரின் கருத்துக்கு மறுப்புரை ஐரோப்பிய மொழிகள் போலல்லாது இந்திய மொழிகளில் பல்லொலிகள் ஒரு தனிப் பிரிவாக வளர்ந்திருக்கின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | | | திராவிட மொழிகளில் பல்லொலிகள் நா வளை ஒலிகளுக்குப் பிந்தியன ஆகலாம் |
| 33 | 219 | உட்பகுதி | பீம்ஸ் கருத்து - ஆரிய மொழிகளில் ர-ல பிறழ்ச்சி |
| 34 | 224 | அடிக்குறிப்பு | திராவிட மொழிகளில் வினை பற்றிக் கோவரின் குறிப்பு |
| 35 | 256 | அடிக்குறிப்பு | வேர்ச்சொற்களின் நீட்டம் |
| 36 | 257 | உட்பகுதி | அ, இ, எ, உ ஆகியவற்றின் பரஸ்பர இடமாற்றம் பற்றிய குண்டர்ட்டின் குறிப்பு |
| 37 | 258 | உட்பகுதி | வடிவாக்கிகள் (formatives) -- இந்தோ ஐரோப்பிய மொழிகளைப் பின்பற்றிப் 'போலச் செய்யும்' பண்பைத் திராவிட மொழிகளிலும் குறிப்பாகத் தமிழிலும் காணலாம் |
| 38 | 280 | அடிக்குறிப்பு | உடலையும் மனதையும் வேறுபடுத்திக் காணும் இயல்பு |
| 39 | 288 | அடிக்குறிப்பு | 'ஆள்' எனும் வேர்ச்சொல்லின் சொற்பிறப்பியல் |
| 40 | 297 | அடிக்குறிப்பு | சமஸ்கிருத - பிராகிருதத் தொடர்பு - 'ஆன்' எனும் வடிவம் |
| 41 | 307 | அடிக்குறிப்பு | டாக்டர் குண்டர்ட் - 'எல்' எனும் வடிவம் |
| 42 | 327 | உட்பகுதி | சுட்டு அடி - 'அன்', 'அம்' ஆகியவை பற்றிய குண்டர்ட்டின் கருத்துக்கு விளக்கம் |
| 43 | 336-337 | உட்பகுதி | கருவிவேற்றுமை - குண்டர்ட் - கால் - ஆல் |
| 44 | 342 | அடிக்குறிப்பு | குண்டர்ட் - மலையாளம், சொல்லிறுதி |
| 45 | 363 | அடிக்குறிப்பு | 'இல்' எனும் அடிச்சொல் வடிவத்திலும் பொருட் குறிப்பிலும் இலத்தீன் மொழியோடு ஒத்திருத்தல் |

| | | | |
|---|---|---|---|
| 46 | 365 | அடிக்குறிப்பு | அ, இ போன்ற சுட்டு அடிச்சொற்கள் |
| 47 | 374 | அடிக்குறிப்பு | 'நல்ல', 'கெட்ட' எனும் பெயரடைகள் பற்றிய குறிப்பு |
| 48 | 398 | அடிக்குறிப்பு | 'பஞ்ச' எனும் சமஸ்கிருதச் சொல்லில் இருந்து தமிழ், மலையாள 'அஞ்சு' வந்திருக்கலாம். குண்டர்ட்டின் கருத்துக்கு விளக்கம்; 'எய்' என்பதே ஐந்தின் பழைய வடிவம் எனும் கருத்து |
| 49 | 401 | உட்பகுதி | சித்திய மொழிக் குடும்பத்தின் ஒவ்வொரு பிரிவும் எண்ணுப்பெயரில் வேறுபடுதல் |
| 50 | 413 | அடிக்குறிப்பு | 'இருபன்' எனும் எண்ணுப்பெயரின் விளக்கம் |
| 51 | 413 | அடிக்குறிப்பு | 'பஃது' பற்றிய குறிப்பு |
| 52 | 414 | உட்பகுதி | 'பத்து' பற்றிக் கிட்டலின் குறிப்பும் கால்டுவெல்லின் விளக்கமும் |
| 53 | 427 | அடிக்குறிப்பு | 'நங்கூரம்' என்னும் சொல் 'anchor' எனும் ஆங்கிலச் சொல்லிலிருந்து வந்தது எனும் குறிப்பு |
| 54 | 436 | உட்பகுதி | திராவிட 'அன்' எனும் தன்மைப்பெயர் வடிவத்திற்கும் 'அகம்' எனும் சமஸ்கிருத வடிவத்திற்கும் தொடர்பு இருக்கலாம் எனும் கருத்திற்கு மறுப்பு |
| 55 | 439 | அடிக்குறிப்பு | பன்மையைக் காட்டும் பண்பில் சமஸ்கிருதம் ,இலத்தீன், கிரீக் மொழிகளுக்கிடையிலான ஒற்றுமை |
| 56 | 447 | உட்பகுதி | பெஸ்கி கூறும் 'தி' என்பது முன்னிலைப்பெயர் என்பதற்கான விளக்கம் |
| 57 | 694-708 | பின்னிணைப்பு | கோவரின் 'Folk Songs of South India' எனும் கட்டுரையில் இடம் பெற்றிருக்கும் வரலாற்று |

| | | | |
|---|---|---|---|
| | | | மொழியியல் பகுதிக்கான விளக்கம் |
| 58 | 708-713 | பின்னிணைப்பு | சுந்தர பாண்டியர் காலம் |
| 59 | 713-728 | பின்னிணைப்பு | பறையர்கள் திராவிடர்களா? |
| 60 | 728-731 | பின்னிணைப்பு | நீலகிரித் தோடர்கள் திராவிடர்களா? |
| 61 | 732-753 | பின்னிணைப்பு | திராவிடர்களின் உருவம் பற்றியது |
| 62 | 753-772 | பின்னிணைப்பு | திராவிடர்களின் பூர்வீக மதம் |

**மூன்றாம் பதிப்புப் பற்றிய விமரிசனங்கள்**

கவிதாசரணின் பதிப்பு வெளிவந்த பிறகு இப்பதிப்பையும் சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பையும் ஒப்பிட்டுப் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. **மாற்றுவெளி** ஆய்விதழ் 2008இல் கால்டுவெல் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டுக் கவிதாசரணின் பதிப்புப் பற்றிய சில கட்டுரைகளை உட்படுத்தியுள்ளது. இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் நீக்கப்பட்ட பகுதிகள் எதற்காக நீக்கப்பட்டன என்பதை அரசியல் சமூகக் கண்ணோட்டத்தில் அலசுகின்றன.

'கால்டுவெல் எனும் சிக்கல்' என்ற கட்டுரையை எழுதியுள்ள எம்.தேவசகாய குமார் மூன்றாம் பதிப்பில் இரண்டாம் பதிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை எஸ். வையாபுரிப்பிள்ளை வேதனையோடு குறிப்பிட்டுள்ளதை எடுத்துக் கூறுவதோடு (ப.10) ச.அகத்தியலிங்கம், வ.அய்.சுப்பிரமணியம் ஆகியோர் இரண்டாம் பதிப்பைப் பயன்படுத்தியுள்ளனர் எனவும் ஆனால் அதைப் பற்றிய கருத்துகளைப் பதிவு செய்யவில்லை எனவும் சுட்டிக் காட்டுகிறார்.

வ.கீதா எழுதியுள்ள ''கால்டுவெல்லின் திராவிடம் ஒரு வாசிப்பு" எனும் கட்டுரையில் (ப.31), ''பல்கலைக்கழகப் பதிப்பில் 'திராவிட' அடையாளம் என்பதைக் குறிப்பிட்ட வகையில் விளக்க முற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நீக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்கையில் 'திராவிட' அடையாளத்தைக் 'களங்கப்படுத்து'வதாக அமைந்துள்ள வாதங்களை, கருத்துக்களை அவர்கள் ஒதுக்கியுள்ளனர் எனலாம்" என்கிறார்.

**மொழியியல் கருத்துக்கள்**

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள நீக்கப்பட்ட பகுதிகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

1. தமிழர் வரலாறு, பண்பாடு, திராவிட இலக்கியம் பற்றிய செய்திகள்
2. குறிப்பிட்ட சில திராவிடக் குடிகளின் இன வரைவியல்

3. ஒப்பிலக்கண (மொழியியல்)ச் செய்திகள்

இவற்றுள் முதல் இரண்டு பிரிவுகளில் அடங்கிய பகுதிகளை நீக்கியதற்கான காரணங்களாகத் தேவசகாய குமாரும் கீதாவும் கூறும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவே.

'திராவிடப் பெருமையை' எவ்வகையிலும் மங்கச்செய்துவிடாத, ஒப்பிலக்கணத்திற்கு வலுச் சேர்க்கக் கூடிய பல செய்திகளையும் தரவுகளையும் நூலின் உட்பகுதியிலிருந்தும் அடிக்குறிப்புகளிலிருந்தும் நீக்கியிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிய இயலவில்லை. இச்செய்திகளைப் பதிப்பாசிரியர்கள் (வயட் & ராமகிருஷ்ணபிள்ளை) ஆய்வுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல எனக் கருதியிருக்கலாமோ என்னவோ?

நீக்கப்பட்ட மொழியியல் கருத்துக்களுள் சிலவற்றை மட்டும் சற்று விரிவாக விளக்குவதன் மூலம், நீக்கப்பட்ட மொழியியல் பகுதிகள் திராவிட ஒப்பிலக்கண ஆய்வுகளுக்கு எவ்விதம் ஆக்கம் சேர்க்கக்கூடும் என்பதை அறிந்துகொள்ள இயலும்.

## ஆங்கிலமொழிக் கல்வி

நீக்கப்பட்டவற்றுள் முதலாவது இந்தியாவில் ஆங்கில மொழிக்கல்வி தொடர்பானது. எர்ஸ்கின் பெர்ரி என்பவர் ஆங்கிலமொழியை இந்தியர்கள் அனைவரும் குறுகிய காலத்திற்குள் மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வர் என்று **The Journal of the Royal Asiatic Society** எனும் ஆய்விதழில் 1855இல் கூறிய கருத்திற்குக் கால்டுவெல் தமது மாற்றுக்கருத்தைப் பதிவு செய்திருக்கிறார். அன்று சென்னை மாகாணத்தில் அரசு ஊழியர்களுக்கு ஆங்கில மொழியில் எவ்வகையான தேர்வுகள் நடத்தப்பட்டன, எவ்வளவு ஊதியம் என்பதைப் பட்டியலிடும் கால்டுவெல் இந்தியாவில் ஆங்கிலம் ஒருபோதும் ஒரு பிராந்திய மொழியாக உருவெடுக்க வாய்ப்பில்லை எனக் கூறுவதோடு ஒரு தொடர்பு மொழியாகக் (Lingua Franca) கூட விளங்குவதற்கும் ஏதுவில்லை என்கிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் ஆங்கிலேயரின் எண்ணிக்கை மிகக் குறைவு என்பதையும் ஒரு காரணமாகக் கூறுகிறார். இந்த அடிக்குறிப்பைக் கொடுத்துள்ள உட்பகுதியில் ஆங்கிலம் எங்கெல்லாம் குறிப்பாக உயர்கல்வியில் சமஸ்கிருதத்திற்கு இருந்த இடத்தைப் பிடித்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிருப்பதைக் கோடிட்டுக் காட்டும் கால்டுவெல் அதே வேளையில், அர்ச்சக இனத்தைச் சார்ந்த அதிகாரம் படைத்தவர்களின் மொழியான சமஸ்கிருதத்தைத் தென்னிந்திய திராவிட மொழிகள் 2000 வருடங்களுக்கும் மேலாக வெற்றிகரமாகச் செறுத்து நின்ற மொழிகளாகையால் ஆங்கிலம் மட்டுமல்ல எந்தவொரு அயல் மொழியாலும் தென்னிந்தியாவின் ஒரு

பிராந்தியமொழியாகிவிட இயலாது என்கிறார். இக்கருத்து அவரது ஒப்பிலக்கண ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அமைந்து இருப்பதை அறிய முடிகிறது. சமஸ்கிருதத்திலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகள் அதிக அளவு கடன் வாங்கியபோதும் இம்மொழிகளின் திராவிட இயல்பு மாறிவிடவில்லை என்பதைக் காட்டுவதாக அவரது கருத்து அமைந்துள்ளது.

## பிற மொழிக்குடும்பங்களோடு உள்ள உறவு

சித்திய மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்குமிடையிலான உறவு பற்றி நூல் முழுவதும் சான்றுகளைக் காட்டிச் செல்லும் கால்டுவெல் பல இடங்களில் திராவிட மொழிகளுக்கும் ஜப்பானிய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைக் கூறுகளையும் காட்டிச்செல்கிறார். இக் குறிப்பிட்ட அடிக்குறிப்பில்(ப.56) ஆஸ்டன் என்பவர் ஜப்பானிய மொழியமைப்பை, குறிப்பாகப் பெயரடை, வினையடை மற்றும் சில வேற்றுமைகளின் பண்புகள் பற்றி விளக்கியிருப்பது அப்படியே திராவிட மொழியமைப்பை விளக்கியிருப்பது போலுள்ளது என்று வியந்து கூறியுள்ளார். அன்று கால்டுவெல் கோடிட்டுக் காட்டிய ஆய்வுப்பொருள் இன்று பரந்து விரிந்து கமில் சுவலபில்(1991:21-31) குறிப்பிடுவது போல எலாமைட், அல்டாயிக், ஊராலியன், ஜப்பானிசு போன்ற பல மொழிக்குடும்பங்களுடன் திராவிட மொழிகளுக்கு உள்ள உறவை ஒப்பிட்டுப் பார்க்கும் ஆய்வாக மிளிர்ந்துள்ளது. ஒரு பக்கம் சமஸ்கிருதத்தோடு திராவிட மொழிகளுக்கு உள்ள வேற்றுமையை ஆணித்தரமாக நிலைநாட்டும் கால்டுவெல் பிற மொழிக்குடும்பங்களுடன் திராவிட மொழிகளுக்கு உள்ள உறவைச் சுட்டிக்காட்டுவது கவனிக்கத்தக்கது.

## திசை குறிக்கும் சொற்கள்

113ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள அடிக்குறிப்பு வட இந்திய மொழிகளில் பயன்படுத்தப்படும் திசை குறித்த சொற்கள் பற்றியது. அச்சொற்களுக்கு இணையாகத் தமிழில் வழங்கும் சொற்களோடு ஒப்பிடுவதாக அமைந்துள்ளது இப்பகுதி. தக்ஷிண எனும் சொல்லின் அடிப்படைப்பொருள் ''வலப்பக்கம்" என்றும் இது ஆரியர்கள் சூரியனை நோக்கி நின்று அதைப் பூர்வ ''எதிர்ப் பக்கமுள்ள நிலப்பரப்பு" என்று சுட்டினர் என்றும் பூர்வ திசைக்கு வலதுபுறம் உள்ள நிலப்பகுதியைத் தக்ஷிண என்று குறித்தனர் என விளக்கும் கால்டுவெல் தென் எனும் தமிழ்ச் சொல்லுக்குத் தமிழில் ''எதிர்(பக்கம்)" எனப் பொருள் உள்ளதாகக் கூறுகிறார். தொடர்ந்து வட எனும் சொல் வாடு என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம் என்றும் அது வறண்ட வாடைக் காற்றோடு தொடர்பு உள்ளதாகலாம் என்றும் கூறுகிறார். மேலும் திராவிடர்கள் கிழக்குத் திசையைக் "கீழ்ப்பகுதி" ("downward") என்றும் மேற்குத் திசையை "மேற்பகுதி" ("upward") என்றும் அழைத்து வந்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

இக்குறிப்பு, திராவிடர்கள் திசையை எவ்விதம் எக்காரணத்தின் அடிப்படையில் குறிப்பிட்டிருந்தனர் என்பதைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது; மேலும் திசைகளைச் சுட்ட எல்லாத் திராவிட மொழிகளிலும் ஒரே மாதிரியான சொற்கள் பயன்படுத்தப்பட்டனவா எனச் சிந்திக்கவும் தூண்டுகிறது. செ.வை. சண்முகம்(2007:17) தமது கட்டுரை ஒன்றில் தமிழில் திசைகாட்டும் விதம் பற்றியும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய தற்காலத் தமிழ்ச் சொற்கள் பழைய தமிழில் வழங்கிய குணதிசை, குடதிசை மற்றும் தக்ஷிண உத்தர ஆகிய திசைகளுக்கு இணையானவை எனக் குறிப்பிடுவதோடு அவற்றிற்கான இலக்கியச் சான்றுகளையும் தருகிறார். மேலும் தெற்கு, வடக்கு, குண, குட (அனைத்தும் பழைய தமிழில் வழக்கத்திலிருந்தவை) ஆகியவை காற்றை அடிப்படையாகக் கொண்டும் பின்னர்க் கிழக்கு, மேற்கு இரண்டும் நில அமைப்பை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை என்றும் விளக்குகிறார்.

திசை பற்றிய சொற்கள் திராவிட மொழிகளில் இடம்பெற்றிருந்த விதத்தை அறிந்துகொள்ளத் திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதிப் (DED) பதிவுகள் உதவுகின்றன.

DED-யில் *516, 1619, 2584, 3399, 4016, 5035* ஆகிய பதிவுகளில் "கிழக்கு" எனும் பொருளுள்ள நிகர்ச் சொற்கள் (cognates) இடம்பெற்றுள்ளன. அவையாவன:

DED*: 516* தோட-எற்க் (தமிழில் நிகர்ச்சொல்: இறங்கு)

DED*: 1619* தமிழ், மலையாளம்: கீழ்; குடகு- கேக்கி

DED*: 2584* கோந்தி- சிராயன் ( இச்சொல்லுக்கு, "கீமே", "அடியில்" என்ற பொருளும் உள்ளது; இதற்கு நிகர்ச்சொல்லாகத் துளு மொழியில் திர்டு சொல் உள்ளது)

DED*:3399* தெலுங்கு- தூர்ப்பு (இச்சொல் "நுழை" எனும் பொருளில் தூரு எனத் தெலுங்கிலும் கன்னடத்திலும் பயன்படுத்தப்படுகிற வினைச் சொல்லிலிருந்து பெறப்பட்டது)

DED*: 4016* கொலாமி- பல்லாம் (தமிழில் நிகர்ச்சொல்: பள்ளம்)

DED*: 5035* கன்னடம்- மூடு (தமிழில் நிகர்ச்சொல்: மூடு; இதற்குத் தமிழ் லெக்சிகன் "origin" எனும் பொருளையும் தந்துள்ளது.

திராவிட மொழிகளில் "கிழக்கு"த் திசையைக் குறிக்கக் கீழுள்ள/ இறக்கமான/பள்ளமான/தொடங்குகின்ற/நுழைகின்ற இடத்தைக் குறிக்கும் சொற்கள் பயன்பாட்டில் இருந்தமை/இருக்கின்றமை புலப்படுகிறது.

DED-யில் 233, 1094, 1649, 2178, 2203, 3852, 4333, 4567, 5086 ஆகிய பதிவுகளில் "மேற்கு" எனும் பொருளுள்ள நிகர்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவையாவன:

DED:233 பெங்கோ- வேற (தெலுகில் ராலு 'to fall' எனும் சொல் இணைச்சொல்லாகும்).

DED:1094 தமிழ்- கச்சான் "மேற்குக் காற்று"

DED:1649 தமிழ் - குடக்கு (தமிழில் மட்டுமே இப்பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது)

DED: 2178 குவி- குயி (தமிழில் கோ "மலை" என்பது இணைச்சொல்லாகும்)

DED:2203 தமிழ்- "கோடை" மேற்குக் காற்று

DED:3852 தமிழ்- படு ஞாயிறு; மலையாளம்- படிஞ்ஞாறு; துளு: பட்டாயி; தெலுங்கு: படமர; கோந்தி- பராயின்

DED: 4333 தோடா- பீர்னோர் (தமிழில் புறம் "வெளியே" என்பது நிகர்ச்சொல்)

DED: 4567 கொலாமி- போடேலாங் (தமிழில் பொறை "மலை" என்பது நிகர்ச்சொல்)

DED: 5086 தமிழ்- மேக்கு; மலையாளம்- மேற்கு(westward); கோத- மூல் (இச்சொற்கள் மே என்ற வேரிலிருந்து பிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

திராவிட மொழிகளில் "மேற்கு" எனும் திசையைக் குறிக்கும் சொற்கள் மேல்/மலை/விழுகின்ற/வெளியேறுகின்ற/ பகுதியையும் தமிழில் ஒருவகைக் காற்று வரும் திசையையும் குறிக்கின்றன எனலாம்.

"வடக்கு" எனும் பொருளில் DED-யில் ஒரு பதிவு (5218) மட்டுமே உள்ளது.

தமிழ், மலையாளம்- வட கன்னடம்-பட; குடகு-படகி; துளு- படகாயி; தெலுங்கு: வடாகூகொண்ட (இமயமலை).

"தெற்கு" எனும் பொருளிலும் DED-யில் இரு பதிவுகள் (3449, 810) மட்டுமே உள்ளன.

தமிழ், மலையாளம்- தென், தெற்கு, கன்னடம்- தெங்காலி (south wind); குடகு- தெக்கி; துளு- தென்காயி. தெலுங்கு மொழியில் (DED 810) பய்யரா "south wind" எனும் பதிவு உள்ளது.

மேற்கண்ட சான்றுகளைப் பார்க்கும் பொழுது செ.வை. சண்முகம் (2007:17) கூறியுள்ளபடி வடக்கு, தெற்கு ஆகியவை முன்-தமிழ்க் காலத்திலிருந்தே வழங்கி வந்திருக்கலாம் என்ற கருத்து வலுப்பெறுகிறது.

கிழக்கு எனும் சொல் தமிழ்- மலையாளக் காலத்திற்கு உரியதென்று கூறமுடிகிறது. மேற்கு எனும் சொல் தமிழில் மட்டுமே வழங்கி வருகிறது. கருத்துருவாக்க (Conceptual) அடிப்படையில் நோக்கும் பொழுது "கிழக்கு" எனும் பொருளில் வரக்கூடிய சொற்கள் தமிழ், மலையாளம், தோடா, கோந்தி, கொலாமி ஆகிய மொழிகளில் நில அமைப்பு அடிப்படையில் அதாவது, 'கீழ்', 'பள்ளம்', 'இறக்கம்' போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுவதையும் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் நுழை/தொடக்கம் என்ற அடிப்படையில் வழக்கில் உள்ளதையும் காணமுடிகிறது. "மேற்கு" எனும் பொருள்படும் சொற்களைத் தமிழ், குவி, கொலாமி, கோத மொழிகள் ''உயர்ந்த/மலை" என நில அமைப்பு முறையிலும் மலையாளம், தெலுங்கு, துளு, பெங்கோ, கோந்தி ஆகிய மொழிகள் ''விழுகின்ற/மறைகின்ற (சூரியன்) என்ற அடிப்படையிலும் பயன்படுத்தி வருவதைக் காணலாம். அதாவது, 'கிழக்கு', 'மேற்கு' ஆகிய சொற்களை நில அடிப்படையில் அமைந்தவை; சூரியனை அடிப்படையாகக் கொண்டவை என இரண்டாகப் பிரிக்க இயலும்.

இது தொடர்பாக, மலையாள மொழியில் வழங்கும் ''கிழக்கு" எனும் பயன்பாட்டுக்கு டி.பி. வேணுகோபால பணிக்கர்(1974/1999) எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் விளக்கம் அளித்துள்ளார். "கீழில்", "கீழ் நடப்பு", "கீழ்வழக்கம்" ஆகிய சொற்களில் "கீழ்" என்பதற்கு "Earlier" எனும் பொருள் உள்ளதாலும் "மேலால்" "இனிமேல்", "உச்சிக்குமேல்" போன்ற சொற்களில் "later" என்ற பொருள் தருவதாலும் "கிழக்கு" "மேற்கு" எனும் சொற்களுக்கு "நில" அடிப்படை அல்லாத "கால" அடிப்படையை அதாவது சூரியன் உதிக்கும் காலத்தை வைத்துக் கிழக்கு, மேற்கு வந்திருக்கலாம் என வாதிடுகிறார். கேரளத்தின் (அல்லது பழைய சேர நாடு) மேற்குப் பகுதி தாழ்ந்தும் கிழக்கு உயர்ந்தும் இருப்பதாலும் தற்கால மலையாளத்திலும் "கிழக்கு" எனும் சொல் புழக்கத்தில் இருப்பதால் மேற்கண்ட விளக்கம் மலையாள மொழி வழக்கத்திற்குப் பொருந்தி வருகிறது எனலாம்.

குண, குட, கீழ் (திசை), மேற்றிசை, கிழக்கு, தென், வட, தெற்கு, வடக்கு ஆகிய சொற்கள் சங்க காலத்தில் வழங்கியுள்ளமை இலக்கியச் சான்றுகளிலிருந்து அறிய முடிகிறது.

கால்டுவெல்

> "...The South was to the primitive Dravidian what the East was to the Brahman. He called it ten, of which the meaning in Tamil is "opposite ..." *(ப.113, அடிக்குறிப்பு)*

என்று கூறுகிறார். சங்கப் பாடல்களில் கீழ்க்கண்ட இடங்களில் தென் எனும் சொல் வருகிறது.

*தென் புலம் காவலர் மருமான் ஒன்னார் - சிறு. 63*

*தென் குமரி வட பெருங்கல் - மது. 70*

*தென் பரதவர் போர் ஏறே - மது.144*

*தென் புல மருங்கின் விண்டு நிறைய - மது. 202*

*தென் புல மருங்கில் சாந்தொடு துறப்ப - நெடு. 52*

*வேனில் பள்ளி தென் வளி தரூஉம் - நெடு. 61*

*தென் கடல் முத்தும் குணக் கடல் துகிரும் - பட். 189*

*தென் புல மருங்கில் சென்று அற்று ஆங்கு - நற். 153/5*

*தென் புலம் படரும் தண் பனி நாளே - குறு. 317/7*

*தெண் கழி சே இறாப் படூஉம் - ஐங். 196/3*

*தென் திசை நோக்கித் திரிதர்வாய் மண்டு கால் சார்வா - பரி. 10/121*

*மங்குல் மா மழை தென் புலம் படரும் - அகம். 24/8*

*தென் திசை மாதிரம் முன்னிய வரவிற்கு - அகம். 281/9*

*தென் புலம் வாழ்நர்க்கு அரும் கடன் இறுக்கும் - புறம். 9/3*

*தென் குமரி வட பெருங்கல் - புறம். 17/1*

*இலங்கு கதிர் வெள்ளி தென் புலம் படரினும் - புறம். 35/7*

*தென் புலம் காவலின் ஒரீஇ பிறர் - புறம். 71/18*

*தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும் - புறம். 117/2*

*தென் திசை ஆஅய் குடி இன்று ஆயின் - புறம். 132/8*

*தென் பரதவர் மிடல் சாய - புறம். 378/1*

*தென் பவ்வத்து முத்து பூண்டு - புறம். 380/1*

*வட திசை நின்று தென் வயின் செலினும் - புறம். 386/22*

தென் திசை நின்று குறுகாது நீடினும் - புறம். 386/23

வெள்ளி தென் புலத்து உறைய விளை வயல் - புறம். 388/1

தெறு கதிர் கனலி தென் திசை தோன்றினும் - புறம். 397/24

மேற்கண்ட இடங்களில் எங்கும் தென் எனும் சொல்லுக்கு "opposite" எனும் பொருள் உள்ளதாகத் தெரியவில்லை. தமிழ் லெக்சிகனும் இப்பொருளைத் தரவில்லை.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது இவ்வடிக்குறிப்பு பல கேள்விகளுக்குத் தூண்டுதலாக அமைந்துள்ளது எனலாம். தமிழில் திசைகளைக் காற்றின் அடிப்படையில் அல்லது நிலத்தின் அமைப்பு அடிப்படையில் மட்டுமே பகுத்தார்களா? சூரியன் உதிப்பதையும் மறைவதையும் அடிப்படையாகக் கொள்ளவில்லையா? குண, குட ஆகிய சொற்களுக்கு வேறு பொருள்கள் உள்ளனவா? காற்று வந்ததால் திசைக்குப் பெயர் வந்ததா? அந்தத் திசையிலிருந்து காற்றுக்குப் பெயர் வந்ததா? தென் என்பதற்குக் கால்டுவெல் சொல்வது போல "opposite" எனும் பொருள் உள்ளதா?

**பெண் எனும் சொல்**

திராவிட மொழிகளில் அமைந்துள்ள எண்-பால் காட்டும் விகுதிகள் பற்றியும் பால் பகுப்பு முறை பற்றியும் விரிவாகப் பேசப்பட்டுவந்துள்ளது. அட்டவணையில் வரிசை எண் 40இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஆள் எனும் வேர்ச்சொல், அதிலிருந்து உருவானதாகக் கொள்ளப்படும் பெண்பால் ஒருமை விகுதி ஆகியவை இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு மேலும் ஆக்கம் சேர்க்கக்கூடியனவாகும். பி.எச்.கிருஷ்ணமூர்த்தி (2003) தமது The **Dravidian Languages** நூலில் எண்-பால் பற்றி விரிவாக விளக்கி, அறிஞர் பலரின் கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்த்து மூலத் திராவிட மொழியின் வடிவங்களாக ★awantu {'he' human}, ★awaʔ {'She' human}, ★atu {'it' non-human}, ★awar {'they' human), ★away {they non-human} ஆகியவற்றை மீட்டுருவாக்கம் (ப.208) செய்திருக்கிறார்.

'பெண்' என்னும் பொருளில் துளு- ஆள் கோண்ட்-தெலுங்கு- ஆளு ஆகிய சொற்களைத் தமிழ்- ஆள் 'ஒரு நபர்' எனும் சொல்லோடு தொடர்புபடுத்தி ஆள் எனும் வினை வடிவத்திற்கு உள்ள "to rule" எனும் பொருள் பெண் எனும் சொல்லின் பொருளோடு எவ்வாறு பொருத்தப்பட்டுப் போகிறது எனக் கால்டுவெல் விளக்குகிறார். மேலும் ஆள் எனும் சொல்லுக்கு

> "appears to mean properly a subject person, a servant- a male or female- a slave"

எனக் கூறுவதோடு

" the word aaL , one who is subject to rule, a person whose-sole duty is to obey is as natural a derivation for a word signifying a woman, a female as peN"

என்ற கால்டுவெல்லின் கருத்துகள் ஆய்வாளர்கள் பலருக்கு முன்பே கிடைக்காமல் போய்விட்டன. கால்டுவெல்லின் இக்கருத்துகளும் தரவுகளும் மேலும் ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியவையாகும். இக்கருத்துகள் ஒப்பிலக்கண மொழியியலுக்கு மட்டுமன்றிப் பிற ஆய்வுகளுக்கும் (இங்கே பெண்ணியம் தொடர்பான ஆய்வுகளுக்கு)ப் பேருதவியாக அமையும்.

**அண்டை மொழிக்காரர்களின் மனப்பான்மை**

அட்டவணையில் வரிசை எண் 4இல் இடம்பெற்றுள்ள செய்தி ஒரு மொழியின் மீதும் அம்மொழி பேசும் மக்களின் மீதும் அண்டை மொழிக்காரர் கொண்டிருக்கும் மனோநிலை தொடர்பானது. கன்னடியர் (தெலுங்கரும் கூட) தமிழை அரவம் எனக் குறிப்பிடுவதற்கான காரணத்தைக் கால்டுவெல் அலசுகிறார். கன்னடியர் தமிழர்களைத் திகளர், திகுளர் எனக் குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டி, தமிழிலும் மலையாளத்திலும் அச்சொற்களுக்கு இணையாக விளங்குகின்ற திகள்(? ழ்) என்னும் அடிச்சொல்லுக்குப் 'பொலிவு' என்று பொருள் உள்ளபோதும் கன்னடியர்கள் தமிழர்களைப் 'பண்பாடற்ற மனிதர்கள்' என்னும் பொருளில் திகளர்/திகுளர் எனும் சொல்லைக் கொண்டு குறிப்பிடுவதாகக் கூறுகிறார். கால்டுவெல் இதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. ஓர் இனத்தையே இப்படி இழிவாகக் குறிப்பிடுவது நாகரிகமற்றது எனச் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.

கால்டுவெல்லின் இக்குறிப்பின்வழியாகக் கன்னட மொழியில் ஏற்பட்டுள்ள சொற்பொருள் மாற்றத்தை அறிய முடிகிறது. கன்னட சாகித்திய பரிசத் பதிப்பித்துள்ள கன்னட நிகண்டுவின் 3ஆம் தொகுதியில் திகுள எனும் பதிவு உள்ளது. இச்சொல்லிற்கு மாற்று வடிவங்களாகத் திகள, திகட ஆகியனவும் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பதிவில் ''தமிழ் பேசும் மக்கள்" என்ற பொருள் தரப்பட்டுள்ளது. இச்சொல்லாட்சியை முதன் முதலில் அபினவமங்க ராஜா என்பவர் 1390இல் எழுதிய **அபினவாபிதானமி** என்னும் கவிதை நூலில் பயன்படுத்தியுள்ளதாகவும் குறிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. DED -யும் பதிவு எண் 3404இல் திகழ் எனும் சொல்லைத் தந்து "rebuke" "blame", "abuse" முதலிய பொருள்களைத் தந்துள்ளது.

தற்காலக் கன்னடத்தில் திகளர் என்ற சொல்லுக்குத் "தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு கரகாட்டத் தொழில் செய்பவர்" களைக் குறிப்பதாக

அறியமுடிகிறது. தமிழர்களைக் கன்னடியர்கள் தற்பொழுது சற்றே இழிவாகச் சுட்டும் விதத்தில் கொங்க எனும் சொல்லைப் பயன்படுத்தித் தங்களுக்குள் குறிப்பிட்டுக் கொள்கின்றனர். இச்சொல்லுக்கு மேற்குறிப்பிட்ட கன்னட நிகண்டு தொகுதி 2இல் "ஒரு பிரதேசம்", "குரங்கு" "ஒரு வகையான குதிரை" ஆகிய பொருள்கள் தரப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

இச்சொல்லாராய்ச்சியையும் கன்னடியர்களுக்கு அண்டைமொழிக் காரர்கள் மீதுள்ள மனோநிலை பற்றிய ஆய்வையும் மேலும் விரிவுபடுத்த இயலும். கால்டுவெல்லின் திகளர் பற்றிய குறிப்பை நீக்கியதன் மூலம் திகுளர்/திகட/திகள ஆகிய சொற்களுக்கு ஏற்பட்டுள்ள பொருள் மாற்றத்தை அறிந்து ஆய்வு மேற்கொள்ளவும் இச்சொற்களோடு பொருளடிப்படையில் ஒப்புமையுள்ள கொங்க எனும் சொல்லைத் தொடர்புபடுத்தித் தொடராய்வுகள் செய்யவும் வாய்ப்புகள் குறைந்து போயின எனலாம்.

## முடிவுரை

வரலாறு, பண்பாடு, இலக்கியம் தொடர்பான கால்டுவெல்லின் கருத்துகள் திராவிடப் பழமைக்கும் பெருமைக்கும் குறைவு ஏற்படுத்தக்கூடும் என்ற எண்ணத்தில் நீக்கியிருப்பதை- ஏற்றுக்கொள்ளவியலாது என்ற போதிலும்- சரியோ தவறோ சில காரணங்களின் அடிப்படையில் பதிப்பாளர்கள் நீக்கியிருப்பதாகக் கருதலாம். கால்டுவெல்லின் மொழி தொடர்பான மொழியியல் கருத்துக்களை நீக்கியிருப்பதற்கு இதுபோன்று எந்தக் காரணத்தையும் கூறமுடியவில்லை. முதல் பதிப்பில் கூறியுள்ள கொள்கை முடிவுகளுக்கும் சில கருதுகோள்களுக்கும் வலுச் சேர்க்கும் கருத்துக்களையும் தரவுகளையும் கால்டுவெல் தம் முயற்சியிலும் அவரது சமகாலத்தவர்களான குண்டர்ட், கிட்டல், பிரௌன் ஆகியவர்களின் ஆய்வுகளிலிருந்து திரட்டியும் இரண்டாம் பதிப்பில் உட்படுத்தியிருக்கிறார். பதிப்பாளர்கள் கால்டுவெல் தந்துள்ள மொழியியல் கருத்துக்கள் முக்கியமில்லாதவை எனக் கருதி இரண்டாம் பதிப்பில் நீக்கியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. அவற்றுள் பல பகுதிகள் திராவிடத் தனித்துவத்தை வலியுறுத்துவதாகவும் தமிழுக்குப் பெருமை சேர்ப்பதாகவும்கூட உள்ளன. இலக்கிய வரலாற்றுப் பகுதிகளைக் கவனத்துடன் நீக்கியிருக்கும் பதிப்பாளர்கள் கால்டுவெல்லின் நூல் திராவிட மொழிகள் அனைத்துக்குமான ஓர் ஆய்வுநூல் என்பதை மறந்து தமிழ்ப்பெருமைக்காக மட்டுமே எழுதப்பட்ட நூலாக மாற்றி இருக்கிறார்கள் எனக் கூறத்தோன்றுகிறது.

இனி மேற்கொள்ளப்படும் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வுகள் புதிதாக வெளிப்படுத்தப்பட்டுள்ள, அனைவரின் பார்வைக்கும் கிடைக்கக்கூடிய கால்டுவெல்லின் கருத்துக்களையும் உட்கொண்டு தொடரும் என நம்புவோம்.

## துணைநூல்கள்


1. Caldwell, R. 2000/1956. **A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages, Madras,** Madras University.

2. Caldwell, R. 2008. (1st Renewed Print) (1875 2nd Ed). **A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages,** Chennai, Kavithaasaran Pathippagam.

3. Burrow, T and M.B. Emeneau 1984. **A Dravidian Etymological Dictionary,** Oxford: Clarendon Press.

4. Krishnamurti, Bh. 2003. **The Dravidian Languages, Cambridge,** Cambridge University Press.

5. Shanmugham, S.V. 2007. "Directions and their Names in Tamil" in **Chmmozi.** Mysore, Centre for Excellence for Classical Tamil, p.17.

6. Venugopala Panikkar, T.B. 1974/1999. "meelum kiizum" (in Malayalam) in VaakkiNTe VazikaL". **Edapal**: Vallathol Vidya Peedam. pp.14-18.

7. Zvelebil, K.V. 1991. 'Long-Range Language Comparison in New Models of Language Development: The Case of Dravidian' in PJDS. pp.21-32.

8. **Kannada Nighantu** (Vol.II) 1976, Bangalore, Kannada Sahitya Parishath.

9. **Kannada Nighantu** (Vol.III) 1977, Bangalore, Kannada Sahitya Parishath.

10. *கீதா, வ. 2008. ''கால்டுவெல்லின் திராவிடம்- ஒரு வாசிப்பு"* ***மாற்றுவெளி*** *(கால்டுவெல் சிறப்பிதழ்), சென்னை, பரிசல் புத்தக நிலையம், பக்.27-40.*

11. *வேதசகாய குமார், 2008. ''கால்டுவெல் என்னும் சிக்கல்"* ***மாற்றுவெளி*** *(கால்டுவெல் சிறப்பிதழ்), 2008, சென்னை, பரிசல் புத்தக நிலையம்.*

12. ***மாற்றுவெளி*** *(கால்டுவெல் சிறப்பிதழ்), 2008, சென்னை, பரிசல் புத்தக நிலையம்.*

13. *(சங்க இலக்கியத் தொடரடைவுகளுக்கு, ப. பாண்டியராஜாவின்* <http://sangamconcordance.in> *வலைத்தளம் உதவியது)*

# 13. தமிழரின் அறிவியல் நுட்பம் - தற்காலத்து ஒப்பீடு

*ப. ஐயம் பெருமாள்*

## முன்னுரை

வாழ்க்கையோடு ஒட்டிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளத்தக்க வளமும் மொழி நலமும் பெற்ற தமிழ் ஓர் உயர் மொழி. பிற மொழிகளின் உதவியின்றிச் சிறப்பாகக் கருத்துக்களை வெளிப்படுத்தும் அளவுக்குச் சொல்வளமும் கருத்துவளமும் இலக்கணக் கட்டுப்பாடும் கொண்ட தமிழ் ஒரு தனிமொழி. இயல்பான, அறிவியல் சிறப்பு மிக்க எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐவகை இலக்கணச் சிறப்புடைய தமிழ் உயர்மொழியாகும். இலக்கியச் செழுமை மிகுந்த தமிழ் தனித்துவம் மிக்கது. பிறமொழியினின்று பிறந்தது அன்று; பிறமொழிகளைத் தோற்றுவித்தது. பிற செம்மொழிகளுக்கும் சொற்களை அளித்துள்ளது என நடுநிலையாளர்களான பிற நாட்டு அறிஞர்களும் கண்டுணர்ந்துள்ளனர். பல மொழிகள் கற்ற மாக்ஸ் முல்லர், "Tamil is the most highly cultivated language and possesses the richest stores of indigenous literature" என்கிறார்.

நாற்பது ஆண்டுகளாய்க் கடும் ஆய்வு செய்து 1856இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலை வகுத்த இராபர்ட் கால்டுவெல் தமிழ் சமஸ்கிருதத்தினின்றும் தோன்றியது என்ற அக்கால மேற்கத்தியர்களது கருத்தை மறுதலித்து, "தமிழ் உயர்தனிச் செம்மொழி; தனித்தியங்கவல்லது; வடமொழியின் உதவி பெறாதது; இரண்டிற்கும் எவ்வகை உறவுமில்லை" என்கிறார். Rhys Davis என்பவரோ தமிழே பிற செம்மொழிகளுக்கு உதவிபுரிந்துள்ளது என்கிறார். "The three classic languages Sanskrit, Hebrew and Greek contain Tamil words in their vocabulary" என்பது அவர்தம் முடிவு. தெள்ளமுதின் தீஞ்சுவை கொண்ட இத்தமிழ்மொழி, "இருந்தமிழே உன்னால் இருந்தேன், இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" எனத் தமிழ்க்கற்றோர் புகழ்ந்தேத்தும் இம்மொழி என்று பிறந்தது என்பது யாரும் அறியாதது. பலர் பேசும் பிறமொழிகள் பல சில நூற்றாண்டுகள் முன்னர்தாம் தோன்றின என்பது யாவரும் அறிந்ததே. தமிழோ இயற்கை தோன்றிய காலத்தேயே தோன்றியிருக்கும் என எண்ணுகிறார் புரட்சிக்கவி.

---

*முனைவர் ப. ஐயம் பெருமாள், செயல் இயக்குநர், தமிழ் நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை - 600025.*

**திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்**
**விண்ணோடும் உடுக்களோடும்**
**மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்** - பாரதிதாசன்.

**தொன்று நிகழ்ந்தது அனைத்து முணர்ந்திடு**
**சூழ் கலைவாணர்களும் - இவள்**
**என்று பிறந்தவள் என்றுணராத**
**இயல்பினளாம் எங்கள் தாய்** -பாரதியார்.

ஞால முதல் மொழி ஒன்றிருந்தது என அறிஞர் கூறுவர். தமிழே அது என்பது மொழி ஞாயிறு தேவநேயப்பாவணர் அவர்களது ஆய்வு முடிவு.

**இலக்கியங்களில் அறிவியல்**

திருவள்ளுவர் காலத்திற்குச் சில ஆயிரம் ஆண்டுகள் முன்னர்த் துவங்கி, கிழக்கிந்தியக் கம்பெனி நம் நாட்டில் காலூன்றிய காலம்வரை தமிழர் பல துறைகளிலும் சிறந்தோங்கித் தனி ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். அதே காலங்களில் இதுபோன்ற சிறந்த நாகரிகங்கள் உலகின் பல பகுதிகளிலும் தோன்றி வளர்ந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை என்றபோதும் இலக்கியங்கள் நமக்குணர்த்தும் தமிழர் என்ற இனமும் தனியே அவர்க்குள்ள குணமும் போற்றிப் புகழத்தக்கவை. நதிகளின் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல், பாசன முறை, நெருப்பை உண்டாக்கிக் கட்டுப்படுத்திப் பயன்படுத்தும் திறன், விலங்குகளை அடக்கியாண்டு அவற்றைப் பணிகளுக்குப் பயன்படுத்தும் நுட்பம், உலோகங்களைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்துதல், உழவு, உழவுக்கருவிகள், பயணங்களுக்குச் சக்கரங்கள் கொண்ட வண்டிகளை உருவாக்குதல், நெசவு, மண்பாண்டம் வனைதல், போர்த்துறை நுட்பங்கள், தற்காப்புக் கலைகள், நகரமைப்பு அரசாட்சி முறை, நாவாய் அமைத்தல், செலுத்துதல், மொழியியல், மருத்துவம், காலநிலை அறிதல், வானவியல் போன்ற துறைகளிலும் இன்னபிற துறைகளிலும் நம் முன்னோர் ஆளுமை செலுத்தி வந்ததை அகழ்வாய்வுகள் வாயிலாகவும் இலக்கியங்களின் வாயிலாகவும் நாம் அறிகிறோம்.

சங்கத் தமிழிலக்கியங்களாம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய பதினெண்மேல்கணக்கு நூல்களிலும் அவற்றையொட்டிப் பிறந்த

**நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்**
**பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்**
**இன்னிலை சொல் காஞ்சியுடன் ஏலாதி...**

எனும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் இவையல்லாத **சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி** ஆகிய

ஐம்பெரும் காப்பியங்களிலும் **நீலகேசி, சூளாமணி, உதயண குமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம்** ஆகிய ஐஞ்சிறு காப்பியங்களிலும் **பெருங்கதை, பெரியபுராணம், கம்பராமாயணம், கந்தபுராணம், நளவெண்பா, வில்லிபாரதம், அரிச்சந்திர புராணம்** ஆகிய பிற காப்பியங்களிலும் பன்னிரு திருமுறைகளிலும் பிற பக்தி இலக்கியங்களிலும் எண்ணிறந்த அறிவியல் கருத்துக்கள் உள.

**கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து** (குறள் 496)

பெரிய, வலிய தேர்க்கால்களையுடைய தேர் தனக்கு உள்ள வலிய சக்கரக் கால்கள் கொண்டு கடல்மேல் ஓடமுடியாது. அதுபோலவே கடலில் மிதந்து ஓடும் படகு தரையில் ஓடமுடியாது.

கடலில் ஓடக்கூடிய கப்பல் தரையில் ஓட முடியாது . தரையில் ஓடக்கூடிய நெடுந்தேர் கடலில் ஓட முடியாது. அக்காலத்தில் கனமான பொருள்கள் நீரில் மூழ்கும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். ஆழமாகப் படித்து, மாற்றுச் சிந்தனையாக நினைத்திருந்தால் மட்டுமே கடலிலும் தரையிலும் ஓடக்கூடிய, மெத்தூர்தி, வளி ஊர்தி (Hovercraft) என்ற கலத்தைக் கண்டுபிடித்திருக்க முடியும்.

**பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்** (குறள் 475)

எந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டாலும் அதிகப்படியான எடையைத் தாங்கக்கூடிய சக்தி உண்டு. அதற்கு மேல் எடை அதிகரித்தால் பொருள் உடைந்துவிடும். இதை வள்ளுவர் அழகாகக் கூறுகிறார். அந்தக்காலத்தில், Universal Testing Machine போன்ற பொருள்கள் இல்லாத காலத்தில் அழகாகப் பொருள்களின் தன்மையை விளக்கியுள்ளனர்.

**சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு** (குறள் 27)

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து உணர்வுகளுக்கும் காரணமான வாய், கண், மெய், செவி, நாக்கு எனும் ஐந்து உறுப்புகளையும் அடக்கி ஆளும் ஆற்றல் கொண்டவனுக்கே உலகம் கட்டுப்படும்.

தற்காலத்தில் பேசப்படுகிற செயல்வழி கற்றல் (Activity based education) பற்றி அழகாகக் கூறுகிறார். எந்த ஒரு செயலையும் மூளைக்குக் கண் மூலமாக, காது மூலமாக, சுவை உணர்வு மூலமாக, நுகர்தல் மூலமாக, தொடு உணர்த்தல் மூலமாக எடுத்துச் சென்றால் நீண்ட நாள்களாக அவற்றை நம் மனதில் இருத்தி வைக்க முடியும். அதன் காரணமாகப் புதிய கருத்துக்களை வெளியே கொண்டுவர உறுதுணையாய் இருக்கும்.

காசிநகர் புலவர் பேசும் உரைதான்

காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

மகாகவி பாரதியார் அவர்கள் காசிநகரில் ஆற்றும் உரையைக் காஞ்சிநகரில் இருந்து கேட்பதற்கான கருவியைப் பற்றிக் கேட்டிருந்தார். ஆனால் தற்காலத்தில் காசி மட்டுமில்லாமல் உலகில் வேறு எந்த இடத்திலிருந்தும் நேரடியாக உரையாற்றுகின்ற காணொளிக் காட்சியைக் (Video Conferencing facility) கண்டுபிடித்திருக்கிறோம். அறிவியல் கருத்துக்கள் பொதிந்துள்ள நம்முடைய இலக்கியப் பாடல்களை ஆராய்ந்தால் பல நல்ல அறிவியல் தொழில்நுட்பத்தைச் சார்ந்த பொருள்களை உருவாக்க முடியும்.

அறிஞர் பெ.நா. அப்புசாமி அவர்கள் அறிவியலின் முக்கியத்துவத்தையும் அதைக் கண்டுபிடித்த அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை முறையையும் மாணவர்களும் கிராம மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அறிவியல் அறிஞர்களைப் பற்றியும் அறிவியல் பற்றியும் பல நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். குறிப்பாகச் சர்வதேச விஞ்ஞானிகள், அறிவியல் மேதைகள் பற்றிப் பல நூல்கள் எழுதியிருக்கிறார்.

1967ஆம் ஆண்டு '**விண்வெளியுகப் பாட்டனார்**' என்ற தலைப்பில் உள்ள கட்டுரையில் விண்வெளியுகம் என்று குறிப்பிட்டுள்ளார். பிறகு சந்திர யுகம் என்றும் இனி, சில நாள்களில் செவ்வாய் யுகம், வெள்ளி யுகம், வியாழன் யுகம் என்றெல்லாம் படிப்படியாகத் தோன்றக் கூடும் என்றும் கூறுகிறார். நாம் இப்பொழுது சந்திரனைக் குறித்து ஆராய்ச்சி பல செய்து பலமுறை மனிதனைச் சந்திரனில் இறக்கி ஆய்வு செய்துள்ள நிலையை அடைந்துள்ளோம்.

மேலும் விரைவில் செவ்வாய்க் கோளுக்குச் சென்று ஆராய்ச்சி மேற்கொள்ளும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். (Red Rover goes to Mars, Mars Mission Programme). அதேவேளையில் வெள்ளியைப்பற்றி Pioneer, என்ற விண்கலத் திட்டத்தின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. அதேபோல் வியாழன் பற்றி விண்கலங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் இருந்த காலக்கட்டங்களில் இயற்றப்பட்ட சங்க இலக்கியப் பனுவல்களில் ஓரளவே இன்று நம்மிடையே உள. வெவ்வேறு காலக்கட்டங்களில் இயற்றப்பட்ட இப்பாக்கள் கொண்டு அக்காலத்துத் தமிழர் பண்பாட்டை நாம் உணர்கிறோம்.

வானவியலில் வான்பொருட்களின் தொலைவை ஒளியாண்டுகளால் அளப்போம். பத்து ஒளியாண்டிற்கு அப்பால் உள்ள விண்மீன் என்றால் அந்த விண்மீனில் பத்து ஆண்டுகளுக்கு முன்னர்ப் புறப்பட்ட ஒளியை இன்று நாம் ஆராய்கிறோம் என்று பொருள். இதுபோல ஆயிரம் ஒளியாண்டுகள், பதினாயிரம் ஒளியாண்டுகள், பல கோடி ஒளியாண்டுகள் என வேறுபட்ட

தொலைவுகளில் வான்பொருட்களை ஆய்வு செய்யும் பொழுது இந்தப் பேரண்டம் பதினாயிரம் அல்லது பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் எப்படியிருந்தது என உணரமுடியும். எனவே இத்தகு வான்பொருட்களைக் 'கால இயந்திரங்கள்' எனக் கருதுவோம். இதுபோலவே சங்க இலக்கியங்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில் இயற்றப்பட்டிருப்பதால் அவற்றை ஆய்வு செய்யும் பொழுது கால ஓட்டத்தில் நாம் பின்னால் சென்று முற்காலத்தை அடைகிறோம். எனவே இலக்கியங்களும் கால இயந்திரங்களே.

**அறிவியல் மொழி தமிழ்**

அறிவியல் என்பதற்குப் பலவகையான வரையறைகள் உண்டு. "Systematized knowledge derived from observation, study, and experimentation carried on in order to determine the nature or principles of what is being studied" என்பது ஒரு பொதுவான விளக்கம். இவ்வகை விளக்கங்களை ஆங்கில அகராதிகளில் காணலாம். தமிழ்அறிவியலுக்கும் உண்மையான வரையறை தருகிறது.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு** *(குறள் 423)*

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.** (குறள் 355)

பகுத்தறிவும் அறிவியல்தான். அறிவியல் மட்டுமன்று பொதுவாழ்வில் அறத்தையும் எடுத்தியம்புவன பண்டைத் தமிழ் இலக்கியங்கள். மனித இனம் ஒருவரது நெற்றியிலிருந்தோ, தோளிலிருந்தோ, மார்பிலிருந்தோ, காலிலிருந்தோ பிறந்தது என்று அறிவியலுக்கும் பகுத்தறிவிற்கும் அறத்திற்கும் புறம்பாகப் பேசாது,

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்** (குறள் 972)

என அறிவியல் மனப்பான்மையுடன் எடுத்தியம்பியது செந்தமிழ் மொழியே. அறிவியல் மட்டுமன்று; கணிதத்திலும் கரைகண்டது தமிழினம். எண்ணையும் எழுத்தையும் கண்ணெனக் கொண்ட பண்டைத்தமிழ் நூல் தொகுப்புகளின் பெயர்கள்கூட ***எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் மேல்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு, ஐங்குறுநூறு, புறநானூறு, அகநானூறு, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, நாலடியார், பதிற்றுப்பத்து*** என்று அமையக்காண்கிறோம். இப்பொழுது உலகமெங்கும் பயன்படுத்தப்படும் எண்முறையும் தமிழ் முறையிலிருந்து அரபு நாடுகளுக்குச் சென்றதுதான் எனவும் ஒரு கருத்து உள்ளது. தமிழர் வழக்கத்தில் அமைந்த பின்னம் என்ற பின்ன

முறையும் மிகவும் நுணுக்கமாய் அமைந்துள்ளதை நாம் காண்கிறோம். (**தொல்காப்பியத்தமிழ்**, தேவநேயப்பாவாணர்).

ஒன்று (1), முக்கால் (3/4), அரை (1/2), கால் (1/4), மும்மாகாணி (3/16), அரைக்கால் (1/8), மாகாணி (1/16), அரைமாகாணி (1/32), கால் மாகாணி (1/64), நான்மா, மும்மா (3/20), இருமா (1/20), ஒருமாமுக்காணி (1/20), அரைமா (1/40), காணி (1/80), அரைக்காணி (1/160) மேல் முந்திரி (1/320), கீழ் முந்திரி, இம்மி, மும்மி, அணு, குணம், பந்தம், பாகம், விந்தம், நாக விந்தம், சிந்தை, கதிர் முனை, குரல்வளைப்பிடி, வெள்ளம், நுண்மணல், தேர்த்துகள் எனப்பின்னங்களை நுணுகி வரையறுத்துள்ளனர். ஒரு தேர்த்துகள் என்பது

1/2323824530227200000000 ஆகும். (**தொல்காப்பியத்தமிழ்**, தேவநேயப்பாவாணர்).

**இரண்டு முதன்வொன்பானிறுதிமுன்னர்**
**வழங்கியன் மாவென்கிளவி தோன்றின்**
**மகரவளவொடு நிகரலுமுரித்தே(76)**

எனும் **தொல்காப்பியக்** குற்றியலுகரப்புணரியல் நூற்பாவில் மா வென்னும் அளவை கூறப்பட்டுள்ளதால் ஏனைய அளவுகளும் தொல்காப்பியர் காலத்தில் வழங்கின எனக் கொள்ளலாம் .நீட்டலளவைகளிலும் வரையறை இருந்தது.

1 காதம் என்பது 4 கூப்பிடு, 1 கூப்பிடு என்பது 500 கோல்; ஒரு கோல் என்பது 4 முழம், 1 முழம் என்பது 2 சாண், 1 சாண் என்பது 12 பெருவிரல், 1 பெருவிரல் என்பது 8 நெல்; ஒரு நெல் என்பது 8 கடுகு, 1 கடுகு என்பது 8 நுண்மணல், 1 நுண்மணல் என்பது 8 மயிர், 1 மயிர் என்பது 8 பஞ்சிலை, 1 பஞ்சிலை என்பது 8 தேர்த்துகள் 1தேர்த்துகள் என்பது 8 அணு.இவ்வகையில்தேர்த்துகள் (= $10^{-10}$ meter) என்பது தற்காலத்தில் நாம் கணித்துள்ள உண்மையான அணுவின் அளவை(diameter of the atom = $10^{-10}$ meter)ஒத்தது.

**இலக்கியங்களில் அறிவியல் தொழில்நுட்பக் குறிப்புகள்**

பண்டைத் தமிழர்கள் அறிவியலின் பெரும்பாலான இன்றிமையாத துறைகளில் ஆழ்ந்த அறிவைப்பெற்றிருந்ததற்கான சான்றுகளை நாம் பண்டை இலக்கியங்களில் காண முடிகிறது. தனித்த அறிவியல் தொழில் நுட்ப ஏடுகளைப் பண்டைத்தமிழர் ஏற்படுத்தினார்களா என்பது ஆராயத்தக்கது. அப்படி ஏற்படுத்தி அவை பிற்காலத்தில் அழிக்கப்பட்டோ அழிந்துபட்டோ போயினவா என்பதுவும் புலப்படவில்லை. என்றபோதும் இலக்கியங்களில் ஆங்காங்கே நாம் காணும் குறிப்புகளால் தமிழர் தம் அறிவியல் தொழில்நுட்ப ஆற்றல் நன்கு விளங்குகிறது.

**வானவியல்**

தமிழர்தம் வானவியல் அறிவு தனித்துவம் வாய்ந்தது. **புறநானூற்றின்** முதல் பாடலே 'நிலவின் இளம்பிறை' என வான்பொருளின் பெயரால் துவங்குகிறது. முடிவாக வரும் 400 ஆம் பாடலோ 'மாவிசும்பின் வெண்திங்கள் மூ-ஐந்தான்முறை முற்ற' என வானத்தையும் நிலவின் கலையையும் குறிப்பதாக அமைந்துள்ளது. அதுமட்டுமன்று சொல்லோவியமாம் **சிலம்பும்** 'திங்களைப் போற்றுதும்' என்றும் 'ஞாயிறு போற்றுதும்' என்றுமே துவங்குகின்றதன்றோ. நம் முன்னோர் தங்கள் வானவியல் அறிவினை அடிப்படையாகக் கொண்டே நாள்காட்டி முறையை அமைத்தனர்.

வேளாண்மைத் தொழில் செம்மையாக நிகழ வேண்டுமாயின் ஏற்ற பருவகாலங்களைக் கணிக்க வேண்டும். இதில் தவறு நேரிட்டால் விளைச்சல் குறைந்து பஞ்சம் எனும் துன்பம் நேரிட்டுவிடும்.மேலும், நம் முன்னோர்கள் பெரும்பாலும் திருவிழாக்களை நிலவொளி மிகுந்த முழு நிலவு நாள்களிலேயே அதுவும் பருவ காலத்தில் மாற்றம் இல்லாதவாறு அமைத்துக்கொண்டனர். இதற்கும் அவர்தம் வானவியல் அறிவே அடிப்படை. சில நாடுகளில் நிலவின் கலைகளை அடிப்படையாகக் கொண்டு சந்திரமுறை நாள்காட்டியை உருவாக்கியுள்ளனர். சுமேரியர்கள், மற்றும் கிரேக்கர்கள் ஆரம்பக் காலத்தில் உருவாக்கியவை இவ்வகை நாள்காட்டிகள். இசுலாமியர்கள் இன்றைக்கும் இத்தகு நாள்காட்டியையே பயன்படுத்துகின்றனர்.ஆயின், இம்முறையில் பருவ காலங்கள் அடுத்தடுத்த ஆண்டுகளில் அதே மாதங்களில் அதே நாள்களில் நிகழா.

சந்திர மாதத்தில் இரண்டு முழு நிலவுக்கு இடைப்பட்ட காலம் $29^{1/2}$ நாள்கள் ஆகின்றது. இவ்வகையில் 12 முழு நிலவு மாதங்கள் முடிவதற்கு 354 நாள்கள்தாம் ஆகின்றன. ஆயின் சூரிய ஆண்டு எனப்படும் 365.242 நாள்கள் கொண்ட ஆண்டிற்குச் சுமார் 11 நாள்கள் குறைவாகச் சந்திர ஆண்டு முடிந்து விடுகிறது. இதனால் பருவகாலத் தொடக்கங்களும் திருவிழாக்களும் 11 நாள்கள் முன்னதாக அடுத்தடுத்த ஆண்டுகளில் நிகழ்ந்து குழப்பத்தை உண்டு பண்ணும்.தமிழர்களது நாள்காட்டியில் சூரியன் 12 இராசி மண்டலங்களில் முதலாவதான மேஷ இராசியில் நுழையும் நாள் சித்திரை 1 என ஆண்டு முதல் நாளாகக் கொள்ளப்படுகிறது. அடுத்தடுத்த இராசி மண்டலங்களில் ஞாயிறு செலவிடும் நாள்கள் மாதங்களாகின்றன. அந்தந்த ஞாயிறு மாதங்களில் சந்திரனின் கலைகளைக் கொண்டு திதிகள் என்ற சந்திர நாள்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்தமுறை சந்திர-சூரிய நாள்காட்டி முறையாகக் கருதப்படுகின்றது. இதனால் சித்திரை மாதத்தில் முழுநிலவு நாளில் சித்திரை நட்சத்திரத்தின் அருகே நிலவு தோன்றும்.இது சித்திரா பௌர்ணமி எனக் கொண்டாடப்படுகின்றது. இதுபோலவே வைகாசி விசாகம், தைப்பூசம், கார்த்திகை தீபம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக்களைத் தமிழர்கள்

பாங்குடன் கொண்டாடினர். இவை அந்தந்தப் பருவகாலங்களில் சரியாக நிகழ்ந்து வருகின்றன.மேலும், கோள்களின் நகர்வைக் கணித்து 12 ஆண்டுக்கொருமுறை நிகழும் மகாமகம் போன்ற பூசனைகளும் நிகழ்ந்தன. பூமியின் சுழற்சியால் சூரியன் வடக்கும் தெற்குமாக நகர்வது போன்றதொரு தோற்றத்தைத் தருகிறது.

இப்படிப்பட்ட நகர்வுகளை நன்கு கணித்தறிந்துள்ள நமது முன்னோர்கள் குறிப்பிட்ட நாள்களில் சூரியக் கதிர்கள் கோவில்களின் கருவறைக்குள் விழுமாறு அமைத்துள்ள கோவில்களின் வடிவமைப்புகள் தமிழர்களது கட்டடக் கலை மற்றும் வானவியல் அறிவை எடுத்தியம்புவன. மேலும், வானவியல் அறிவு இரவில் திசைகாட்டியாகவும் காலங்காட்டியாகவும்கூடப் பயன்பட்டுள்ளது.

நமது பேரண்டத்தைப் பற்றியும் அதில் விரிவடைந்து விரைவாக ஒன்றை விட்டு ஒன்று விலகிச் செல்லும் அண்டங்களைப் பற்றியும் நாம் 20-ஆம் நூற்றாண்டில்தான் அறியப்பெற்றோம். 16-ஆம் நூற்றாண்டில்கூடப் புவிமையக் கொள்கையைப் பெரும்பாலான வானவியலாளர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆனால், வியக்கத்தக்க வகையில் 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருவாதவூரில் பிறந்த மாணிக்கவாசகர் 658 பாடல்களுடன் இயற்றிய பக்தி இலக்கியமாம் **திருவாசகத்தில்** திருவண்டப் பகுதியில் இன்றைய நாளில் அறிவியல் அறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ள பேரண்டவியல் கருத்துக்களைத் தொலைநோக்குடன் எவ்வளவு அழகுற எடுத்தியம்புகிறார் என்பதைக் காண்போம்.

**அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி**
**ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன**
**இன்னுழை கதிரின் துன்அணுப் புரையச்**
**சிறியவாகப் பெரியோன் தெரியின்**

இதன் கருத்து :

பேரண்டமாவது எண்ணிறந்த கோளங்களையுடையது. அக்கோளங்களின் தன்மையை முற்றிலும் தெரிந்துகொள்ள முடியாது. ஆராயும் அளவு அவைகளின் அழகும் சீரமைப்பும் கண்டு வியப்பதற்கு உரியவைகளாக இருக்கின்றன.ஒவ்வொரு கோளத்திலும் ஒரு தனியழகு மிளிர்கிறது. விளக்கிச்சொல்லுமிடத்துக் கோடிக்கணக்கில் அவை பேரண்டத்தில் விரிந்து போகின்றன.

ஒரு பொத்தலில் வீட்டுக்குள் வருகிற சூரிய வெளிச்சத்தில் அணுப்போன்ற தூசிகள் அலைந்து திரிவது தென்படுகிறது. அதுபோன்ற

கோளங்கள் வானத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன. சிறியதாகிய அணுவிற்கும் பெரியதாகிய ஒன்றிற்கும் அமைப்பு ஒன்றேயாகும். ஆராய்ந்து பார்ப்பவருக்கு இவ்வுண்மை விளங்குகிறது (**திருவாசகம்**- தெளிவுரை : எம். நாராயண வேலுப்பிள்ளை: வர்த்தமானன் பதிப்பகம்).

பேரண்டத்தில் பலகோடி அண்டங்களும் அவற்றில் கணக்கற்ற விண்மீன்களும் இருப்பதைத் தற்காலத்தில் நாம் உணர்ந்திருக்கிறோம். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் கண்களுக்குப் புலனாகும் ஐந்து கோளங்களையே (புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி) அறிந்திருந்தனர். இவை தவிர ,சந்திர சூரியரையும் வானக் கூரையில் பதித்த சிறுபுள்ளிகள் என அவர்கள் அறிந்த விண்மீன்களையும் கொண்ட சிறிய அமைப்பே பிரபஞ்சம் என அவர்கள் எண்ணியிருந்தார்கள். அக்காலத்தில் எண்ணிறந்த கோளங்களை (விண்மீன்களை)க் கொண்டது பேரண்டம் எனப் பொருள்பட

**அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி**

என்று மாணிக்கவாசகர் இயம்புகிறார்.

இந்தப் பேரண்டமானது தொடர்ந்து விரிவடைந்து செல்கிறது. தனியழகு மிக்க பலகோடிக் கணக்கில் எண்ணிக்கையுடைய அண்டங்கள் ஒன்றைவிட்டு ஒன்று விலக்கமுறுகின்றன என்பதை எட்வின் ஹப்பிள் என்ற வானவியலாளர் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கண்டறிந்தார். இவை பற்றி இனிவரும் பகுதியில் காண்போம். இதே கண்டுபிடிப்பை உணர்த்துவது **திருவாதவூராரின் திருவண்டப் பகுதியின்** மூன்றாம் நான்காம் வரிகள்.

**ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்படவிரிந்தன**

இப்படி விரவிச் செல்லும் அண்டங்கள் அவரது முன்னறி பார்வையில் சூரியனது ஒளிக்கதிர் இருண்ட அறையில் செல்லும்போது அவற்றில் அலைந்து திரியும் தூசுகள் போல எண்ணிக்கையில் பலவாக இருப்பன போல் தெரிகிறதாம்.

'**இன்னுழை கதிரின் துன் அணுப்புரைய.....**' அணுக்களின் அமைப்புப் பற்றிய விளக்கங்கள் நீல்ஸ் போர், தாம்சன் போன்ற அறிவியலாளர்களின் கடும் முயற்சியால் 20-ஆம் நூற்றாண்டில் இயற்பியலின் பொற்காலம் என்றழைக்கப்பட்ட காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டவை. அதன்படி அணுக்கருவும் அதனை ஆற்றல் பரிதிகளில் சுற்றும் எதிர் மின்துகள்களும் சுட்டிக்காட்டப் படுகின்றன. பேரண்டத்திலும் விண்மீனைச் சுற்றும் கோள்களும் அண்டத்தின் மையத்தைச் சுற்றும் விண்மீன்களும் அவ்வாறே சுற்றி வருகின்றன. இவற்றின் மையத்திலிருக்கும் ஈர்ப்புவிசை தூரம் செல்லச் செல்லக் குறைகிறது.

அணுக்கருவில் உள்ள மின்காந்த விசையும் இதுபோலவே தூரம் செல்லச் செல்லக் குறைகிறது. இவற்றையெல்லாம் முன்னரே உணர்ந்தது போல மாணிக்கவாசகர்,

**'சிறியவாகப் பெரியோன் தெரியின்'** எனச் சுருக்கமாகக் குறிக்கிறார். இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப் அவர்கள்

'So is he the GREAT ONE, who exists in the minutest elements'

என எழுதியுள்ளார். திருவண்டப் பகுதி எனும் தலைப்பினை அவர் 'The nature and development of the universe' என மொழிபெயர்த்துள்ளார். நாம் இங்கு எடுத்தியம்பியுள்ள ஆறு வரிகளும் ஜி.யு.போப் அவர்களது மொழி மாற்றத்தில் கீழ்வருமாறு இடம்பெறுகின்றன.

'The development of the sphere of the elemental universe
its immeasurable nature, and abundant phenomena,
if one would tell their beauty in all its particulars,
As when, more than a hundred millions in number spread abroad,
The thronging atoms are seen in the ray that enters the house,
So is the GREAT ONE, who exists in the minutest elements'

இவை மட்டுமல்ல திருவண்டப் பகுதியில் நாம் காணும் வேறுபல வரிகளும் ஆழ்ந்த கருத்துக்கள் ஊறியவை.

விண்மீன்கள் உவமைகளாக, ஏராளமான பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

**மதியம் கொடுத்த வயமீன் எனத்தம்பி மாழாந்து**
**உதிதற்கு உரியாள் பணியால் உடன் ஆயவாறும்**
*(சீவகசிந்தாமணி 25)*

நிலவைப் பிரிந்த உரோகிணிபோலச் சச்சந்தன் சீவகனைப் பிரிந்து வாடினான். இங்கு உரோகிணி வயமீன் எனக் குறிக்கப்படுகிறது.

**பட்டினப்பாலை** *(34-38)* அரிவாள்போல வளைந்து காணப்படும் சிம்ம இராசி மண்டலத்திலுள்ள மகம் என்ற விண்மீனின் வடிவை வளைந்த பொய்கையின் கரைக்கு ஒப்புமை கூறுகிறது. ஆங்கிலத்திலும் சிம்மராசியின் இப்பகுதியை அரிவாள் (Sickle) என்றே அழைக்கின்றனர்.

**மழை நீங்கிய மாவிசும்பில்**
**மதி சேர்ந்த மக விண்மீன்**
**உருகெழுதிறல் உயர் கோட்டத்து**
**முருகு அமர் பூமுரண் கிடக்கை**
**வரி அணி சுடர்வான் பொய்யாக**

அதாவது 'மழை மாசு நீங்கிய பெரிய ஆகாயத்தில் திங்களைச் சேர்ந்து விளங்கும் மகம் எனும் வெண்ணிற நாள் மீனின் வடிவத்தைப்போன்ற வடிவத்தைக் கொண்டதாக வலிமையுடன் அமைக்கப்பட்ட உயர்ந்த கரைகளைப் பெற்ற நல்ல பொய்கை உள்ளது. இது மணம் வீசும் பன்னிறப்பூக்களின் சேர்க்கையால் பல நிறத்துடன் காட்சியளிக்கிறது' என்கிறார் புலவர்.

கோள்கள் விண்மீன் மண்டலங்களின் இடையில் நின்ற அமைவுகள் காலத்தின் பதிவுகளாக நம் பண்டை இலக்கியங்களில் காணப்படுகின்றன. கண்களுக்குப் புலனாகும் புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஐந்து கோள்களும் சந்திரனும் வானில் விண்மீன்களினிடையே இருந்தமை பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாள் (திதி) என நம் முன்னோர் குறிப்பிடுவது சந்திரனின் பிறையின் அளவைக் குறிப்பதாகும்.

**மாவிசும்பின் வெண்திங்கள்**
**மூ - ஐந்தான் முறை முற்ற**
**கடல் நடுவண் கண்டன்ன . . .** *(புறம் . 400)*

விசும்பின்கண் இயங்கும் வெண்மதியம் 15 நாள் திதி முறையே முடியக் கடல் நடுவில் அதனைக் கண்டார். விசும்பு என்பது வானம்.

**சேயுயர் விசும்பின் நீர் உறு கமஞ்சூல்** *(குறுந்தொகை 314)*

வானம் வான் என்றும் குறிப்புப் பெறுகிறது.

**வான் ஊர் மதியம் வரை சேரின்** *(கலித்தொகை 190-1)*

நட்சத்திரம் என ஒரு நாளைக் குறிப்பது வானில் சந்திரன் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் இருக்கும் விண்மீனைக் குறிக்கும். சந்திரன் ஒரு விண்மீனின் அருகே நீண்டகாலம் இருக்குமென்பதால் மேலும் குறிப்பாக நேரத்தைக் குறிக்க அந்த நேரத்தில் கிழக்கில் உதிக்கும் விண்மீன் மண்டலத்தையும் குறித்தனர். இது இலக்கினம் என இப்போது வழங்கப்படுகிறது. இது 2 மணிக்கொன்றாய் மாறும். **கம்பராமாயணம்** கோசலையும் கைகேயியும் சுமித்திரையும் மகவுகள் பெற்ற நேரத்தை நட்சத்திரம் மற்றும் இலக்கினத்துடன் குறிக்கிறது (பாலகாண்டம் -284 ). **கம்பராமாயணம்** மட்டுமன்று **பரிபாடலின்** பதினொராம் பாடலைக் கொண்டு அந்நிகழ்வு நடந்த நாளையே கணித்துவிடலாம். வைகையில் வெள்ளம் வந்த நாளாம் அது.

**விரிகதிர்மதியமொடு, வியல்விசும்பு புணர்ப்ப**
**எரி, சடை, எழில் வேழம், தலையெனக்கீழ் இருந்து**
**தெரு இடைப்படுத்த மூன்று ஒன்பதிற்று இருக்கையுள்**
**உருகெழு வெள்ளிவந்து ஏற்றியல் சேர**

**வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருள் தெரி**
**புந்தி மிதுனம் பொருந்த, புலர் விடியல்**
**அங்கி உயர் நிற்ப, அந்தணன் பங்குவின்**
**இல்லத்துணைக்கு உப்பால் எய்த, இறையமன்**
**வில்லின் கடைமகரம் மேவப் பாம்பு ஒல்லை**
**மதியம் மறைய, வருநாளில் வாய்ந்த**
**பொதியில் முனிவன் புரைவரைக் கீறி**
**மிதுனம் அடைய, விரிகதிர் வேனில்**
**எதிர்வரவு மாரி இயைகஎன இவ்வாற்றால்**
**புரைகெழு சையம் பொழிமழை தாழ**
**நேரி தரூஉம் வையைப் புனல்**

**பரிபாடல்** 3 ஆம் நூற்றாண்டிற்கும் 7 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச்சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கருதுகிறார்கள். இது சங்க காலத்தின் கடைசிப்பகுதியில் பாடப்பட்டிருக்கலாம். **பரிபாடலையும் திருமுருகாற்றுப் படையையும்** தவிரப் பிற சங்கப் பாடல்கள் மதச்சார்பற்றவையாகவே காணப்படுகின்றன. **பரிபாடல்** திருமாலையும் முருகனையும் மதுரை நகரையும் வைகை நதியையும் பாடுவதாக அமைந்துள்ளது.

மேலே நாம் காணும் பாடலில் விண்ணில் மூன்று வீதிகள் கூறப்படுகின்றன. கன்னி, துலாம், மீனம், மேஷம் ஆகியவற்றை அடக்கிய ரிஷபவீதி. விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய இராசிமண்டலங்கள் கொண்ட மிதுன வீதி. ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம் ஆகியன அமைந்த மேஷவீதி ஆகிய மூன்றுமே அவை. மேலும் இவ் வீதிகள் ஒவ்வொன்றிலும் ஒன்பது நாள்களை நிலவு கழிப்பதாய்க் கூறப்படுகிறது. இதில் ஒவ்வொரு இராசி மண்டலத்தையும் 25 நாள்களில் நிலவு கடக்கிறது. எனவே மொத்தம் 27 நாள்களில் இம் மூன்று வீதிகளையும் கடப்பதாக இங்குக் கூறப்படுகிறது. உண்மையில் சந்திரன் பூமியை ஒருமுறை சுற்றிவர 27.33 நாள்கள் ஆகின்றன. **பரிபாடல்** காட்டும் 27 நாள்கள் இதற்கு மிகவும் அருகில் பொருந்திவருவதையும் முழுநிலவிலிருந்து முழுநிலவுவரை கணக்கிடும் 29.5 நாள்களை அவர்கள் எடுத்துக் கொள்ளாததும் கவனிக்கத் தக்கது. இனி, பாடல்வரிகளில் கோள்களின் அமைவு எவ்வாறு இயம்பப்படுகிறது எனப்பார்ப்போம்.

**உருகெழு வெள்ளி வந்து ஏற்றியல் சேர**

இங்கு ஏறு எனப்படுவது ரிஷபராசி; வெள்ளிக்கோள் ரிஷப இராசியில் காணப்படுகிறது.

**வருடையைப் படிமகன் வாய்ப்ப**

படிமகன் என்பது செவ்வாயைக் குறிக்கும். வருடை- ஆடு எனவே மேஷ இராசியில் செவ்வாய் என்பதாகிறது.

**புந்தி மிதுனம் பொருந்த**

புந்தி எனப்படுவது புதன் கோளே.

**அந்தணன் பங்குவின் இல்லத்துணைக்கு உப்பால் எய்த**

அந்தணன் என வியாழனைக் குறிக்கின்றனர். இந்த வரி வியாழன் மீன இராசியில் இருப்பதைக் குறிப்பிடுகிறது.

**இறையமன் வில்லின் கடை மகரம் மேவ**

இறையமன் எனச் சனியைக் குறிப்பதால் சனிக்கோள் மகரத்தில் இருந்தது எனப் பொருள்படுகிறது.

**பொதியில் முனிவன் புரைவரைக் கீறி மிதுனம் அடைய**

இது ஒரு விண்மீனாகிய அகஸ்திய விண்மீனைக் குறிக்கிறது. இது புரோசயான் (Procyon) என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் ஒளிவாய்ந்த விண்மீனாக இருக்கலாம்.

**பாம்பு ஒல்லை மதியம் மறைய**

இங்கு நிலவைப் பாம்பு விழுங்குவதாகக் கூறப்பட்டுள்ளதால் அது அப்போது சந்திரகிரகணம் நிகழ்ந்ததைக் குறிப்பிடுகிறது.

இக் கருத்துக்களைக் கொண்டு ஆய்வு செய்தால் கி.பி. 634 இல் ஜூலை மாதத்தின் மையத்தில் உள்ள ஒரு நாளைச் சுட்டுவது போல் தோன்றுகிறது. என்றாலும் அந்த நாளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே **பரிபாடல்** எழுதப்பட்டிருக்க வேண்டும் எனவும் சிலர் நம்புகின்றனர். இதுபோன்ற கோள்களின் அமைவுகளும் சந்திர கிரகணமும் முன்னரோ பின்னரோ வேறுநாள்களிலும் நிகழ்ந்திருக்கலாம். இதனைக் கண்டுபிடிக்க ஆழ்ந்த ஆராய்ச்சிகள் தேவை.

சங்கப் புலவர்களான ஆவூர் மூலம் கீழாரும் ஐயூர் மூலம் கிழாரும் சந்திரன் மூலம் எனப்படும் த்னுசு இராசியில் உள்ள விண்மீனுக்கு அருகே இருந்தபோது பிறந்திருக்கலாம்.

கருத்தைக் கவரும் குறிப்புகளையும் ஏனைய சில அறிவியல் குறிப்புகளையும் இங்குக் காண்போம்.

ஒளிவிலகல் காரணமாக ஒளிவில்லைகளைக் (Lens) கொண்டு பொருட்களை உருப்பெருக்கிக் காண்பதை ஒளியியலில் இயற்பியல் மாணவர்கள் பயில்கின்றனர். கபிலதேவர் சிறு புல்லின் மீது படிந்துள்ள பனித்துளியிலேயே ஒளிவில்லைகளின் உருப்பெருக்கத்திறனை ஆய்வு செய்கிறார்.

**தினையளவு போதாச் சிறுபுல்நீர், நீண்ட**
**பனையளவு காட்டும் படித்தால் - மனையளவு**
**வள்ளைக்கு உறங்கும் வளநாட!வள்ளுவனார்**
**வெள்ளைக் குறட்பா விரி** (திருவள்ளுவ மாலை - கபில தேவர்)

ஒத்ததிர்வு (resonance) பற்றியும் இழுத்துக்கட்டப்பட்ட சவ்வுகளில் தோன்றும் அதிர்வுகள் (Vibration) அவற்றால் தோன்றும் ஒலி மாறுபாடுகள் பற்றிய இயற்பியல் ஆய்வுகளைத் தற்கால அறிவியலாளர்கள் மேற்கொண்டுள்ளனர். அக்காலத்தில் ஒலியியல் வல்லுநர்களான தமிழர்களது திறனைப்பற்றிப் பார்ப்போம்.

இசைக்கருவிகள் இயங்கள் எனப்பட்டன. சிறிய பல இசைக் கருவிகள் 'குறும்பல்லியங்கள்' எனப்பட்டன. பெரிய பல இசைக்கருவிகள் 'நெடும்பல்லியங்கள்' எனப்பட்டன. இவை தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக் கருவி என நால்வகைப்படும். முழவு, உடுக்கை - தோல்; குழல், வங்கியம்- துளை; யாழ் - நரம்பு ;உலோகத்தால் ஆன தாளவகை (பொ. ஆ. படை177 -179). வேய்ங்குழல், ஆம்பற் குழல், சீறியாழ், பேரியாழ், வில்யாழ், சங்கு, முரசு, தொண்டகப்பறை, தடாரி, தண்ணுமை, குழல், யாழ், சல்லி, கரடிகை, எல்லரி, பதலை முதலியன பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ளன. கரடிகை என்பது கரடிகத்தினாற் போன்ற ஓசையுடைய பறை வகை.

தமிழ் இலக்கிய நூல்கள் இசைத்தமிழிலேயே உள்ளன. இலக்கிய நூல்கள், பிற்காலத்துக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் அனைத்தும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன.

குழந்தைப்பருவத்தில் தாலாட்டு, ஊசற்பா விளையாடும் பருவத்தில், கந்துகவரி (பந்து விளையாடும் பாடல்கள்) அம்மானை, பொற்சுண்ணம் சாழல், தெள்ளேணம், உந்தி பறத்தல், தோள் நோக்கம் முதலிய ஆடல்களுக்குரிய பாடல்கள், மணத்தில் மங்கல வாழ்த்து, உலக்கை கொண்டு குற்றும்போது வள்ளைப்பாட்டு, ஏற்றம் கொண்டு நீர் இறைக்க ஏற்றப்பாட்டு என உழைப்புத் தொழில்கள் அனைத்திற்கும் பாடல்கள் இருந்தன. தமிழர் இறந்த பின்னர்ப் பலவகைச் சந்தங்களில் ஒப்பாரிப் பாக்கள் பாடப்பட்டுள்ளன.

**முடிவுரை**

உலக மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளின்படி 1000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த உலக மக்கள் தொகை இப்பொழுது இருக்கும் மக்கள் தொகையில் சுமாராக 30 இல் ஒரு பங்கே இருந்தது. 2000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சுமாராக 2000இல் ஒரு பங்கு அளவே இருந்திருக்கிறது. மதுரை மாவட்ட நகர்ப்புறத்தில் இன்றைய மக்கள் தொகை சுமார் 14இலட்சத்து 45 ஆயிரம். சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையின் மக்கள் தொகை ஒரு சில ஆயிரங்களாக மட்டுமே இருந்திருக்கும். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒட்டு மொத்த தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையே 50000 க்கும் குறைவாக இருந்திருக்கும். அக் காலக்கட்டங்களில் சமுதாயத்தில் அறிவியல், நுண்கலை வல்லுநர்களின் அளவு இப்பொழுதிருப்பதைக்காட்டிலும் மிக அதிகமாக இருந்ததால்தான், தமிழரின் பண்பாடு உயரிய ஒன்றாக உலகெலாம் போற்றப்பட்டது. கோயில் சிற்பக்கலைகள், கட்டடக்கலைகள், நகர அமைப்பு, ஆகியவற்றில் முற்காலத் தமிழறிஞர்தலை சிறந்து விளங்கியது இன்றும் அழியாது விளங்கும் கலைச்செல்வங்களால் நன்கு புலனாகிறது. சில ஆயிரம் மாந்தர் வாழ்ந்த மதுரை மாநகர அமைப்பு தாமரை மலரைப்போலவும் தாமரையின் மைய (பொகுட்டு)ப் பகுதி மன்னனின் இருப்பிடமாகவும் பிற தெருப் பகுதிகள் இதழ்கள் போலவும் **பரிபாடலில்** காண்பிக்கப்படுகின்றன.

> **மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்**
> **பூவோடு புரையும் சீரும், பூவின்**
> **இதழகத்தனைய தெருவம்; இதழகத்து**
> **அரும் பொகுட்டனைத்தே அண்ணல் கோயில்**

தற்போது சில ஆயிரம் மக்கட் தொகை கொண்ட சிற்றூர்கள் பலஆயிரம் நம் தமிழகத்தில் உள. அவையெல்லாம் பண்டைத்தமிழரின் சாதனைகள் போன்ற சாதனைகளைப் படைத்த வண்ணமாகவா உள்ளன? தொழிற்புரட்சி என்பது இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான் மேற்கத்திய நாடுகளில் தொடங்கி உலகெங்கும் பரவியது. அதன்பலனாக இன்று மனிதகுலம் வசதிகள் பெற்றுள்ளது என்றபோதும் கடுமையாகச் சுற்றுச்சூழல் மாசடைந்துள்ளது என்பதுவும் உண்மை. முற்காலத்தில் காடுகளைத் திருத்தி வேளாண்மை உள்ளிட்ட பல தொழில்களில் ஈடுபட்ட மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தமிழர்கள் ஊக்கமுடைமை காரணமாகச் சாதனைகள் பல படைத்துள்ளதுவும் அவர்தம் அறிவியல் அறிவாற்றலும் நுண்ணறிவும் இலக்கியங்களில் புலனாகிறது. சங்கப்பனுவல்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் பொதிந்துள்ள அறிவியல் சிந்தனைகளை முழுமையாக வெளிக்கொணரச் சீரிய ஆய்வுப்பணிகள் இன்னமும் தேவை. இளம் மாணவர்கள் தமிழிலக்கியங்களின் சுவையையும் பெருமையையும் உணர்ந்து சீரிய இப்பணிகளில் ஈடுபடமுன்வரவேண்டும்.

# 14. இலக்கண - இலக்கியங்களில் பரத்தையர் பிரிவின் வாயில்களும் சிக்கல்களும்

**தா.இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி**

## 1.0 முன்னுரை

பழந்தமிழகத்தின் ஐந்திணை நிலங்களில் மருத நிலமே நாகரிகத்தின் பிறப்பிடமாகக் கருதப்படுகின்றது. நீர் வளமும் நிலவளமும் ஒருங்கே அமையச் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த மருத நில மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒழுக்கக்குறைவும் அதனால் விளைந்த உளவியல் சிக்கல்களுமே மருதத்திணைப் பாடல்களாகும். இப்பாடல்கள் திருமணத்திற்குப் பின் கற்பு வாழ்க்கையில் ஏற்பட்ட தனிமனித - மனித - குடும்ப - சமூகச் சிக்கல்களை உள்ளடக்கியதாகும். தலைவியைத் திருமணம் செய்துகொண்ட தலைவன் தலைவியைப் புறக்கணித்துவிட்டுப் பரத்தையர் உறவை நாடிச் செல்லும் நிலையிலேயே தலைவியின் மனதில் விரிசல் ஏற்படுகின்றது. இக்கருத்தே ஊடலும் ஊடல் நிமித்தமுமாகும். இக்கட்டுரை **ஐங்குறுநூற்று** மருதத்திணைப் பாடல்களில் 'பரத்தையர் பிரிவின் வாயில்கள்' எவ்வாறு தலைவியின் மன உளைச்சலையும் போராட்டங்களையும் வெளிப்படுத்தியுள்ளன என்பதைத் தமிழ் இலக்கணக் கருத்துடன் ஒப்பிட்டு ஆய்ந்துரைக்கின்றது.

## 2.0 மருதத்திணைப்பாடல்கள்

சங்க இலக்கியத்தில் மொத்தம் 263 மருதத்திணைப் பாடல்கள் உள்ளன. அவை முறையே **குறுந்தொகை**- 48, **நற்றிணை**-38, **அகநானூறு**- 40, **ஐங்குறுநூறு**-100, **கலித்தொகை**- 35, **பரிபாடல்**-08 என்று அமைந்துள்ளன. 263 மருதத்திணைப் பாடல்களில் 221 பாடல்கள் பரத்தையர் பிரிவு காரணமாகத் தலைவன் பிரிவையே முதன்மையாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன; எஞ்சிய 42 பாடல்களில் ஏனைய பொருண்மைகள் கலந்துள்ளன. (தமிழண்ணல், **சங்கமரபு**, பக். 250- 251).

சேவியர் தனிநாயகம் அடிகள் மருதத்திணைச் செய்யுட்களைப் பற்றிக் கூறும் பொழுது, தலைவியின் ஐயங்களையும் நம்பிக்கையின்மைகளையும்

---

*முனைவர் **தா.இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி**, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியற் புலம், எஸ் ஆர் எம் பல்கலைக் கழகம்.*

தலைவனின் இரங்குதலையும் தலைவன் தன் பாங்கனின்வழி அல்லது தலைவியின் தோழியின் வழியே தலைவியோடு உறவைச் சரி செய்து கொள்ளுதலையும் மனைவி வருத்தத்தில் இளைத்தலையும் அவளுடைய மன்னிக்கும் உள்ளத்தையும் பொறுமையையும் அவளுடைய குழந்தைகளின் மீது கொண்ட இயல்பான அன்பால் தன் கணவனோடு உறவைச் சீராக்கிக் கொள்ளுதலையும் சித்திரிக்கின்றன என்கிறார். (Nature Poetry in Tamil, p. 112, தமிழண்ணல், **தமிழ் மரபு**, ப.253)

### 2.1 அகச்சிக்கல்கள்

கற்பு வாழ்க்கையில் ஏற்படும் அகச்சிக்கல்கள் மருதப் பாடல்களில் தலைவி கூற்று வழியும் தோழி கூற்று வழியும் தலைவன் கூற்றின் வழியும் சில நேரங்களில் பரத்தையர் கூற்றின் வழியும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சமூகத்தில் பெண்களுக்குரிய கற்பு விதிகளும் ஆண்கள் பல பெண்களுடன் உறவு கொள்ளும் முறையையும் சமூகமே அங்கீகரிப்பதால் பெண்களின் அகவாழ்க்கையில் ஏற்பட்ட மன உளைச்சல்களும் போராட்டங்களும் பெண்கள் தங்கள் உள்ளத்துணர்வை அடக்கி வைக்கும் மன அழுத்தமும் மருதத் திணைப் பாடல்களில் வெளிப்பட்டு நிற்கின்றன.

### 3.0 பரத்தையர் பிரிவு

கற்பு வாழ்க்கையில் தலைவன் தலைவியின் உறவைப் பெரிதாக எண்ணாமல், பரத்தையர் உறவை நாடிச் செல்வதால் ஏற்படும் பிரிவு பரத்தையர் பிரிவாகும். இப்பிரிவின் இழிவும் ஒழுக்கமின்மையும் கருத்திற்கொண்டு தொல்காப்பியர் இதனைப் பிரிவு வகைகளில் சேர்க்கவில்லை. பின்னால் வந்த அகப்பொருள் விளக்கம் முதலியன பரத்தையர் பிரிவைத் தனிப் பிரிவாகக் கொள்கின்றன. இதனைப் பரத்தையர் அகற்சி என்பர். சிறிது காலம் பிரிதலைக் குறிக்கும் பிறவகைப் பிரிவுகள் ஊரினின்றும் நாட்டினின்றும் பிரிவதைக் குறிக்க, பரத்தையர் பிரிவோ தலைவன் அடுத்த தெருவிற்கோ, பரத்தையர் வாழும் சேரிக்கோ செல்லுதலையும் ஆறுகளில் குளித்தலையும் சேரிகளில் களித்தலையும் இது குறிக்கின்றது. தொல்காப்பியர் இதனைக் 'கொடுமை ஒழுக்கம்'' பேணா ஒழுக்கம்' 'அடங்கா ஒழுக்கம்' எனக் குறிக்கிறார்.

### 3.1 தலைவியின் மனநிலை

பரத்தையர் உறவைத் தலைவன் நாடிச் சென்றான் என்ற செய்தி தலைவிக்குத் தலைகுனிவை ஏற்படுத்துகிறது. ஓர் ஆணிற்குத் தன் மனைவி பிறருடன் ஒழுக்கக் கேடாய் நடப்பது அவமானமும் இழிவும் என்றால் பெண்ணின் மனநிலையும் அத்தகையதேயாகும். ஆண்- பெண் இருவரில் ஒருவர் ஒழுக்கக் கேடாய் நடந்தாலும் பிறர் ஒருவருக்குத் தலைகுனிவாகும்.

தலைவியும் இந்நிலையிலேயே தன் தலைவனின் பரத்தையர் உறவை அவமானமாகவும் இழிவாகவும் கருதினாள். பிறர் ஐயோ! பாவம் என்று இவளைப் பார்த்து இரங்கிக் கூறும் சொற்கள் இவள் இதயத்தில் ஈட்டி பாய்ந்தது போல் தாக்க இவள் துன்பமும் அவமானமும் அடைந்து துயரமுற்றாள். தலைவியின் புற அழகும் அகமும் துன்ப உணர்ச்சியால் அழகிழந்து போகின்றன. நாள்தோறும் கணம் தோறும் தலைவனின் கொடுமையை நினைத்து ஏங்கவும் ஏங்கி அழுகின்றதுமான நிலை தலைவிக்கு ஏற்பட்டுவிட்டதைப் பல பாடல்கள் கூறுகின்றன.

அம்ம வாழி தோழி! நம் ஊர்ப்
பொய்கைப் பூத்த புழைக்கால் ஆம்பல்
தாது ஏர் வண்ணம் கொண்டன
ஏதிலாளர்க்குப் பசந்த என் கண்ணே.

அம்ம வாழி தோழி! நம் ஊர்ப்
பொய்கை ஆம்பல் நார் உரி மென் கால்
நிறத்தினும் நிழற்றுதல் மன்னே;
இனிப் பசந்தன்று என் மாமைக் கவினே.

அம்ம வாழி தோழி! ஊரன்
நம் மறந்து அமைகுவன் ஆயின் நாம் மறந்து
உள்ளாது அமைதலும் அமைகுவம் மன்னே
கயல் எனக் கருதிய உண்கண்
பயலைக்கு ஒல்கா வாகுதல் பெறினே.

அம்ம வாழி தோழி! மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பயந்து பனி மல்க
வல்லன் வல்லன் பொய்த்தல்
தேற்றான் உற்ற சூள்வாய்த் தல்லே. (ஐங்குறுநூறு 34-37)

### 3.2 தலைவியின் உடல்நிலை

தலைவன் பரத்தையை நாடிச் சென்றதால் தலைவியின் உடலும் கண்களும் அழகிழந்து விட்டன. தலைவியின் பசலை பூத்த கண்கள் குளத்தில் மலர்ந்துள்ள ஆம்பல் மலரின் பூந்துகள் போன்று பொன்னிறத்தை அடைந்தன. தலைவியின் மேனி ஆம்பல் மலரின் நார் உரிக்கப்பட்ட தண்டினது நிறம் போலத் தன்னியல்பு மாறிப் பசலை பாய்ந்தது; கயல் போன்ற கண்கள் சுருங்கி

அழகிழந்துவிட்டன. கண்களிலிருந்து துன்பக் கண்ணீர் தானாகத் துளிர்க்கவும் தோள்கள் மெலிந்து கை வளையல்கள் கழன்று விடவும் மேனி பசலை பாயவும் ஆகத் தலைவியின் புறத்தோற்றம் தலைவனின் பரத்தையர் பிரிவால் கொடுமைக்குள்ளாகியது.

அம்ம வாழி தோழி! மகிழ்நன்
தன் சொல் உணர்ந்தோர் அறியலன் என்றும்
தண்தளிர் வெளவும் மேனி
ஒள்தொடி முன்கை யாம் அழப் பிரிந்தே *(ஐங்குறுநூறு 38)*

### 3.3 தலைவியின் தன்மை

தலைவன் பரத்தையர் பிரிவால் பிரிந்து சென்ற காலங்களில் தலைவி இப்படியே உண்ணாமலும் உறங்காமலும் தலைவனின் கொடுமையை நினைத்து உருகிக் கொண்டே இருந்தாலும் தன் குடும்பக் கடமைகளைச் செவ்வனே செய்பவளாகவும் பிறர் நலம் பேணுபவளாகவும் திகழ்கிறாள். **ஐங்குறுநூற்றில்** முதல் பத்தான 'வேட்கைப் பத்தில்' அமைந்த பத்துப் பாடல்களும் தலைவியின் பெருந்தன்மையையும் அறத்தன்மையையும் பறைசாற்றுகின்றன.

...நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க...
...விளைக வயலே வருக இரவலர்...
...பால்பல ஊறுக பகடுபல சிறக்க...
...பகைவர் புல் ஆர்க பார்ப்பார் ஓதுக...
...பசியில் ஆகுக பிணிசேண் நீங்குக...
...வேந்து பகை தணிக யாண்டுபல நந்துக...
...அறநனி சிறக்க அல்லது கெடுக...
...நன்று பெரிது சிறக்க தீதில் ஆகுக...
...மாரி வாய்க்க வளநனி சிறக்க...

*(ஐங்குறுநூறு - வேட்கைப்பத்து 1-10)*

என வேண்டுகின்ற தலைவியின் தன்மையில் தன்னலமற்ற தன்மையும் எல்லோரும் இன்புற்றிருக்க் வேணடும் என்ற விருப்பமும் புலப்பட்டு நிற்கின்றன எனலாம்.

### 4.0 பரத்தையர் பிரிவு- வாயில்கள்

பரத்தையர் பிரிவு ஏற்படும் பொழுது தலைவன் இருக்கும் இடத்திற்குச் சென்று தோழி முதலானோர் சில காரணம் கருதித் தலைவனைத் தலைவி

வாழும் இல்லத்திற்கு அழைத்துவரும் செயல் சமூகக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியதாகும். இது செவ்வணி அணிதல், வெள்ளணி அணிதல் என்று இலக்கணத்தில் குறிக்கப்பெற்றுள்ளது.

பரத்தையிற் பிரிந்துழி . . .
திருந்திழை செவ்வணி யணிந்து சேடியைவிட
வருந்தம ருழையர் கண்டழுங்கிக் கூறலும்
பண்பிகழ் பரத்தையர் கண்டு பழித்தலும்
நண்பனை யுலகிய னாடி விடுத்தபின்
மன்னவன் வரவினை வாயிலோர் மொழிதலு
மென்னகைக் கதனை யிகுளை விளம்பலு
மிணர்ப்புரி குழலா ளெதிர்கொண்டு பணிதலும்
புணர்ச்சி யின்மகிழ்வு மென்றுணர்த்து பன்னொன்று
முணர்த்த வுணரு மூடற் குரிய. (மாறன் அகப்பொருள் 230)

மென்னகை வெள்ளணி யறிந்து விடுத்துழி
மன்னவன் வந்து வாயில் வேண்டலு
மைந்தனை யீன்று மடந்தைநெய் யாடலைத்
தந்திரப் பாங்கி தலைவற் குணர்த்தலு
முரவோன் றன்மனத் துவகைகூ றலுமவன்
வரவுணர்ந்த திகுளை வாணுதற் குணர்த்தலுந்
தலைவி யுணர்த்து தலைவெனாடு புலத்தலும்
முணர்த்த வுணரா வூடற் குரிய. (மாறன் அகப்பொருள் 231)

### 4.1 செவ்வணி அணிதல்

தலைவி பூப்பெய்தியபின் பன்னிரண்டு நாள்களும் தலைவன் தலைவியுடனே உறைதல் வேண்டும். அக்காலத்தில் தலைவன் பரத்தையரை நாடிச்சென்று வீட்டிற்குப் பிரிந்து வராதிருந்தால் தோழி செவ்வணி அணிந்து சென்று தலைவனுக்கு உணர்த்துவாள். மகப்பெறுதலாகிய உலகியல் குறித்துத் தலைவனும் தன் இல்லத்திற்குத் திரும்புவான். இதை, **தொல்காப்பியம்,**

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர்
பரத்தையர் பிரிந்த காலை யான. **(தொல்காப்பியம்** - கற்பியல் 46)

என்கிறது. பூப்பெய்திய செய்தியைத் தோழி செவ்வணி அணிந்து தலைவன் தங்கியிருக்கும் பரத்தையர் சேரிக்குச் சென்று உணர்த்துவாள். பரத்தையும் செய்தி உணர்ந்து தலைவனைத் தலைவியிடம் அனுப்பி வைப்பாள். இதுவே கற்பியல் விதிமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.

தோழி, செவ்வணி அணிந்து தலைவியின் பூப்பெய்திய முறையைத் தலைவனிடம் குறிப்பால் உணர்த்தும் முறை (ஒவ்வொரு மாதத்திலும்

செவ்வணி அணிந்து சென்று உணர்த்துதல்) தோழியின் மனநிலையில் சிக்கலை ஏற்படுத்துகிறது என்பது ஒரு பாடலில் காண முடிகிறது.

பஞ்சாய்க் கோதை மகளிர்க்கு
அஞ்சுவல் அம்ம அம்முறை வரினே. (ஐங்குறுநூறு 54)

என்று தோழி தலைவியிடம் உனக்கு இம்மாதத்தின் முறை வரும் பொழுது அம்மகளிரிடம் சென்று உணர்த்த அஞ்சுகிறேன் என்கிறாள். இவ்வச்சம் உளவியல் சார்ந்த அச்சமாகும். ஊரறியத் திருமணம் செய்து கொண்ட தலைவியைவிடப் பரத்தையின் அழகும் இளமையுமே பெரிதெனப் பரத்தையிடமே மயங்கி அங்கேயே தங்கிவிட்ட தலைவனிடம், நீ பன்னிரண்டு நாள்கள் உன் தலைவியிடம் தங்குவதற்கு வா என்று வலிந்து அழைப்பதும் (பரத்தையும் தலைவனும் மனமில்லாமல் பிரிவதும்) தலைவியிடம் உறவு கொள்ளும்படி தோழி தலைவனை அழைக்கும் இச்செயலும் தோழிக்கு மனரீதியான போராட்டத்தையே ஏற்படுத்துகின்றன. எனவே தான் பஞ்சாய்க் கோரை மகளிர்க்கு நான் அஞ்சுகிறேன் என்று தோழி தலைவியிடம் கூறுகின்றாள். இங்கு மற்றொன்றும் கவனத்திற் கொள்ளவேண்டும் தலைவன் உள்ளார்ந்த முழு அன்புடன் தலைவியிடம் வராமல் சமுதாயக் கட்டுப்பாட்டிற்காகத் தலைவியிடம் வந்து தங்கி உறவு கொள்ளும் முறை கட்டாய விதியாக ஆக்கப்பட்டுள்ளது. பரத்தை உறவில் மயங்கிக் கிடந்த தலைவன் தலைவியிடம் உறவு கொள்ள முற்படும் நிலையில் தலைவனுக்கும் அகமனப்போராட்டமே ஏற்படும் என்பதை யூகிக்கலாம்.

### 5.1 ஆண் ஆதிக்கம்

தன்னைப் புறக்கணித்து விட்டுப் பரத்தையை நாடிச் சென்ற தலைவனிடம் தன் கோபத்தை வெளிக்காட்ட முடியாதவளாகத் தலைவி அவனை ஏற்றுக் கொள்வது தலைவியின் இயலாமையையே வெளிப்படுத்தியுள்ளது. தான் திருமணம் செய்து கொண்டவன்; பரத்தையை நாடிச் சென்ற பொழுதிலும் தனக்குக் குழந்தைப்பேறு வேண்டும் என்பதற்காக அவனுடன் பேசுவதும் உறவு கொள்வதும் உளவியல் சிக்கலின் உச்சகட்டமாகும். தலைவி விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தலைவன் தலைவி மேல் காதல், காமம் எதுவும் இல்லாமல் குழந்தைப் பேற்றுக்காக ஏற்றுக்கொள்ளும் நிலை கற்பியல் அறத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையாகும். இவ்விடத்தில் பெண்ணிற்கு எதிராக ஆண் சமுதாயம் ஆதிக்க சக்தியைப் பலப்படுத்தியுள்ளதை எண்ணிப் பார்க்க முடிகிறது.

செவ்வணி அணிந்து வாயில் உணர்த்தும் முறையில் தோழியும் தலைவியும் தலைவனும் ஏன் பரத்தையும்கூட உளவியல் சிக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது புலனாகிறது.

### 5.2 வெள்ளணி அணிதல்

தோழி வெள்ளணி அணிந்து தலைவிக்குக் குழந்தை பிறந்ததைத் தலைவனுக்குப் புலப்படுத்துதல் வெள்ளணி அணிதலாகும். தனக்குக் குழந்தை

பிறந்ததை அறிந்த தலைவன் எண்ணெய் முழுக்காட்டிய தலைவியை அன்புடன் அணுகிச் சான்றோர் சிறப்புக்களைச் சுட்டிக்காட்டிப் பெரும் சிறப்புடன் தலைவியைச் சேர்தல் என்று இந்நிகழ்ச்சி தொல்காப்பியத்தில் கூறப்பெற்றுள்ளது.

புதல்வன் பயந்த புனிறு நீர் பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்போடு சேர்தற் கண்ணும்
(தொல்காப்பியம், கற்பியல் 5)

குழந்தை பிறந்ததை மகிழ்வுடன் கொண்டாட வேண்டிய தலைவன், பிறர் துணையுடன் (தோழி) கூறக்கேட்டுக் குழந்தையைக் காணுதல் அவலமான நிலையாகும். குழந்தை பிறந்த நிலையில் தன்னைப் புறக்கணித்துச் சென்ற தலைவனிடம் தலைவி வெறுப்புமொழி பேசுகிறாள்; குழந்தையைப் பற்றி எதுவும் பேசாமல் வாயில் வேண்டி இரந்த தலைவனிடம் 'இந்நிலையை மங்கையர் காணின் நன்று' என்று எள்ளி நகையாடித் தன் உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துகிறாள். தான் அழகற்றவள், முதுமையானவள், இளமைத் தன்மை இல்லாதவள் என்ற தாழ்வு உணர்ச்சி, அவளை ஆட்கொள்ள நான் இனி உறவு கொள்ளத் தகுதியற்றவள், நான் பேய் போல் அசிங்கமாக அழகற்று இருக்கிறேன் என்று கூறுகின்றாள்.

கரும்புநடு பாத்தியில் கலித்த ஆம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை ஈன்றஎம் மேனி
முயங்கன்மோ தெய்ய நின் மார்புசிதைப் பதுவே (ஐங்குறுநூறு 65)

... மாநீர்ப் பொய்கை யாணர் ஊர
தூயர் நறியர்நின் பெண்டிர்
பேஎய் அனையம் சேய்பயந் தனமே. (ஐங்குறுநூறு 70)

குழந்தை பெற்றுள்ள நிலையில், நான் உன் கண்ணிற்குப் பேய் போன்று இருக்கிறேன்; உன் பரத்தை மகளிரோ தூய்மையும் நறுமணமும் கமழுவோராக இருக்கின்றனர் என்று தலைவி தலைவனிடம் கூறும் நிலையில் தலைவியின் மனம் பிறழ்ந்துள்ளதை உணர முடிகிறது. குழந்தை பிறந்துள்ள நிலையில் தலைவனைக் கண்ட தலைவி மன அழுத்தத்திற்கு உள்ளாகிறாள்.

**6.0 தலைவனின் நிலை**

பரத்தையரோடு கூடிக் களித்த தலைவனைத் தலைவி வெறுத்தாற்போல் ஊடினாலும் குடும்பநலம் கருதித் தன் கற்பின் ஆற்றலால் அவனை ஏற்றுக்கொண்டு இல்லறம் பேணுதலால் உயர்ந்த பண்புள்ளவளாய்த்

திகழ்கிறாள்; இத்தன்மைகள் தலைவியை நல்ல குலமகளாக, கற்புக்கரசியாக, நல்ல தாயாக உருவாக்கியுள்ளன எனலாம்.

தலைவன் பரத்தையரிடம் உறவு கொண்டு களங்கப்பட்டாலும் இறுதியில் தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தேயாக வேண்டும் என்பது விதியாகும். வேறு வழியில்லை தலைவனுக்கு; சேற்றுடன் நண்டு அளையில் நுழைவது போலப் பரத்தை உறவு என்ற கறையுடன் தன் வீட்டிற்குள் நுழைகிறான்.

அள்ளல் ஆடிய புள்ளிக் களவன்
முள்ளி வேரலைச் செல்லும் ஊரன்
நல்ல சொல்லி மணந்து இனி
நீயேன் என்றது எவன்கொல்? அன்னாய். (ஐங்குறுநூறு 22)

என்ற இப்பாடல் தலைவன் நிலையை உணர்த்துகிறது.

### 6.1 சமுதாய மரபு

தலைவனை அவன் குழந்தைகளும் தலைவியும் குறைபட்டுக் கொள்வதனால் மன அழுத்தத்துடன் வாழ வேண்டியவன் தலைவனேயாவான். ஆனால் சமுதாயத்தின் விதி, அவன் ஆண் மகனாதலால் அவன் செய்த செயலை (பரத்தையை நாடிச் சென்றதை) உள்வாங்கிக் கொள்கிறது. தலைவன் எந்தவிதச் சலனமுமின்றி, குடும்பத்தில் அதிகாரம் செய்து கொண்டு தன் மனம் போன வழியில் வாழ்கின்றான்.

தலைவன், திருமணத்திற்குப் பின்பு தலைவி மேல் வேட்கை குன்றிப் புதுஅழகைத் தேடுவதாலும் கருவுற்ற மனைவி அழகு குன்றினாள் எனத் தன் மகிழ்ச்சிக்கென்று பிற பெண்களை நாடுவதாலும் தலைவன் பரத்தையர் தொடர்புடையவனாகிறான். சமுதாயத்தின் ஒப்புதலாலும் மனைவியின் பொறுமையினாலும் மன்னிக்கும் பெருந்தன்மை இவற்றாலும் கணவன் பரத்தமை நாட வழி ஏற்படுகின்றது. மரபுவழி ஒப்புதலும் உளவியல் அறிவியலும் பரத்தமை வளர்ச்சியில் தலைவனுக்கு உதவுவனவாகவே அமைந்துள்ளன என்கிறார் வி.டி. மாணிக்கம். (V.T. Manikam, Marutham, pp. 86-90)

### 6.2 தலைவியின் பண்பு

குடும்பத்தைக் கட்டிக் காப்பவளாகத் தலைவி பல தியாகங்களைச் செய்கிறாள். ஆனால் தலைவனோ தன் மனம் போனபடி ஒழுக்கக்கேடாய் நடந்து தன் குடும்பத்தைச் சீர் குலைக்கின்றான். பரத்தையர் பிரிந்த

தலைவனைத் தலைவி, செவ்வணி அணிந்தும் வெள்ளணி அணிந்தும் வாயில் அனுப்புவதும் ஏற்றுக் கொள்வதும் தலைவியின் பெருந்தன்மையேயாகும். குடும்பத்தைக் குடும்பமாக ஆக்கத் தலைவி தன் நலத்தை, இன்பத்தைத் துறந்து குடும்ப நலமும் சமுதாய அறமும் தலையானவை எனக் கருதி வெற்று வாழ்க்கை வாழ்கிறவளாகத் திகழ்கிறாள்.

## 7.0 முடிவுரை

பெண்களுக்கென்று விதிக்கப்பட்ட கற்புக் கோட்பாடுகளும் விதிகளும் பெண் மீதான ஆண் ஆதிக்கத்தையே வலியுறுத்தியுள்ளன எனலாம்.

குடும்பத்தில் ஆண் - பெண் சமத்துவமற்ற போக்கே காணப்படுகிறது.

இல்லமும் இல்லறக் கடமைகளுமே பெண்ணுக்குரியதாகின்றன.

சமூகக் கட்டுப்பாட்டால் சில நாள்கள் மட்டுமே தன் வீட்டிற்கு வந்து தங்கிச் செல்லும் தலைவன், திரும்பத் திரும்பப் பரத்தையர் உறவை நாடிச் செல்லும் நிலை தலைவிக்கு ஏமாற்றத்தையும் மன அழுத்தத்தையும் உண்டாக்கியுள்ளது எனலாம்.

செவ்வணி அணிதல், வெள்ளணி அணிதல் என்ற வாயில்கள் தலைவனையும் தலைவியையும் குடும்பமாக இணைக்கச் சமுதாயத்தினால் விதிக்கப்பட்ட விதிகளாகும். இங்கு, வாயில் உணர்த்துபவர், வாயில் நேர்பவர், வாயில் மறுப்பவர் ஆகிய இவர்கள் யாவரும் (தோழி, தலைவன், தலைவி ஏன் பரத்தையும் கூட) சில உளவியல் போராட்டங்களுக்கும் மனச் சிக்கலுக்கும் உள்ளாகின்றனர்.

ஊடலும் ஊடல் நிமித்தமும் என்ற உரிப்பொருளை உள்ளடக்கிய மருதத்திணைப் பாடல்கள் தலைவியின் உள்ளக்கீறலின் வெளிப்பாடாகி இருக்கின்றன.

## துணை நூல்கள்


1. **ஐங்குறுநூறு**, அ. தட்சிணாமூர்த்தி உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. **சங்க மரபு**, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
3. **தமிழ் இலக்கண நூல்கள்** - மூலம் முழுவதும், பதிப்பாசிரியர்: முனைவர் ச.வே. சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608001.

## 15. INDEX OF THE JOURNAL OF TAMIL STUDIES
## VOL. 43- 85
## TITLE INDEX


1. A Brief Historical study of Sri Rāmānujar
   - Govindasamy, M. S.
   pp. 99-110 ; vol.67; June 2005.

2. A Cognitive Perspective on Prepositions and Postpositions in the reading of a Literary text
   - Aruna Devi, P.
   pp. 113- 120 ; vol.66; December 2004.

3. A Linguistic analysis of the prose writings of Jawaharlal Nehru and Thiru Vi.Ka.: A comparative study
   - Benita, A.
   pp.73- 79 ; vol.71; June 2007.

4. A Megalithic pottery inscription and a Harappa tablet : a case of extraordinary resemblance
   - Iravatham Mahadevan
   pp. 80- 87 ; vol.71; June 2007.

5. A New approach to Indian Art the Pan – Indian scrubland tinai paradigm
   - Nirmal Selvamony
   pp.47- 54 ; vol.85 ; June 2014.

6. A Note on ceyticin Verbals
   - Pandurangan, A.
   pp. 79-84 ; vol.63; June 2003.

7. A Note on Dictionary and Grammar
   - Agesthialingom, S.
   pp. 107-112 ; vol.60; December 2001.

8. A Pilot Dialect Survey of Tondaimandalam
   - Gnanasundaram, V.
   pp.173 - 192 ; vol.79&80;June & December 2011.

9. A Poet's soul in a Statesman's Garb
- Manavalan, A . A.
pp.229 - 238; vol. 57 & 58; June & December 2000.

10. A Study of the Madrasis of Guyana
- Visswanathan, E. Sa.
pp. 125 -139; vol. 47 & 48; June & December 1995.

11. A Study on the Theory of Dependent Origination in the Pali, Sanskrit and Tamil Buddhist Texts
- Kandaswamy, S. N.
pp. 87- 110 ; vol.72; December 2007.

12. Advaitic influence in Modern Tamil Literature
- Kandaswamy, S. N.
pp. 212- 224; vol. 53 & 54; June & December 1998.

13. Affirmative – Negative Expressions in Modern Tamil
– A Study in Language structure and Language use
- Karunakaran, K.
pp. 71- 80 ; vol.78; December 2010.

14. Agricultural terms in the Indus script
- Iravatham Mahadevan
pp. 64-76 ; vol.70; December 2006.

15. An appraisal of Parimēlalakar's commentary on the Paripāṭal
- Kandasamy, S.N.
pp. 80- 113 ; vol.69; June 2006.

16. An assessment of S. Vaiyapuri Pillai's Achievements Editing and Textual Criticism
- Sundaramoorthy, E.
pp. 228- 234; vol. 51 & 52 ; June & December 1997.

17. An evaluation of Māyāvāda in the texts of Arulnandisivam and Umapatisivam
- Kandaswamy, S. N.
pp. 77- 107 ; vol.70; December 2006.

18. Ancient Chinese Literature and Sankam Poetry: A Comparative Study
- Benita, A.
pp.105- 108 ; vol.84 ; December 2013.

19. Ancient Dravidian – An Introductory Grammar of Harappan with vocabularies Part III : Harappan Grammar / Dictionary
- Clyde Ahmad Winters.
pp. 59 - 130; vol. 43 & 44; June & December 1993.

20. Ancient Tamil Object - poetics and English Modern poetry with reference to Philip Larkin
- Balachandran, R.
pp.55-62 ; vol. 59; June 2001.

21. Archaeology and Ayurveda
- Niranjana Devi, R.
pp. 83- 98 ; vol.67; June 2005.

22. Aspects of Teaching 'IZATIONS' in Tamil
- Rajendran, S.
pp. 210- 227; vol. 51 & 52 ; June & December 1997.

23. Attributes as predicate in Tamil
- Shanmugam, S. V.
pp.113 - 116; vol. 57 & 58; June & December 2000.

24. Basic colour terms and Cultural Distinctiveness: A case study of Tamil
- Manoharan, S.
pp. 87- 112 ; vol.83 ; June 2013.

25. Bhakti Literature and Human values
- Pandurangan, A.
pp. 171 - 180; vol. 43 & 44 ; June & December 1993.

26. Bharathidasan's Poems : A linguistic Approach
- Solayan, M.
pp. 97- 104 ; vol.65; June 2004.

27. Carnatic Music into the 21st Century
- Angayarkanni, E.
pp. 176- 183; vol. 51 & 52 ; June & December 1997.

28. Chilappatikaram
- Coomaraswamy, P.
pp.167 - 178; vol. 57 & 58; June & December 2000.

29. Christian Missionaries in Pre-Colonial Tamil Country
- Alalasundaram, R.
pp. 95-106 ; vol.60; December 2001.

30. Cilappatikaram : Some observations on its story and composition
- Dubianski, A. M.
pp. 55 –76; vol. 46; December 1994.

31. Coins of Sangam age from Poonakari in Northern Sri Lanka
-Pushparatnam, P.
pp.163 - 166; vol. 57 & 58; June & December 2000.

32. Common cultural roots of the 7 SAARC countries - Lying inter - twined in the folklore and folksongs of the region
- Neela Padmanabhan
pp. 95-106 ; vol.63; June 2003.

33. Connection between the Tamili Script of Tamil Language and the writing of the Indus Age
- Poornachandra Jeeva
pp. 177-190 ; vol.77; June2010.

34. Counter - Influence - A Strange Literary Phenomenon
- Manavalan, A. A.
pp. 177 - 184; vol. 47 & 48 ; June & December 1995.

35. Date of Early Tamil Epigraphs
- Natana. Kasinathan
pp. 77- 88 ; vol.65; June 2004.

36. Dating of Cankam Literature – A Reappraisal
- Pandurangan, A.
pp. 57-68 ; vol.76; December 2009.

37. Dative Representation in Tamil
- Kothandaraman, R.
pp.83- 92 ; vol.82 ; December 2012.

38. Devotionalism in the Jain and Buddhist Tamil Poems
- Kandaswamy, S. N.
pp. 140 - 176; vol. 47 & 48 ; June & December 1995.

39. Diglossia and Problems of Teaching Tamil
- Rangan, K.
pp. 113-120 ; vol.60; December 2001.

40. Education and Arts of the Early Tamils as depicted in Ancient Literature
- Grace Selvaraj.
pp.135- 162; vol. 57 & 58; June & December 2000.

41. Elements of Axiology in Tolkappiyam
- Selvamony, Nirmal K.A.
pp. 171- 187; vol. 49 & 50 ; June & December 1996.

42. Emerson's The Over -Soul and Thiru. V. Kalyanasundaranar's uḷḷoḷi A comparative study
- Rajeswari, C.
pp. 181 - 191; vol. 43 & 44 ; June & December 1993.

43. Engineering & Technical knowledge of Ancient Tamils in Irrigation works
- Niranjana Devi, R.
pp. 91-103 ; vol.64; December 2003.

44. External History of the Tamils
- Pandurangan, A.
pp. 97-122 ; vol.74; December 2008.

45. Feminity – Freudian Reflections in T. Janakiraman's Novels
- Geetha Vasan
pp. 105- 123 ; vol.68; December 2005.

46. Guidance Poems (ā<u>r</u>ruppaṭai) and the dānastutis (RV) : A Comparative Study
- Meenakshi, K.
pp. 108- 139; vol. 49 & 50 ; June & December 1996.

47. Historical Lessons From the Man of Twentieth Century: The Linguist - Professor T. P. Meenaksisundaran
- Mohan, P. E.
pp. 53-66 ; vol.63; June 2003.

48. Homage to Thaninyagam Adigalar
- Marudhanayagam, S.
pp.6- 20 ; vol.85 ; June 2014.

49. How did the 'great god' get a 'blue neck' a bilingual clue to the Indus script
- Iravatham Mahadevan
pp. 81- 96 ; vol.74; December 2008.

50. Human Predicament in the Epics of Virgil and Kamban
- Manavalan, A. A.
pp. 194- 201; vol. 53 & 54; June & December 1998.

*1.* அகநானூற்றுப் பாடல்களில் உளவியல் காரணிகள்
- ஜான் மைக்கேல்ராஜ், சா. & பாலகிருஷ்ணன், என்.
pp. 1-16 ; vol.66; December 2004.

*2.* அகநானூற்றில் மூவேந்தர்
- கந்தசாமி, சோ. ந.
pp. 1- 13 ; vol.77; June 2010.

*3.* அரங்கேற்றுகாதையும் நாட்டிய சாத்திரமும்
- கலைக்கோவன், இரா.
pp.63- 78 ; vol.85 ; June 2014.

4. அற இலக்கியக் கொள்கைகளும் யாப்பமைதியும்
- சிவகாமி, ச.
pp. 1- 14 ; vol.68; December 2005.

5. அறிவியல் தமிழ் - கலைச்சொல்லாக்க முயற்சிகளில் விகுதிச்சேர்க்கை பற்றிய நுண்ணாய்வும், விரிவாக்கமும்
- ஜெயராஜ், மு.
pp.79 - 90; vol. 57 & 58; June & December 2000.

6. அறிவியல் தமிழாக்கம் - சிக்கல்களும் தீர்வுகளும்
- கோதண்டராமன், இரா.
pp. 29- 42 ; vol.66; December 2004.

7. ஆபிரகாம் பண்டிதரின் 24 சுருதிகள்
- மார்கரெட் பாஸ்டின்
pp. 84 - 93; vol. 45; June 1994.

8. ஆனந்தரங்கரின் பார்வையில் சென்னையும் முதலாம் கர்னாடகப் போரும்
- ஆலாலசுந்தரம், இர.
pp.91 - 112; vol. 57 & 58; June & December 2000.

9. இடைக்காலத் தமிழில் தொழில் பெயர்கள்
- சுசீலா, எம்.
pp.107 - 112; vol. 55 & 56; June & December 1999.

10. ‘இமையம்’ சித்திரிக்கும் கதைமாந்தரின் மொழியும் அதிகாரமும்
- பாலசுப்பிரமணியன், ஜி.
pp.15 - 24; vol. 68; December 2005.

11. இரவும் இராவும்
- கோதண்டராமன், இரா.
pp. 49- 60 ; vol.65; June 2004.

12. இராஜம் கிருஷ்ணனின் ‘கூட்டுக் குஞ்சுகள்’ நாவலின் கட்டமைப்பு
- ஆலிஸ், அ.
pp.19-44 ; vol.60; December 2001.

13. இருபதாம் நூற்றாண்டின் இலங்கைத் தமிழ் நாவல்
- நதிரா, ம.
pp.33-34 ; vol.60; December 2001.

14. இலக்கணக் கொள்கைகளும் தெ.பொ.மீ.யின் பார்வையும்
- சண்முகம், செ. வை.
pp. 81-97 ; vol. 51 & 52 ; June & December 1997.

15. இலக்கணவியலும் உரையாசிரியர்களும்
- கோதண்டராமன், இரா.
pp.1- 8 ; vol.81;June 2012.

16. இலக்கிய அறிவியல்
- பொற்கோ.
pp. 1 - 40; vol. 45; June 1994.

17. ஈழத்துத் தமிழிலக்கியத்தின் தோற்றமும் தொடர்ச்சியும்
- சுப்பிரமணியம், நா.
pp. 8 -26; vol. 46; December 1994.

18. உகரச் சுட்டு
- முகிலை இராசபாண்டியன்.
pp. 47- 60 ; vol.64; December 2003.

19. உடம்படுமெய் - புதிய பார்வை
- பாண்டுரங்கன், அ.
pp. 35- 48 ; vol.65; June 2004.

20. உடலோவியம்
- பகவதி, கு.
pp. 43-54 ; vol.69; June 2006.

21. உடனுறை உள்ளுறை
- சண்முகம், செ. வை.
pp.9- 27 ; vol.81;June 2012.

22. உரையாடும் முறையைக் கற்பித்தல்
- சண்முகம், செ.
pp.65 - 78; vol. 57 & 58; June & December 2000.

23. உலக இயற்பியல் ஆண்டு - 2005
- செந்தமிழ்க்கோதை, உலோ.
pp. 25- 34 ; vol.68; December 2005.

24. உலகத் தமிழ்க் கழகமும் பெருஞ்சித்திரனாரும்
- ஜோதிராணி, க. அ.
pp. 133- 144 ; vol.79&80;June & December 2011.

25. உ.வே. சாமிநாதையரின் உரைநடை நூல்கள்
- சொல்விளங்கும் பெருமாள், பூ.
pp. 129- 165; vol. 51 & 52 ; June & December 1997.

26. உ.வே. சாமிநாதையரின் என் சரித்திரம்
- சொல்விளங்கும் பெருமாள், பூ.
pp.25 - 52; vol. 55 & 56; June & December 1999.

27. உ.வே. சாமிநாதையரின் தமிழ் நடை
- சொல்விளங்கும் பெருமாள், பூ.
pp. 54- 65; vol. 49 & 50 ; June & December 1996.

28. உ.வே. சாமிநாதையரின் மணிமேகலை உரை
சொல்விளங்கும் பெருமாள், பூ.
pp. 155- 193; vol. 53 & 54; June & December 1998.

29. 1. உறுதிக் கணிப்பு "கலிங்கத்துப் பரணி" காட்டாத "கல்வெட்டு"ச் செய்தி
- கண்ணன், சீனி.
pp.61- 63 ; vol.81;June 2012.

30. உறுதிக் கணிப்பு "கலிங்கத்துப் பரணி" காட்டாத "கல்வெட்டு"ச் செய்தி
- கண்ணன், சீனி.
pp.45- 48 ; vol.82; December 2012.

(தொடரும்)

தொகுப்பு: **திருமதி பி. கவிதா**, நூலகர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600113.

## 16. List of Translations of Tamil Works

### Thirukkural

**Burmese**

1. Myo Thant, U, **Thirukkural**, Rangoon

**Chinese**

1. Chi Eng His, **Thirukkural**, Hong Kong, 1967

**Czech**

1. Zvelebil, Kamil V. **Thirukkural** (selections), Prague, 1952-1954

**Dutch**

1. Kat, D. **Thirukkural** (selections), Netherlands, 1964

**Fiji**

1. Berwick, S.L., Na. **Thirukkurala,** Fiji, 1964

**Finnish**

1. Aalto, Pentit, **Kural** - The Ancient Tamil Classic, Finland, 1972

**French**

1. Ariel, M. **Kural de Thiruvalluvar** (traduits du tamoul), Paris, 1848
2. Barrigue de, Fontaineu, G, le livre de l'amour **de Thiruvalluva,** Paris, 1889
3. Danielou, Alain, **Thiruvallouvar kural** Pondicherry, 1942
4. Jacolliot, Louis, **Kural de** Thiruvalluvar selections, Paris, 1767
5. Lamairesse, M. **Thirukkural** in French, Pondicherry, 1867

**German**

1. Albrecht, Fenz and K. Lalithambal **Thirukkural** von thiruvalluvar aus dem Tamil, Madurai, 1977
2. Cammera, A.F, **Thirukkural** with german translation, Leipzig, 1803
3. Graul, Karl, der **Kural** des Thiruvalluvar, London, 1854
4. Graul, Karl, der tamulische gnomes dichtar **Thiruvalluvar**, Leipzig, 1865
5. Rickert, Friederich, **Thirukkural**, selections, Berlin, 1847
6. William and Norgate, Der kural des Thiruvalluvar, 2nd ed. London, 1866

**Latin**

1. Graul, Charles, **Kural of Thiruvalluvar**, Tranquebar, 1866
2. Veeramamunivar, **Thirukkural** (Books I and II), London, 1930

**Malay**

1. Ismail, Hussein: **Thirukkural sastera kalasik tamil yang**, Kuala Lumpur, 1967
2. Ramily Bin Thakir **Thirukkural** (in verses), Kuala Lumpur, 1964

**Polish**

1. Umadevi, Wandy Dynowskiev, **Thiruvalluvar Kural**, Madras, 1958

**Russian**

1. Glazov, J.J. and Krishnamurthi, A. **Thirukkural**, a book on virtue, politics and love, Moscow, 1963
2. Glazov, **J.J. Thirukkural** in couplets with illustrations, Moscow, 1974

**Singalese**

1. De Silva, Charles, Sirigiya (**Thirukkural** in Sinhalese), Colombo, 1964
2. Sissigamy Govokgada, M. **Thirukkural**, Colombo, 1961

**Swedish**

1. Frykholm Ingya, **Thirukkural**, Uddavalla, 1971

# 17. நூல் மதிப்புரை

நூல் : *கம்பன் களஞ்சியம்*

முதன்மை நோக்காளர் : ச. சிவகாமி

திட்ட உதவியாளர் : செல்வி பி. ஜானகி

பதிப்பு : *2009*

விலை : உரு. 280/-

பக்கங்கள் : xxxv + 412

வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

முனைவர் ச.சிவகாமி அவர்களின் தலைமையில் திட்டப்பணியாகப் பல்கலைக் கழக நிதி நல்கைக் குழுவின் நிதிவுதவியுடன் தொகுக்கப் பெற்றுள்ள ***கம்பன் களஞ்சியம்*** என்னும் நூல் 2009 ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக வெளிவந்துள்ளது.

வடமொழியில் உருவான வால்மீகி இராமாயணத்தின் தழுவலாகக் கம்பர் தமிழில் இராமாயணம் என எழுதியுள்ளார். கம்பராமாயணத்தைக் காண்டங்களாகவும் படலங்களாகவும் பிரித்துத் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் மாற்றிப் படைத்துள்ளார்.

இக்காவியத்தில் 100 வழக்குக்கதைகளும் 35 நாட்டுப்புற நாடகங்களும் 80 பழமொழிகளும் 20 விடுகதைகளும் மற்றும் பல கதைப்பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

***கம்பன் களஞ்சியம்*** என்னும் இந்நூல் நான்கு பிரிவுகளாகப் பகுக்கப்பெற்றுள்ளது. அவை: 1. கதைமாந்தர், 2. சமூகவியல், 3. பண்பாட்டியல், 4. இயற்கை என்பனவாகும்.

முதற்பகுதியான கதைமாந்தர் என்னும் தலைப்பு மூன்று உட்தலைப்புகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. 1. கதையுள் நேரடியாகத் தனித்து இடம்பெறுவோர், 2. தொகையாக இடம்பெறுவோர், 3. கதை(மாந்தர்) வழி அறியப்படுவோர்.

நேரடியாக இடம்பெறும் தனியர் என்ற தலைப்பின்கீழ்க் கம்பராமாயணத்தில் இடம்பெறும் கதைமாந்தர்களின் பெயர்கள் அகரவரிசையில் அமைக்கப்பெற்றுள்ளன. மேலும் ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கான விளக்கத்திலும் கதாபாத்திரம் இடம்பெறும் பாடல்களும் பாடல் எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. தனியர் எண்ணிக்கையில் 200 கதைமாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர்.

நேரடியாக இடம்பெறும் தொகையினர் என்னும் தலைப்பின்கீழ் அந்தணர், அரக்கர், அமைச்சர் போன்ற 37 வகையினர் குறிப்பிடப்பட்டு

அவற்றிற்கான விளக்கம் குழுக்களின் பெயர்களோடு இடம்பெறுகின்றது. கம்பராமாயணத்தில் இத்தகைய இனக்குழுக்களின் பெயர்கள் இடம்பெறும் பாடல்களும் பாடல் எண்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கதை(மாந்தர்) வழி அறியப்படுவோர் துணை கதாபாத்திரங்கள் (அ) கதைமாந்தர்களின் உறவினர் பெயர்கள் கதைகளின் வழியாகக் காணப்படும் மாந்தர்களின் எண்ணிக்கை 67 ஆகும். இந்நூலில் பெயரின்றிச் சுட்டப்படுவோர் ஏழுபேர் ஆவர்.

சமூகவியல் என்பது சமூகத்தில் இடம்பெறும் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாகும். மொழி (தமிழ்), மக்கட்பாகுபாடு, உறவுகள், ஊர்திகள், அளவைப் பெயர்கள் என்பன அவை.

பண்பாடு என்பது சமூகத்தில் இடம்பெறுகின்ற மக்களின் உணவு, உடை, ஒப்பனை, கலைகள், நம்பிக்கை, பழக்கவழக்கம், பழமொழி, மரபுத்தொடர், பொழுதுபோக்கு, வாழ்வியல் என்பன.

இயற்கை என்னும் விண்வெளி, பயிரியல், உயிரியல், உலோகங்கள், நவமணிகள், நிறங்கள், இடங்கள், மலைகள், நீர்நிலைகள் எனும் கூறுகள் இடம்பெற்றுள்ளன.

எஞ்சியன என்னும் பகுதியில் மேற்கண்ட நான்கு தலைப்பின்கீழ் இடம்பெறாத ஆனால் கம்பனின் கவிச்சுவையை வெளிப்படுத்தும் சில சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பகுதி கம்பனின் கவித்திறத்திற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

துதிகள் என்னும் தலைப்பில் கம்பராமாயணக் கதைத்தலைவனான இராமனை, கதை மாந்தர்கள் பலரும் திருமாலின் திரு அவதாரமாகப் போற்றிப்பாடிய "துதிப்பாடல்கள்" வரிசைப்படுத்தப்பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக - இந்திரன் இராமனைப் போற்றிப் பாடிய துதிப்பாடல்கள் "இந்திரன் துதி" என்ற தலைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன. இதேபோன்று கவந்தன்துதி, கருடன் துதி எனப் பல துதிப்பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

முடிவாகக் கம்பன் களஞ்சியம் கருத்துக்கு முதன்மை அளித்திருப்பதால் அகரவரிசை முழுமையாகத் தரப்படவில்லை. தேவையான இடங்களில் முழுப்பாடல்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. தேவைக்கு விளக்கங்கள் அடைப்புக்குறியுள் தரப்பெற்றுள்ளன. இந்நூலில் "கம்பன்" என்னும் கட்டுரை, கம்பராமாயணப் பதிப்புகளும் உரையாசிரியர்கள் பற்றியனவும், மொழிபெயர்ப்புகள், துணைநூற்பட்டியல் என்பனவும் இணைக்கப் பெற்றுள்ளன. கம்பராமாயண ஆய்வாளர்களுக்கு இந்நூல் பயன்படத்தக்கதாகும்.

---

*நூல் மதிப்புரை: **ஆ. செண்பகவள்ளி**, முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.*

## 18. Guidelines for writing a research article

*Thomas V. Perneger, Patricia M. Hudelson*

**International Journal for Quality**

**Writing a research article: advice to beginners**

Writing research papers does not come naturally to most of us. The typical research paper is a highly codified rhetorical form. Knowledge of the rules some - explicit, others implied goes a long way toward writing a paper that will get accepted in a peer-reviewed journal.

**How to write the methods section of a research paper**

**Author information**

The methods section of a research paper provides the information by which a study's validity is judged. Therefore, it requires a clear and precise description of how an experiment was done, and the rationale for why specific experimental procedures were chosen. The methods section should describe what was done to answer the research question, describe how it was done, justify the experimental design, and explain how the results were analyzed. Scientific writing is direct and orderly. Therefore, the methods section structure should: describe the materials used in the study, explain how the materials were prepared for the study, describe the research protocol. Once all elements of the methods section are written, subsequent drafts should focus on how to present those elements as clearly and logically as possibly. The description of preparations, measurements, and the protocol should be organized chronologically. For clarity, when a large amount of detail must be presented, information should be presented in sub-sections according to topic. Material in each section should be organized by topic from most to least important.

A good research paper addresses a specific research question. The research question or study objective or main research hypothesis is the central organizing principle of the paper. Whatever relates to the research question belongs in the paper; the rest doesn't. This is perhaps obvious when the paper reports on a well planned research project. However, in applied domains such as quality improvement, some papers are written based on projects that were undertaken for operational reasons, and not with the primary aim of producing new knowledge. In such cases, authors should define the main research question *a posteriori* and design the paper around it.

Generally, only one main research question should be addressed in a paper.

**Structure of the paper**

Once the research question is clearly defined, writing the paper becomes considerably easier. The paper will ask the question, then answer it. The key to successful scientific writing is getting the structure of the paper right. The basic structure of a typical research paper is the sequence of Introduction, Methods, Results, and Discussion. Each section addresses a different objective. The authors state: (i) the problem they intent to address in others terms, the research question in the Introduction; (ii) what they did to answer the question in the Methods section; (iii) what they observed in the Results section; and (iv) what they think the results mean in the Discussion.

In turn, each basic section addresses several topics, and may be divided into subsections (Table 1). In the introduction, the authors should explain the rationale and background to the study. What is the research question, and why is it important to ask it? While it is neither necessary nor desirable to provide a full-blown review of the literature as a prelude to the study, it is helpful to situate the study within some larger field of enquiry. The research question should always be spelled out, and not merely left for the reader to guess.

**Typical structure of a research paper**

**Introduction**

- State why the problem you address is important
- State what is lacking in the current knowledge
- State the objectives of your study or the research question

**Methods**

- Describe the context and setting of the study
- Specify the study design
- Identify the main study variables

**Discussion**

- State the main findings of the study
- Discuss the main results with reference to previous research
- Analyse the strengths and limitations of the study

*Source: OXRFORD UNIVERSITY Journals*

# REGULATIONS FOR SUBMISSION OF RESEARCH PAPERS

Scholars from all relevant academic fields of Tamil language, literature, fine arts, culture, architecture and society are insisted to submit high quality of Research papers that meet the following requirements :

- Original research findings, reports, review articles and like will be considered for publication.
- As it is an International journal, the authors are expected to keep the research papers to an International standard.
- All submitted manuscripts are subjected to a peer review process.
- Papers should be typed utilizing a standard, Unicode font only.
- In transcribing Tamil words or texts, contributors are requested to make use of the transliteration system adopted by the Madras University's *Tamil Lexicon* (Vol. I-VII 1924-1939).
- The glossary of words given in Tamil (either in conventional orthography or in transliteration system) may be given immediately following the quotation: e.g. kuṭampai (குடம்பை) āṭūu aṟicol (ஆடூஉ அறிசொல்).
- Submission should not exceed 10 pages in length (typed double-spaced, with one inch margin).
- The author's biography in brief including qualifications, special field of research and e-mail address should be given.
- The author should submit the paper via e-mail (iits@tn.nic.in) to the chief editor at International Institute of Tamil Studies.
- Authors of papers selected for submission will be notified by e-mail.

**Prof. Dr. B. Raja**
Associate Editor
e-mail: kalaikhoraja@gmail.com

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| சிதம்பர சபாநாத புராணம் | 80.00 |
| ஓங்கார விளக்கம் | 150.00 |
| திருப்பெருந்துறைப் புராணம் | 130.00 |
| திருவருட்பா இங்கித மாலை | 70.00 |
| சிவப்பிரகாச சுவாமிகள் | 100.00 |
| ஸ்ரீரங்கர் மகத்துவம் | 50.00 |
| திருவரங்கக் கலம்பகம் | 30.00 |
| திருவாட்போக்கிப் புராணம் | 150.00 |
| அகம்புற ஆராய்ச்சி விளக்கம் | 250.00 |
| கைவல்லிய நவநீதம் | 200.00 |
| வசனாலங்கார தீபம் | 200.00 |
| தைலவருக்கச் சுருக்கம் | 150.00 |
| சைவ பூஷண சந்திரிகை | 140.00 |
| வேதாந்த சூளாமணி | 150.00 |
| திராவிடப் பிரகாசிகை | 150.00 |
| வாசுதேவனமனனம் என்று வழங்கும் விவேகசாரம் | 220.00 |
| ஸ்ரீ பாலபோதம் | 220.00 |
| தேவாந்தப் பிரதீபம் | 250.00 |
| விசுவபிரம் புராணம் | 180.00 |
| பிரபந்தத் திரட்டு திருக்குதிரிசிய விவேகம் | 250.00 |
| மூலமும் உரையும் | 200.00 |
| நன்னெறி பதவுரை | 40.00 |
| நந்தனாரேலப் பாட்டு | 30.00 |
| ஸ்ரீ முருகானந்த சுவாமிகள் | 20.00 |
| Tamil Culture Part I | 250.00 |
| Tamil Culture Part II | 250.00 |
| Tamil Culture Part III | 250.00 |
| Tamil Culture Part IV | 250.00 |
| Tamil Culture Part V | 250.00 |
| Tamil Culture Part VI | 250.00 |
| Tamil Culture Part VII | 300.00 |
| Tamil Culture Part VIII | 250.00 |
| Tamil Culture Part IX | 300.00 |
| Tamil Culture Part X | 300.00 |
| Tamil Culture Part XI | 250.00 |




Edited & Published by the Director of International Institute of Tamil Studies, Chennai - 600 113 and
Printed by Sri Saravana Printers, Chennai - 600 005. Cell : 9003545197 E-mail : srisaravanaprinters2014@gmail.com